ஓம்

பரப்பிரஹ்மணே

ஔவைப்பிராட்டியார்

திருவாய்மலர்ந்தருளிய

# ஆத்திசூடி மூலமும்,

திருத்துருத்தி - இந்திரபீடம்,

கரபாத்திர சுவாமிகளாதீனத்து

ஓர் அன்பர்

இயற்றிய

பாகியார்த்தமும், ஆந்தரார்த்தமும்.

இவை, சென்னை ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல்

தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீமத். கோ. வடிவேலு செட்டியார் அவர்களால்

பார்வையிடப்பட்டு,

ஸ்ரீமத். ராவ. ஷ்ராமலிங்க செட்டியார் அவர்களால்

சென்னை அமரிகன் டைமெண்டு அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

ஓம்

தத் ஸத்.

பரப்பிரஹ்மணே நம:.

# முகவுரை.

எல்லாம் வல்ல விறைவன் நம்மனோர் சர்வதுக்க நிவிர்த்தி பரமாநந்தப் பிராப்தி வடிவ வீடு பெறுமாறு திருவாய் மலர்ந்தருளிய வேதத்தை முதனூலாகக்கொண்டு வெளிப்பட்டவை ஸ்மிருதி புராணேதிகாச முதலியனவாம். இவ்விரண்டையும் முதனூலாகவும் வழி நூலாகவுங்கொண்டு தேச பாஷைகளில் வெளிப்பட்ட நூல்க ளெண்ணிறந்தனவாம். அவ்வெண்ணிறந்த நூல்களுள், ஞானத்தாயாகிய ஔவைப் பிராட்டியார் அருளிச் செய்த ஆத்திசூடி என்பது மொன்றாம். அது நற்றமிழ்ப்பாஷைக்கண் ஒப்புயர் வில்லாது விளங்குவதென்பது பண்டிதர் முதல் பாமரரீறு யுள்ள யாவரும் செவ்வனே யறிந்த விஷயமாம். அது வேதார்த்தத்தை "அறஞ்செய விரும்பு" என்றற் றொடக்கத்தனவாக விதிமுகமாகவும், "இயல்வது கரவேல்" என்றற் றொடக்கத்தனவாக மறை (விலக்கு) முகமாகவும் கூறுவதென்பது பண்டிதரியாவரு மறிந்த தொன்றாம். புருஷார்த்தத்தை விரும்பு மக்களியாவர்க்கும் கற்பகத்தருப்போ லிருத்தல்பற்றி இது தமிழ்மக்க ளியாவராலும் படிக்கப்பட்டு வருகின்றது. இதற்குரை பல விருப்பினும் அவையாவு மதனது வெளிப்படைப் பொருளையே விளக்குவதன்றிக் குறிப்புப் பொருளை விளக்காமையின், அக்குறையை நிவிர்த்தித்தற்பொருட்டு இவ்வாத்திசூடிக்குச் செவ்விய வெளிப்படைப் பொருளுடன் குறிப்புப் பொருளும் தக்க பிரமாணத்துட னெழுதப்பட்டிருக்கின்றது.

அத்துறை வாக்கியம் நூற்றெட்டாயும் பிரஹ்மார்ச்சனைக்குண அடங்கியிருந்த வாக்கியம் நூற்றெட்டாயுமிருத்தலின், அந்நூற் றத்திரண் டொன்றற்கு மொவ்வொன்றிலும் பிரஹ்மார்ச்சனைக் குண அடங்கியதாக வாக்கியம் நூற்றெட்டின் முறையாக வமைக் கப்படுத்தப்பட்டிருக்கின்றன. வியஞ்சகமி (குறிப்புப் பொருளி) ன்றியல் நூல் வழியில்லா தெய்ப்பேபோல்வதென்று அலங்கார நூலார் கூறுதலை சிறிது மயக்குதலின், இதற்குக் குறிப்புரை யெழுதியது இணையில்லையாத தென்பது அன்பர்களுக்கு நன்கு விளங்கும்.

வெளிப்படைப் பொருள் பாவியார்த்த மென்பதும், உள்ளுறைப் பொருள் அந்தரார்த்த மென்பதும் பிரசித்தமானவை. இவ்வாத்திகத்தின் உள்ளுறைப்பொருள் ஒவ்வொன்றும் வேதாந்தத்தின் பரமதாத்பரியமாமென்பது அங்காங்குக் காட்டிய பிரமாணங்களால் நன்கு விளங்கும். பாவியார்த்தத்திற்குத் திருக்குறள் சத்தர்ப்பத்திரிகையின் மேற்கோள் பிரமாணமாகக் காட்டப்பட்டிருக்கின்றது: காட்டிய பிரமாணம் ஒவ்வொன்றிற்கும் தக்கவாறு உரையுமெழுதப்பட்டிருக்கின்றது.

இந்நூலின் விஷயம் அளவிடமுடியாத கோசரமாம்; ஆயினும், ஸ்ரீ சற்குருநாதன் அனுக்கிரகத்தினாலும், பரமசொரூபமே தானாக விளங்கும் ஸ்ரீ குகப்பெருமானது கிருபையினாலும், தமியேனது சிற்றறிவிற் கெட்டியவளவாக இவ்விருவகை யுரையு மெழுதப்பட்டன.

இந்நூலை யெல்லாம் வல்ல இறைவன் என்றும் நிலைபெறு கருணை புரிவாராக

# இரண்டாம் பதிப்பின் முகவுரை

இப்புத்தகத்தின் முதற்பதிப்புகள் செலவழிந்து போயினமையின் இது கிடைப்பது அரிதாய் விட்டது. பல முமுட்சுக்கள் இதனை யச்சிட்டு வெளியாக்க வேண்டுமென்று பன்முறை கேட்டுக்கொண்டமையால், எல்லாம் வல்ல இறைவனது கருணையினால், முன் பதிப்புகளை நன்றாய்ப் பரிசோதித்து இதனை யச்சிட்டு வெளியாக்கினேன். தவறிருப்பின் உலகம் பொறுக்க.

இங்ஙனம்,

ஓரன்பன்.

ஓம்

ஓம் தத் ஸத்.

பரப்பிரம்மணே நமஃ

# நிர்க்குண அஷ்டோத்திரம்.

ஓம் ஞானஸ்வரூபாய நமஃ 1
ஓம் ஆநந்தஸ்வரூபாய நமஃ 2
ஓம் ஆத்மஸ்வரூபாய நமஃ 3
ஓம் கூடஸ்தாய நமஃ 4
ஓம் அகண்டாய நமஃ 5
ஓம் அபரிச்சிந்நாய நமஃ 6
ஓம் ஆதியே நமஃ 7
ஓம் அநாதியே நமஃ 8
ஓம் காரணாய நமஃ 9
ஓம் அகாரணாய நமஃ 10
ஓம் அஹேயாய நமஃ 11
ஓம் அகர்த்தாய நமஃ 12
ஓம் அகர்மணாய நமஃ 13
ஓம் அக்ரோதாய நமஃ 14
ஓம் அவ்யாகிர்தாய நமஃ 15
ஓம் அவாங்மநோகோசராய நமஃ
ஓம் அசங்காய நமஃ 17
ஓம் அசரீராய நமஃ 18
ஓம் அக்ஷராய நமஃ 19
ஓம் அசலாய நமஃ 20
ஓம் அச்சுதாய நமஃ 21
ஓம் அசம்சாரியாய நமஃ 22
ஓம் அணுவே நமஃ 23
ஓம் ஸ்தாணுவே நமஃ 24
ஓம் அத்வைதாய நமஃ 25
ஓம் அநந்தாய நமஃ 26
ஓம் அநாவிர்த்தாய நமஃ 27
ஓம் அநாதிமுக்தாய நமஃ 28
ஓம் அநுபாதேயாய நமஃ 29
ஓம் எகஸ்வரூபாய நமஃ 30
ஓம் அநேகஸ்வரூபாய நமஃ 31
ஓம் அபரோக்ஷாய நமஃ 32
ஓம் அபயாய நமஃ 33
ஓம் அபேதாய நமஃ 34
ஓம் அப்ரவிர்த்தாய நமஃ 35
ஓம் அப்ராணாய நமஃ 36
ஓம் அப்ரமேயாய நமஃ 37
ஓம் அபோக்தாய நமஃ 38
ஓம் அமநஸாய நமஃ 39
ஓம் அமிர்தாய நமஃ 40
ஓம் அலோபநாய நமஃ 41
ஓம் உக்நந்தாய நமஃ 42
ஓம் எகாத்மநே நமஃ 43
ஓம் சர்வாத்மநே நமஃ 44
ஓம் சர்வக்ஞாய நமஃ 45
ஓம் சர்வகதாய நமஃ 46

ஓம் சர்வாகாராய நமஃ 47
ஓம் சர்வாபாவாய நமஃ 48
ஓம் சர்வகாரணாய நமஃ 49
ஓம் சர்வசமநாய நமஃ 50
ஓம் சர்வாதாராய நமஃ 51
ஓம் சர்வாதிஷ்டாய நமஃ 52
ஓம் சந்நிதயாய நமஃ 53
ஓம் சத்தியாய நமஃ 54
ஓம் சச்சிதாநந்தாய நமஃ 55
ஓம் சாக்ஷியாய நமஃ 56
ஓம் சாந்தாய நமஃ 57
ஓம் சின்மாத்ராய நமஃ 58
ஓம் சிவாய நமஃ 59
ஓம் சூக்யாய நமஃ 60
ஓம் மகாசூக்யாய நமஃ 61
ஓம் ஸ்வயம்ப்ரகாசாய நமஃ 62
ஓம் ஸ்வப்ரகாசாய நமஃ 63
ஓம் சுத்தாய நமஃ 64
ஓம் புத்தாய நமஃ 65
ஓம் ஸ்வயம்புவே நமஃ 66
ஓம் க்ஷேத்திரக்ஞாய நமஃ 67
ஓம் திர்க்காய நமஃ 68
ஓம் திர்ஸ்யாய நமஃ 69
ஓம் நாநாரூபாய நமஃ 70
ஓம் நிர்விகாராய நமஃ 71
ஓம் நிஷ்க்ரியாய நமஃ 72
ஓம் நிர்ச்சம்பந்தாய நமஃ 73
ஓம் நிர்லேபாய நமஃ 74
ஓம் நிருபாதிகாய நமஃ 75
ஓம் நிர்மலாய நமஃ 76
ஓம் நிராமயவாய நமஃ 77
ஓம் நிர்விகல்பாய நமஃ 78
ஓம் நிர்குணாய நமஃ 79
ஓம் நிராகாராய நமஃ 80
ஓம் நிரீஸ்வராய நமஃ 81
ஓம் நிரிந்திராய நமஃ 82
ஓம் நிர்ஜீவாய நமஃ 83
ஓம் நிஷ்ப்ரகிர்தயே நமஃ 84
ஓம் நிர்விசேஷாய நமஃ 85
ஓம் நிஷ்ப்ரபஞ்சாய நமஃ 86
ஓம் நிரஞ்சநாய நமஃ 87
ஓம் நித்யாய நமஃ 88
ஓம் நித்யாநந்தாய நமஃ 89
ஓம் நித்யமுக்தாய நமஃ 90
ஓம் நிராதாராய நமஃ 91
ஓம் நிர்விஷயாய நமஃ 92
ஓம் நிர்த்தோஷாய நமஃ 93
ஓம் துரியாய நமஃ 94
ஓம் துரியாதீதாய நமஃ 95
ஓம் பரமார்த்தாய நமஃ 96
ஓம் பரப்பிரஹ்மாய நமஃ 97
ஓம் பிரத்தியக்ஷாய நமஃ 98
ஓம் புராணாய நமஃ 99
ஓம் புராதநாய நமஃ 100
ஓம் பூர்ணாய நமஃ 101
ஓம் மகத்தாய நமஃ 102
ஓம் முக்தாய நமஃ 103
ஓம் வஸ்துவாய நமஃ 104
ஓம் விபுக்தாய நமஃ 105
ஓம் அதோமுகாய நமஃ 106
ஓம் ஸ்ரீ சற்குருவே நமஃ 107
ஓம் சம்பூர்ண சமாப்தாஃ 108

ஓம்

பரப்பிரமணே நம:

# இந்நூற்கு மேற்கோளாகக் காட்டிய நூல்களின் பெயர்.

1. சுயம்பிரகாசட்டு.
2. சிவஞான வள்ளலார்.
3. திருக்குறள்.
4. அவிரோத உந்தியார்.
5. ரிபுகீதை.
6. விவேக சூடாமணி.
7. திருவாசகம்.
8. ஞானவாசிட்டம்.
9. தாயுமானவர்.
10. பிரமகீதை.
11. கைவல்லிய நவநீதம்.
12. மகாவாக்கியம்.
13. வேதாந்த சூளாமணி.
14. பெருந்திரட்டு.
15. மெய்ஞ்ஞான விளக்கம்.
16. சுக்கிரநீதி.
17. சொரூபசாரம்.
18. நல்வழி.
19. பிரபுலிங்கலீலை.
20. வைராக்கிய சதகம்.
21. ஞானசார வெண்பா.
22. தத்துவத் திரவலி.
23. பகவற்கீதை.
24. உபதேசவுண்மை.
25. அட்டானுபூதி.
26. அத்துவித உண்மை.
27. சிவானந்தமாலை.
28. தேவிகாலோத்தரம்.
29. மெய்க்குருவினை.
30. வைராக்கிய தீபம்.
31. திருப்போரூர் சந்நிதிமுறை.
32. திருமந்திரம்.
33. பஞ்சதசி விளக்கம்.
34. திருக்குத்திருசிய விவேகம்.
35. திருவருட்பா.
36. சூதசங்கிதை.
37. நன்னெறி.
38. தேவாரம்.
39. ஒழிவிலொடுக்கம்.
40. தத்துவப்பிரகாசிகை.
41. போதாமிர்தம்.
42. உபநிடதம்.
43. பட்டினத்தார்.
44. மெய்ஞ்ஞான வெண்பா.
45. சிவஞான தீபம்.
46. போதசித்தாகமம்.
47. ஞானசாரதீப மணமாலை.
48. பாசுதுறை.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 2 | 10 | கரித்துள்ள | கரித்து |
| 4 | 21 | பொருக்கு நீக்க வொட்டாது | நீக்க வொட்டாது பொருக்கு |
| 7 | 25 | எதிர்மறைப | எதிர்மறையி |
| 10 | 20 | பாவனைமூடு | பாவனையைமூடு |
| 17 | 1 | சீர்க நிலைக்களைக | சீர்வாக நிலைக்களையக |
| 19 | 5 | க்கை | க்கில் |
| 25 | 17 | சப்புக்டைக்ட | சப்புக்தயாகிய |
| 37 | 6 | விளகேசுவன் | விளகேசுவர் |
| 42 | 1 | கைகலலியமகொடும் | கைகலல்லிய கொடும் |
| 48 | 7 | அப்பவித்து | அப்பவித்த |
| 51 | 2 | ஒரிடம்விட் | ஒரிடம்விட் |
| 51 | 6 | விருக்கபடி | விருக்குபடி |
| 51 | 14 | துவைக்துவக்குங்களை | துவைக்துவங்களை |
| 58 | 2 | ருபத்தி லயயாகுமோ | ருபத்தில் லயமாகுமோ |
| 68 | 15 | ஸ்திரியன் | ஸ்திரீயன் |
| 76 | 2 | என்று பா | என்று |
| 78 | 16 | ஆசைப் படப்பட | ஆசை படப்பட |
| 89 | 5 | அக்கிலையை | அக்கிலையில் |
| 103 | 14 | ஒருமை | ஒருமை |
| 112 | 9 | கென்முளைப்போல் | கென்முளைபோல் |
| 125 | 6 | ளாநன்முயல்வால் | ளாற் நன்முயல்வால் |
| 131 | 15 | கேபகேசல் - | கூடிநல் - |
| 133 | 24 | கனவிற் சுழுத்தி | கனவிற் சுழுத்தி |

# ஆத்திசூடி வாக்கிய அட்டவணை.


| எண். | | பக்கம். |
|---|---|---|
| 1. | அறஞ்செய விரும்பு. | 3 |
| 2. | ஆறுவது சினம். | 4 |
| 3. | இயல்வது கரவேல். | 5 |
| 4. | ஈவது விலக்கேல். | 6 |
| 5. | உடையது விளம்பேல். | 8 |
| 6. | ஊக்கமது கைவிடேல். | 9 |
| 7. | எண்ணெழுத் திகழேல். | 10 |
| 8. | ஏற்ப திகழ்ச்சி. | 12 |
| 9. | ஐய மிட்டுண். | 13 |
| 10. | ஒப்புர வொழுகு. | 15 |
| 11. | ஓதுவ தொழியேல். | 16 |
| 12. | ஔவியம் பேசேல். | 17 |
| 13. | அஃகஞ் சுருக்கேல். | 18 |
| 14 | கண்டொன்று சொல்லேல். | 19 |
| 15. | ஙப்போல் வளை. | 21 |
| 16. | சனி நீராடு. | 22 |
| 17. | ஞயம்பட வுரை. | 23 |
| 18. | இடம்பட வீடெடேல். | 25 |
| 19. | இணக்கமறிந் திணங்கு. | 26 |
| 20. | தந்தைதாய்ப் பேண். | 27 |
| 21. | நன்றி மறவேல். | 29 |
| 22. | பருவத்தே பயிர்செய். | 30 |
| 23. | மண்பறித் துண்ணேல். | 31 |
| 24. | இயல்பலாதன செயேல். | 32 |
| 25. | அரவ மாட்டேல். | 33 |
| 26. | இலவம் பஞ்சிற் றுயில். | 35 |
| 27. | வஞ்சகம் பேசேல். | 36 |
| 28. | அழகலாதன செயேல். | 37 |

| எண். | | பக்கம். |
|---|---|---|
| 29. | இளமையிற் கல். | 38 |
| 30. | அறனை மறவேல். | 40 |
| 31. | அனந்த லாடேல். | 41 |
| 32. | கடிவது மற. | 42 |
| 33. | காப்பது விரதம். | 44 |
| 34. | கிழமைப் படவாழ். | 46 |
| 35. | கீழ்மை யகற்று. | 47 |
| 36. | குணமது கைவிடேல். | 49 |
| 37. | கூடிப் பிரியேல். | 50 |
| 38. | கெடுப்ப தொழி. | 51 |
| 39. | கேள்வி முயல். | 52 |
| 40. | கைவினை கரவேல். | 54 |
| 41. | கொள்ளை விரும்பேல். | 55 |
| 42. | கோதாட் டொழி. | 57 |
| 43. | சக்கர நெறிநில். | 58 |
| 44. | சான்றோ ரினத்திரு. | 59 |
| 45. | சித்திரம் பேசேல். | 61 |
| 46. | சீர்மை மறவேல். | 62 |
| 47. | சுளிக்கச் சொல்லேல். | 63 |
| 48. | சூது விரும்பேல். | 64 |
| 49. | செய்வன திருந்தச்செய். | 66 |
| 50. | சேரிட மறிந்துசேர். | 67 |
| 51. | சையெனத் திரியேல். | 68 |
| 52. | சொற்சோர்வு படேல். | 70 |
| 53. | சோம்பித் திரியேல். | 71 |
| 54. | தக்கோ னெனத்திரி. | 72 |
| 55. | தானமது விரும்பு. | 74 |
| 56. | திருமாலுக் கடிமைசெய். | 75 |
| 57. | தீவினை யகற்று. | 76 |
| 58. | துன்பத்திற் கிடங்கொடேல். | 78 |
| 59. | தூக்கி வினைசெய். | 79 |

| எண். | | பக்கம். |
|---|---|---|
| 60. | [illegible] | 80 |
| 61. | [illegible] | 81 |
| 62. | [illegible] | 82 |
| 63. | [illegible] | 84 |
| 64. | [illegible] | 85 |
| 65. | [illegible] | 86 |
| 66. | [illegible] | 87 |
| 67. | [illegible] | 88 |
| 68. | [illegible] | 89 |
| 69. | [illegible] | 91 |
| 70. | [illegible] | 93 |
| 71. | [illegible] | 94 |
| 72. | [illegible] | 95 |
| 73. | [illegible] | 96 |
| 74. | [illegible] | 97 |
| 75. | [illegible] | 98 |
| 76. | [illegible] | 99 |
| 77. | [illegible] | 100 |
| 78. | [illegible] | 102 |
| 79. | [illegible] | 103 |
| 80. | [illegible]ப் போற்றிவாழ். | 104 |
| 81. | [illegible] | 105 |
| 82. | [illegible] | 107 |
| 83. | [illegible] | 108 |
| 84. | [illegible] | 110 |
| 85. | பொருட்டுணைப் போற்றிவாழ். | 111 |
| 86. | [illegible] | 112 |
| 87. | [illegible] | 114 |
| 88. | [illegible] | 116 |
| 89. | [illegible] | 117 |
| 90. | [illegible] | 118 |

| எண். | | பக்கம். |
|---|---|---|
| 91. | முனைமுகத்து நில்லேல். | 120 |
| 92. | மூர்க்கரோ டிணங்கேல். | 121 |
| 93. | மெல்லியலாள் தோள்சேர். | 123 |
| 94. | மேன்மக்கள் சொற்கேள். | 124 |
| 95. | மைவிழியார் மனையகல். | 126 |
| 96. | மொழிவ தறமொழி. | 127 |
| 97. | மோகத்தை முனி. | 128 |
| 98. | வல்லமை பேசேல். | 129 |
| 99. | வாதுமுற் கூறேல். | 131 |
| 100. | வித்தை விரும்பு. | 132 |
| 101. | வீடுபெற நில். | 134 |
| 102. | உத்தமனா யிரு. | 135 |
| 103. | ஊருடன் கூடிவாழ். | 136 |
| 104. | வெட்டெனப் பேசேல். | 137 |
| 105. | வேண்டி வினைசெயேல். | 138 |
| 106. | வைகறைத் துயிலெழு. | 139 |
| 107. | ஒன்னாரைத் தேறேல். | 141 |
| 108. | ஓரஞ் சொல்லேல். | 142 |

சிவ

தத் ஸத்.

பரப்பிரஹ்மணே நம:

## ஸ்ரீ சற்குருநாதன் துணை.

### காப்பு.

சகளிதா ரங்கமே அருமறை மூன்றதாய்க் கங்கைதா னைங்கரஞ் சக்தியஞ்சதாய், சிச்சிதா னாதரு ஞான மேயமே சின்விழிக் கோமபோன்ற நீண்ட சத்தியாய்க், குச்சிதாஞ் சிவஙீ சாதிகால் லாயதாய்க் கூறிச்சை யாதியே தும்பக் கலமதா, புச்சிதாஞ் செவி யாதே பொரிரு மையபா லோங்கிய கணபதி புள்ளமென் னுள் ளமே. (1)

மெய்யுடையா ரையமார்மேல் விருப்புடையான் கருப்பூர விளக் கும் போலவன், பொய்யுடைய வருள்போதப் பொருளுடையா னருளுடையான் பொறிமையைந் தாலு, மையுடைய மனத்தாலு மெய்க் குடையார் மதமதகளைத்தா மதங்க ளாக்கும், கையுடைய முகமு டையா னகமுடையான் றனைக்கருத்தி லிருத்தல் செய்வாம். (2)

அம்பிகா சகித குருசி யாகத்த நடனஞ் செய்து
நம்பினோர் துன்ப நீக்கி ரக்ஷக நல்கா னின்ற
வெம்பிரா னான ஈச னிருபதக் கமலந் தன்னை
நம்புவார் துன்ப நீங்கி ரக்ஷக மடைவர் தாமே. (3)

## சொரூப ஸ்துதி.

உலகமுதற் பொருளையும்பர்க் குணர்வரிதாம் பொருளை யோரியமேலா காசத்தி லுச்சிற்றுட் பொருளைப், பலகலையின் பொருண்முடிவின் முடிவான பொருளைப் பற்றறப்பற் றியபெரியோர் பரவியவான் பொருளை, யலைதிவலை நுரை கடலி னுதித்தொடுங்கு மாபோ லகிலாண்ட முதித்தொடுங்க முதன்மூலப் பொருளை, யில கிபகர் குருநாதி பானுகும் பொருளை யெங்குமாம் பரம்பொருளை யாமு வணங்குதுமே. (1)

ஆக்கைபெறும் புழுக்கூம்பை யணைக்கணையாப் பொருளை யருமொளியைப் பாபத் துக் கப்புறமா மறிவை, நீக்கமற வுயிர் முளைத்து மிடமறவெங் கெங்கு நிறைந்துநின்ற முழுமுதலை நினைவிலெழுஞ் சுடரைப், பாக்கியங்கள் செய்தனைக் தவக்குறைகள் முடிக்கும் பழவடியார் தமக்குதவு பகத்துணர்தற் பதத்தை, வாக்கு மன விகற்பத்தா லளவுபடா வொன்றை மாசற்ற வெறுவெளியை மனவெளியி லடைப்பாம். (2)

சாத்தியத்தா லளவுபடாத் தனிமுதலைப் பராபரத்தைத் தானே தானு, மாத்திரமாய் நிற்பதனை வாய்விட்டுப் பேசாத மௌன வைப்பைக், காத்திரவா தனைகடந்த வறிஞருக்குப் பலமீயுங் கற்பகத்தைப், பார்த்தவிடந் தொறுநிகழும் பரமாக சியப்பொருளைப் பணிதல் செய்வாம். (3)

பொன்னுல கத்தினிற் புவியி லத்தநந்
தென்னுடை யுட்புறத் திலங்கு கின்றது
மன்னுயிர் சோதியே வடிவ மியாவுமாய்த்
தன்னுவ கப்பொரு டொழுதி றைஞ்சுவாம். (4)

இரவியு மதியும் வானும் வாயுவு மனலு மப்பு
முரவிய மண்ணு மற்றை யுணர்பவன் றானு மாகிப்

பாவியே னகமென்னுங் காயமன் றாடுகின்ற
புனை மனை யிருந்து தெளிவாகு மானியின்னை வணங்கி செய்வாம். (5)

கண்முதற் பலவுங் கண்ணக் கரணங்கள் விளங்கு மெக்காற்
றண்மதி யருக்க னங்கி தாரகை விளங்கு மெப்பாலோ
விண்முதற் பூதமெல்லாம் விளங்கிடு மெக்காலத்து
முண்மையைப் பிறப்பி சாக கெள்ளியின்னை யுளத்துள் வைப்பாம். (6)

பொறியிடையு னோர் பொருளிலா வருளைத் தானே
யேற்றியுங்கு வருக விடையினை வந்து சேர்த்து
மாற்றிடு மெய்ஞ்ஞான் விளங்கில் பாசமெலா மாற்றிநின் றன்றே
தோற்றிய வைந்து வாசகன் றுணையாம் தொழுதல் செய்வாம். (7)

கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா றங்கமுதற் கற்ற கேள்வி, வல்லார்க ணால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக் கப்பாலாய், எல்லாமா யல்லதுமா யிருந்ததனை யிருந்தபடி யிருந்து காட்டிச், சொல்லாமற் சொன்னவரை நினையாமல் நினைந்து பவத்தொடக்கை வெல்வாம். (8)

சத்தமுறை தாங்க மெல்லாஞ் சொல்லிய பொருள்கட் கெல்லை
மெத்தவுங் கருணை யாலே மெய்ம்மைசேர் பாடி யாதி
தத்துவ நூல்கள் கொண்டே தடையறத் தெரிய வைத்த
வுத்தமச் சகல பாசா ஹுண்மையை யுளத்துள் வைப்பாம். (9)

---

## குருஸ்துதி.

---

இருவினைக ளொத்திறக்குந் தன்மையறியா தனுபோ கங்களையும் பொருளென்றிக் கெளனையறியா மையினுள், கருவிடைப்புக் கின்பதுன் பக் கடலிடையே சுழன்று கலக்கப் பழமைவினைக் கருணையிற்

யகவே, கருவினைக ளறநோக்கி யாணவமே போக்கி யகமகிழ்மெய் ஞானத் திருக்குவெலா மறிவுகொடே ரிக்கிப், பருவமதிற் பக்குவாக்கிக் கற் பனைகள் யாவும் பாழாக்கிய காருக்கும் பகுருவைப் பணிவாம். (1)

சாளிவன் றனாவனென் றிற வின்றிப பேருமுன்ற சாய மேனற்கு. சான ரு நிலைபெறுவே தாக்குமைய சாக்கயிது தாமனை தாஞ். மோனமெ நாம யிருமெனானான் மனைறபிறைய நடைமொழி முதற் காட்டு, யோனா துர தேகிகனே சாவகத்தும் பாவகத்து சவிற்ற வாம். (2)

நற்றவத்தோர் பாவாறுங் காக்கின்ற காலாறு
மற்றவரா லின்புறுங் காலாறு —மெய்க்குருவா
தாளேத்த லாறுஞ் சரணேத்த லாறுமருட்
கோளேத்த லாறுங் கரு. (3)

காயத்து மெய்க்குயவன் றனைவர் காண்டருள்
தாயவன் சரணமே சமயத்தை வென்றிலே
வாய்த்துதி செய்கர மலர்க ளேத்தொழு
நேயமோ டறுதினை யினைக நெஞ்சமே. (4)

குருவே திருமாலாய்க் கோகனகத் தானாய்
குருவே புரையிறந்த கோவாய் —குருவேயிக
மெல்லாமா யல்லவுமா மெய்யகத்தே நின்றருளும்
வல்லாள னந்த மதி. (5)

உள்ளத் திருந்து மொளிக்கான் பரஞ்சுவன்
கள்ளத் தனைத் தவிர்த்துக் காட்டினான் —வள்ள
லருளான கோலமே யக்கோலங் காட்டுங்
குருவான கோலமே கூறு. (6)

அதுவது வாயினா [illegible] நயவாக வில்லையா
கதுவதுவா [illegible] னாறறிவிக தனதி—யதுவதுவா
தானலைா பல [illegible] லைலெனான் றனிசின்ற
தானதிவா [illegible] னொவேகான் றனா. (7)

உ [illegible] யினை [illegible] கருணைமேனி சாக்கிய
படிகீதா [illegible] பாவைன—கொடிபோனான்
சொன்னது சிமையபபனவி விகைகளை விடளிக்க
[illegible] (8)

[illegible] கஞானகு [illegible] ரிய சித்திமுத்தி
[illegible]—போனகுரு
[illegible] கொலை [illegible] கருணைமே
[illegible] முனை [illegible] (9)

ஞானசா திரத் தேசா குரு காணரிய சித்திமுத்தி
தானா [illegible] குருமோ மழைத்தரு—மானமமாகி
தாமெயனையவ வசமென்னைத் தந்தகுரு வென்சிந்தை
கோயிலவனை வாழுங் குரு (10)

பாச மையமையுந் தனித்தனிப் பரித்திட சிகலி
மோச யாகிய வறிவுரு வெனக் காட்டிப்
பேசு மேழ்மையைப் பிறப்பனக் கிலையெனப் பேசித்
தா [illegible] கிய [illegible] காசனைத் தொழுவாம். (11)

விமல னெனுமுள மேனாத காட்சியே
அமல னேர்த்தி யானந்த ரூபனே
கமல மேயக கதிரவன் போலுனை
நமல மேயறி வானந்த ரூபனே. (12)

தூக்கையுல விந்திரியம் யல்லவகக் கணமல
தேக்குபிராணனுமல்ல சிவனல சாட்சியல
போக்குவரவில்லாத பூரணமே யென்றருளு
மாக்குருவன் திருத்தாளை மறவாமல் வணங்குவாம். (13)

எவருடை யருளால் யானே யெந்தமாம் பிரமமென்பார்
சுவருடைப் புவன மெல்லாஞ் சுற்பித மென்று நீக்கு
சுவரிடை வெளிபோல் யானே சொரூப சுபாவ மானேன்
அவருடைப் பதும பாத மனுதினம் பணிகின்றேனே. (14)

என்னுடை மனது புத்தி சித்திய சரீ மெல்லாம
என்னுடை யறிவி னாலே பிரவிமுன் னிமைமே பாக்கி
என்னுடை நீயு நானு மேகமென் னைக்கியஞ் செய்ய
என்னுடைக் குருவாய்த் தோன்ற நீசனை யிறைஞ்சி னேனே. (15)

தந்தை தாயரே யென்னுயிர்த் துணையுஞ் சஞ்சல மறுதீரக்க
வந்த தேசிக வடிவுநீ யுனையலான் மற்றொரு துணைகாணேன்
அந்த மாதியு மளப்பருஞ் சோதியே யாதியே யடியார்தம்
சிந்தை மேவிய தாயுமா னவனெனுஞ் சிரகிரிப் பெருமானே. ()

ஆயுமாமறை முடிவினி லாகமச் சிரத்தி
லேயுமத்துவைத இணையிலாச் சுகத்தினை யெளிதச்
சேயுமாறருள் சுரந்தெமக் குதவிய கருணைத்
தாயுமானசற் குருபரன் இருசரண சரணே. (17)

வடிவிலா மாயையால் வந்த பவத்திற்கு
முடிவிலா முத்திப் பொருட்கு—மடியோரி
னீண்ட பெருமா னிகனமறப் போதமளித்
தாண்ட பெருமா னடி. (18)

A

குருலிங்க சங்கமமாக் கொண்ட திருமேனி
கருவொன்று மேனியர்பார் காட்டா—திருவொன்று
கண்டவர்க்கே யானந்தங் கண்டுகொள வாயலது
கொண்டவர்க்கு மென்னகிடைக் கும். (19)

என்றென்பா ரொன்றிரண் டென்க லொரிரண் டென்பா ரென்க
ரன்றென்பார் நன்றிர டென்க நவையென்பார் நவையே யென்க
வின்றென்பா ரென்க வன்றி யுண்டென்பா ருண்டே யென்க
வன்றிதா மென்றுரு முத்தி யடியனேற் களித்தா னுசான். (20)

ஒன்றா னுருவுரு முமைசமமா ரூறு மாகிச் சகசமாய்ப்
பின்னை யபினை யெழுஞ்சத்தி பிரியா திருக்கும் பமமா
மன்றா முணர்வுஞ் சுணர்வாகி யருவா யருவா யுபயமுமா
யென்று மிருந்த பாசிவத்தை நின்றேற் கண்டே னிறையோனே.()

மணியை விழுங்கிப் புனலைக் கனலை விழுங்கி வாயு தனைவிழுங்கி, விண்ணை விழுங்கி வெண்மதியை விழுங்கி வெய்யோன் றனைவிழுங்கி. மொண்ணை யமயா னனைவிழுங்கி முற்றும் விழுங்கிப் பரபலை, மென்னை விழுங்கி யிருந்ததனை நின்றேற் கண்டே னிறையோனே. (22)

காயனை யசாய னுக்கிக் கண்டனை யகண்ட னுக்கிப்
பேயனைப் பிரம மாக்கிப் பிறப்பிறப் பிலாமை யாக்கித்
தாயினு மினிய குருகி வந்தெனைத் தகைத்தாட் கொண்ட
துயசற் குருவை ...ன்னைத் தொழுதொழுங் களிது ணங்கும். (23)

ஆழ்ந்த கடற்றுன் பவக்கடலி லனைக காலம் புகலின்றிச், சூழ்ந்த கருனை யாமலைத்துத் துரியக் கரையிற் சேர்த்தாய்க்கு, வீழ்ந்தும் வீழ்ந்தும் பணிந்திறைஞ்சி வியந்து வியந்து மகிழ்க்கடலில். வாழ்ந்தேன் வாழ்ந்தேன் கைம்மாறு காணேன் வலியத் தடுத்தாய்க்கே. (24)

மும்மாயைக் கப்பால் முழுப்பாழுக் கப்புறத்தே
சும்மா விருக்கத் துரியங் கடந்தாலச்
செம்மா தனமளித்த சிவஞான தேசிகற்குக்
கைம்மாறு போதமலார் காணேன் கடையேனே. (25)

உண்ணாத சோறு முடுக்காத வத்திரமும்
பண்ணாத பாயும் படுக்காத நித்திரையும்
எண்ணா மனுவு மியம்பாத தோத்திரமுங்
கண்ணா லளித்தார்க்குக் கைம்மாறு காணேனே. (26)

தீராத வைம்பொறியுந் தீர்த்துச் சிவமாக்கிப்
போகாத வானந்தப் பிரவகண்மிசை வைத்தாருக்
காணாத வன்பா லகங்குழைந்து மெய்யரும்பிப்
பாராத தெண்டனிட்டுப் பத்திசெயக் கடவேனே. (27)

கல்லாலின் கீழிருந்த கண்ணுதலைப் போலாகிக்
கல்லா வுடலிற் கருணையொடு வந்தெனக்குச்
சொல்லாத சொல்லையொரு சொல்லா லுரைத்தார்க்குச்
சொல்லாத சொல்லானந் தோத்திரங்கள் செய்வேனே. (28)

தூயத் துரிசு மழல்விடமு மானமுந்
தூயத் திரிவு மறுத்தான் குருநாதன்
மெய்யன் றிருமேனி விமலன் றிருமேனி
மெய்யன் றிருமொழியே வேதந் திருமொழியே. (29)

வானே முதலாம் பூதங்க ளில்லை கரண வகுப்பில்லை
யானெப் பொறியு மைம்புலனு மில்லை யறியு மறிவில்லை
நானே றுடம்பின் வயத்தாலே யுன்னைத் தனியே லொன்றாக
நானே நீயென் றருள்செய்த ஞான குருவை வணங்குவாம். (30)

மண்ணு முருகு மனமுருகு மாயை யுருகு மாலுருகும்
பெண்ணு முருகு மாணுருகும் பேதா பேத வகையுருகும்
அண்ண லுருகு மிடத்தமர்ந்த ஆத்தா ளுருகு மரவணையான்
எண்ணி யுருகுங் குருநாதன் என்பா லுரைத்த வோர்மொழியே. ()

தருவுருவாகி மௌனியாய் மௌனக் கொள்கையை யுணர்வுருவை யருளுற்றர், சருவுருவாவ தெனக்கிலை யிந்தக் காயமோ பொய்யெனக் கண்டு, திருவுருவான ரூபவ நிலையுஞ் சேருமோ வாவலோ டெழுந்த அருவுருவாகி யல்லவாய்ச் சமய மளவிலா வானந்த வடிவே. (32)

செறிவாகு மலமற்று மாயை யற்றுத் திரிவிதமாங் கன்மமலத் திரளு மற்றுப், பிரிவாகுங் குணமற்றுக் குறியு மற்றுப் பேதாபேதங்களற்றுப் பேசசு மற்று. அறியாமை யறிவற்றுங் கனந்த கோடி யாதவர்போ லெழுகின்ற பரையு மற்றுக், குறியாத வானந்தக் கடலின்னைக் கும்பிட்டே னென்பிறவி பின்பட்டேனே. (33)

பொய்யாத புனன்மூழ்கிச் சாந்தமெனும் பொடிபூசிக் கருணைமணி பூணுதெஞ் ஞானறு, மையாத வுளமெல்லாம் மையானவிலாத நாமமுறு சவின்ற பேசீ, மையாறு மாருறுங் டககதிர்ன்ற வானந்தத் திகசன் னடிப்போதுக்கே. கொய்யாத மலர்க்கொண்டு கருசசித்தேத்திக் கும்பிட்டே னென்பிறவி பின்பட்டேனே. (34)

ஆகிலன்ன மயகோசந் தாண்டி யப்பா லழியாத பிராணமய கோசந் தாண்டி, மாசின்மனோ மயகோசந் தாண்டியென்று மாறுவிஞ் ஞானமய கோசந் தாண்டி, மாசமுறு மானந்த கோசந் தாண்டி ஞானவடி வாய்நின்ற சுடரை யன்னைக், கோசமெலா மற்ற சிவ கோகி யாகிக் கும்பிட்டே னென்பிறவி பின்பட்டேனே.(35)

தத்துவங்க ளாருறும் பின்னிட் டப்பாற் றத்துவா தீதமாந் தன்னைக் கண்டு, பற்றொன்று மில்லாத பரையைக் கண்டு பரிந்து பார்த் தன்னருளி யதிலொடுங்கி, வேற்றுமைவேறு மானந்த வுருவங் கண்டு விழையாமல் விழைந்தப்பால் வெளியைக் கண்டு, குற்றமெல்லா மொழிந்தங் குறவாய் நின்று குப்பிட்டே னென்பிறவி பின்பிட் டேனே. (36)

சத்துசித்தா னந்தமெனச் சாற்று மறைமுடிவை
யுத்தி பலவுபமா னத்தினொடு—அத்தனடி
போற்றிப் புகழ்ந்து புரிப்பாய் நெஞ்சகமே
நேர்புருடனாச் சொல்லால் வியந்து. (37)

நற்குணனை நித்தியனை நின்மலனை நிச்சலனைச்
சற்குருவே யானெனப் பாக்கியனை—மற்புதனை
வாக்குத் துதிக்க மனநினைக்க வென்சிரத்தி
லாக்கலவன் பொற்பதமே யாம். (38)

நன்றுக்குத் தீதிலா தாய் நடுமுடி யடியி லாதாய்
அன்றுட னின்றி லாதா யதுவிது வெனவொ ணாதாய்த்
தொன்றுதொட் டெமகட் காகத் தோன்றிய வுருவமொன்றே
என்றும்நாம் பரம் பரையா யிறைஞ்சிடுந் தெய்வ மாமே. (39)

அருவுரு வின்றி நின்ற ஆனந்த நாட்டா ளிக்குத்
திருவுருக் கொண்டு தோன்றித் தெரிசன மளித்துப் பின்னும்
கருவுரு வாரா வண்ணங் கருணையாற் கடைக்க ணூட்டிப்
பெருவரு வான வின்பப் பேற்றினை யளிக்கப் பெற்றோம். (40)

நினையலா லொன்று முண்டோ வுனக்கென வுருவ முண்டோ
வினையெலாம் நின்பா லீந்து தன்னருள் பெற்றார் மேனி
தனையெலா முனதாய்க் கொண்டு சகத்தினி லுலவி நின்றாய்
இனையலா ருக்கு நேரா யேதுமே கைம்மா றில்லை. (41)

உன்னுட னென்னையு மொன்றா யொற்றுமை யாகச் செய்த
தன்னரு ளனையுங் கூடத் தானினை யாத வண்ணம்
பண்ணவைத் திட்ட வென்றன் பண்பினை யெண்ணி நெஞ்சம்
தன்னுரு வினைமறந்து சகஜமாய் நின்ற தென்னே. (42)

மெய்ம்மையாக வாய்மை யனைவரில் மேலைத் தற்காதா வொன்றை
மெய்ம்மையாகக் கண்டிட் டவனாய் நீனாம மலையைய காக்க
மெய்ம்மையொடு வாய்மை யொன்றுதா னெழுந்தமைய தினியவல் வாக்க
மூய னொருர் பாக்கு யாவரிய கட்ட யாவார். (43)

ஆசையற வைப்பதற்கு யன்றி யொருவனே வேண்டு
ஆசையின் மயக்க மெல்லா மகற்றினே னுடைய வெல்லாம்
ஆசையின் கலக்க லடங்க வன்னவர்க் கருள் வேண்டு
ஆசையோ டருளு நீங்கி யருண்மையை யொழித்திட் டானே. (44)

என்பொருட் டேயுமாறு மனைமட லிசைத்திட்டாய் மெய்யா யென்றிக்
குன்பொருட் டேதுமான் றுனக்கொரு சிறு கைம்மா றேது
அன்பினா லுருக்கமொன் றருளுருத் திட்ட முன்ன தென்றே
முன்னமெப் பேறும் பூமிக்கு யோனெய் தாய். (45)

எப்பிறவன் றின்று புகலிடமாக பூண்டேன் செத்தியே
எவரிட மெனித்து வாசகப் பிணைவி லாப் பெருச் சாரம்
எப்பிறவன் கடைக்க ணுக்கப் பழவா னோனை நீக்க
லையவ னர்க்கி னிருந்த யாவரும் யானைந்த பாக்கியம் (46)

தூயபாத காட்டை ஞான வழுவல் ஞர் றகல்மதுப் பாமச
செய்யதா மரைகள் சூட்டித் திவ்விய மலர்க ளுக்க
மெய்யடி யானைக் கூடும் விவேகமும் மெய்ம்மை யல்லாப்
பொய்யடி யானைக் கூடாப் பக்குவங் கந்தாய் போற்றி. (47)

அற்புத மலைமேக விசித்திர வகண்டா கார
சிற்பர மேகாந்த ஞானா னந்த விம்ப
பொற்பரம் பிரகாச சுகங் கனிய துரியா தீத
தற்பர வனைத்தா னத்து சற்குரு நாதப் போற்றி. (48)

கண்ணொளி மறைக்குங் குணங்கெட்ட காரிருட் டறைப்பட் டழுங்குந்
திண்ணிய மலமாங் கட்டுக்குட் சிக்கிய சிறியன் றன்னை
கண்ணரு ஞானக் கைகொடுத் தென்முகன் முதலோ ரேத்தும்
தண்ணளி யாலெடுத்த சற்குரு நாதப் போற்றி. (49)

போசனை யாமுடலங் காட்டிப் பொறிபுலன் கரணங் காட்டி
ஆசையா குமிருள் காட்டி மெய்யுணர்ந் தருளுரு காட்டி
பேசரி தாமிலக்கைக் காட்டிக் கற்பூரந் தானேயக் காட்டிச்
சக்தியா னந்தக் காட்டிய சற்குரு நாதப் போற்றி. (50)

அருட்பெரு முகிலே போற்றி யருட்பிர காசா போற்றி
பருமொளிப் பவனே போற்றி பாகிலா மணியே போற்றி
மருளறு பொன்மை போற்றி தெய்வநா யகமே போற்றி
இருணீக்கு மென்னை யாளு மிறைவனே போற்றி போற்றி. (51)

உயிரிலா யனைத்து மோரின் றனைக்கலசன் மங்க லாண்ட
மெய்யனை வயப்பித்த சிக்க வெளிவந்த குருவே போற்றி
பொய்யவா மூத்தி நங்கு முதல்விக்கோ ருதவி நாயேன்
செய்யபா மென்றுங் காணன் திருவடி போற்றி போற்றி. (52)

அறிவினிற் சமயமா வெத்தை யருளிய வமுதே போற்றி
அறிவினிற் சமாதி ஞானத் தழுபவந் தந்தாய் போற்றி
அறிவினிற் சகச ஞானத் ததுவது வானாய் போற்றி
அறிவரு மறைவா னந்த வருட்டிருப் பாதம் போற்றி. (53)

அறிவினுக் கறிவாந் தன்மை யனுக்கிர கித்தாய் போற்றி
சிறியனேன் சிறுமை தீர்த்துச் செம்பத மருள்வாய் போற்றி
பிறிவரும் பொருளா யெங்கும் பேதமற் றிருந்தாய் போற்றி
வறிவரு மறிவா னந்த வருட்டிருப் பாதம் போற்றி. (54)

அறிவினு லைக் தாக வறிவித்த வரசே போற்றி
அறிவினு லொன்று மூன்று திருந்திட வமைத்தாய் போற்றி
அறிவுபே ரின்ப மாக வளித்திடு மத்தா போற்றி
அறிவரு மறிவா னந்த வருட்டிருப் பாதம் போற்றி. (55)

வுடக்குளே தெற்குந் தெற்கில் வடக்கையுங் காட்டு வார்போ
லுடற்குளே யுயிரு மந்த வுயிர்க்குளே யுணர்வுங் காட்டி
நொடிக்குளே மலம கற்றி நுண்ணுணர் வாக்கி மீட்டும்
விடக்குளே பிறவா வண்ணங் காத்தருள் விகிர்த போற்றி. (56)

அருவமாய் நின்றாய் போற்றி யடியனேன் பொருட்டா யிங்க
னுருவமாய் வந்தாய் போற்றி யுயிர்பொரு ளுடலுங் கொண்டு
பருவமில் பாவி யேனைப் பரிந்தருள் செய்தாய் போற்றி
குருபரா போற்றி யுன்றன் கோகன கத்தாள் போற்றி. (57)

என்னையே யெனக்குத் தந்த வென்குரு கருணை வாழி
தன்னையே யடைந்த வெங்கள் சற்குரு மரபு வாழி
பின்னையே பிறந்து வாராப் பெரியவர் கூட்டம் வாழி
சின்மய மாக்கி யாண்ட சிவசுப்ர மண்யன் வாழி. (58)

ஸ்ரீ சற்குருநாதன்

திருவடிவாழ்க.

ஓம்

தத் ஸத்.

பரப்பிரஹ்மணே நம:

# ஆத்திசூடி

## மூலமும்,

## பாகியார்த்தமும் - ஆந்தரார்த்தமும்.

(*)

### காப்பு.

*ஆத்தி சூடி யமர்ந்த தேவனை*
*யேத்தி யேத்தித் தொழுவோ மியாமே.*

(பாகியார்த்தம்.) ஆத்தி சூடி - ஆத்தி மலர் மாலையைச் சூடிய பரமசிவன், அமர்ந்த - விரும்பிய, தேவனை - தேவனாகிய விநாயகக்கடவுளை, ஏத்தி யேத்தி - இடைவிடாது துதி செய்து, தொழுவோம் - வணங்குவோம், யாம் - யாங்கள்—(என்றவாறு).

### இதற்குப் பிரமாணம் வருமாறு:—

குறுந்திரட்டு.

**எண்ணிய வெண்ணியாங் கெய்துவ கண்ணுதற்**
**பவள மால்வரை பயந்த**
**கவள யானைதன் கழல்பணி வோர்க்கே.**

(பொழிப்புரை.) நெற்றிக் கண்ணையும், பெரிய பவள மலை போலுந் திருமேனியையு முடைய பரமசிவன், ஈன்றருளிய கவளத்தைக் கொள்ளும் யானையினது முகம்போலும் முகத்தையுடைய விநாயக மூர்த்தியினது திருவடியை வணங்குபவர்க்கு (அவர்) கருதியவை கருதியவாறடையும்—(எ-று.)

விநாயக வணக்கத்தால கருதிய காரியம் தவறுது முற்றுப் பெறுவது பற்றி இவ்வாறு கூறப்பட்டது.

(அந்தரார்த்தம்.) ஆத்தி சூடி - (கற்பனு வடிவ நாம ரூபங்களுக்கு ஆஸ்ரயமாய) அஸ்தி பாதிப் பிரியத்தை அனன்னிய வடிவாய்த் தரித்துள்ள, அமர்ந்த தேவனை - நடுநிலை வடிவாய்ப்பொருந்திய ஆன்ம சொரூபத்தை. ஏத்தி யேத்தி - (பிரஹ்மாகாரவிருத்தி வாயிலாகப்) பன்முறையுஞ் சிந்தனை செய்து, தொழுவோம் யாம் - அதன்கண் யாம் ஐக்கியத்தை யடைவோம்.

## (இ. பி.) சிவஞான வள்ளலார்.

**மோகமெனுங் கடல்கடந்து முத்தியெனுங் கரைகாண்பான் முதிர்ந்த நாலாம், பாகமெனு மலர்கொண்டு பக்தியெனும் புனலாட்டிப் பரிந்து சாற்றிச், சோகமெனப் பாவித்துத் துரியமெனும் விளக்கேற்றிச் சோக நீக்கி, பாகமெனுங் கோயிலின்க ணறிவென்னுங் கணபதிக்கே யன்பு செய்வாம்.**

(பொ-ரை.) (இரமறு சக மெய்யென்றுந் தேகநானென்று முள்ளே விரவிய) மோகமாகிய கடலைத் தாண்டிச் சர்வதுக்க நிவிர்த்தி பரமானந்தப் பிராப்தி வடிவ மோக்ஷமென்னுங் கரையைக் காணும்பொருட்டுப் பக்தி யென்னும் நீரினல் அபிடேகஞ் செய்து பரிபக்குவமான †சத்திநிபாத மென்னும் மலரைக்கொண்டு

† சத்தி=திருவருள்; பாதம்=படிதல்; நி[illegible]சார்க்கம்.

பிரியத்தோடு தரித்து, அவன் (சிவன்) நானெனப் பாவனைசெய்து துரியமென்னுந் தீபத்தை யேற்றி, சோகத்தினின் றும் நீங்கி உடம்பென்னுங் கோயிலின்க ணெழுந்தருளி யுள்ள உணர் வென்னும் விநாயகற்கு யாம் அன்பினைச் செய்வோம்—(எ-று.)

## 1. அறஞ்செய விரும்பு.

(பா-ட.) அறம் - தருமத்தை, செய - செய்தற்கு, விரும்பு - நீ யாசைப்படுவாயாக.

### * திருக்குறள்.

4-அதி. அறன்வலியுறுத்தல். 6-செய்யுள்.

**அன்றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது**
**பொன்றுங்காற் பொன்றாத் துணை.**

(பொ-ரை.) (நாமிப்போர் திளையேமாகலின்) இறக்குநாளிற் செய்வோமென்று நினையாமல், தருமத்தைத் (தினந்தோறுஞ்) செய்யக்கடவர்; அவ்வாறு செய்யும் தருமமானது, உடம்பினின்று முயிர் போங்காலத்து (அவ்வுயிர்க்கு) அழியாத துணையாம்—(எ-று.)

(ஆ-ம்.) அறம் - (ஞானசொரூபமாயுள்ள தன்னை யுணருமாறு) சர்வசங்கப் பரித்தியாகத்தை, செய - செய்தற்கு (எதுவாகிய சிரவணாதிகளில்.) விரும்பு - (என்ஞான்றும் பிரயத்தன பூர்வகமாய்ச் சித்த விருத்தியை நிறுத்தத்) தலைப்பட்டிருப்பாயாக.

(இ. பி.) அவிரோத வுந்தியார்.

**தாக்குபற் றற்ற சகலத்தி யாகத்தி**
**னோக்கு தருமமே துந்தீபற**
**உள்ளது வீட்டிற்கஃ துந்தீபற.**

---

* பாகியார்த்தம் ஒவ்வொன்றிற்கும் திருக்குறளே மேற்கோளாகக் காட்டப்பட்டிருக்கின்றது.

(பொ-ரை.) ஒன்றிலுந் தாக்கற்றுடைய சர்வசங்கப்பரித்தியாகத்திலும் உயர்ந்த தருமமே இல்லை; தருமமாவது பெரும்பான்மையும் தானந் தவமென்கின்ற இரண்டின்கண்ணே அடங்குதலின். மேலாய சிவத்தினிடத்தே உடல் பொருள் ஆவி மூன்றையுஞ் சத்தியமாக ஒப்பித்து எவ்விடத்துந் தனது சுதந்திரத்துவந் தோன்றாமை நிற்றலின், இதற்கு மேலாய தானமும் இல்லை. அங்ஙனம் அது தோன்றாமல் நிற்போர்க்குச் சிவமேயொழியத் தானும் பிறரும் தோன்றாமையின். யான் செய்தேன் பிறர்செய்தார் என்னும் இதாகிதங்கள் சிறிதும் உண்டாகாமையின். இதற்குமேலாய தவமும் இல்லை. இவை வீட்டிற்கு உரியவாகலின். வீட்டறமுமாம்—(எ-று.)

## 2. ஆறுவது சினம்.

(பா-ம்.) ஆறுவது - உனக்குள்ளே தணியத் தகுவது சினம் - கோபமேயாம்.

31-அதி. வெகுளாமை. 3-செய்யுள்.

**மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய**
**பிறத்த லதனான் வரும்.**

(பொ-ரை.) யாவரிடத்திலும் கோபத்தை மறக்கக் கடவர். (ஒருவர்க்குத்) தீமையுடையவை யெல்லாம் உண்டாகுதல் அக்கோபத்தினாலே வரும் (ஆதலால்)—(எ-று.)

(ஆ-ம்.) * சினம்-(ஆநந்த சொரூபத்தில் பிறழ்ந்து நிற்கவொட்டாது வாதனை வசத்தால் பிறர் தீமை செய்தாரென்று மனத்தைத் தன்வசமாக்கி யெழுகின்ற) குரோத விருத்தியானது. ஆறுவது - அகம்பிரஹ்ம பாவனையால் ஒழியத்தகுவதாம்—(எ-று.)

---

* சினம் - நீட்டித்த கோபம், அது காமாதிகளுக்கு உபலட்சணமாம்.

(இ. பி.) ரிபுகீதை.

**அகம்பிரம பாவனையாற் காமக் கோப**
**மகிலமுமே நசிக்குமிதி லைய மில்லை**
**யகம்பிரம பாவனையா லுலோப மோக**
**மகிலமுமே நசிக்குமிதி லைய மில்லை**
**யகம்பிரம பாவனையால் மதமா னங்க**
**ளகிலமுமே நசிக்குமிதி லைய மில்லை**
**யகம்பிரம பாவனையா லிடம்பங் கர்வ**
**மகிலமுமே நசிக்குமிதி லைய மில்லை.**

(பொ-ரை.) இடைவிடாது நான் பிரஹ்மமென்று பாவனை செய்வதால், காமக் குரோதம் முற்றும் ஒழியும்; இதில் சிறிதும் சந்தேகமில்லை; மேற்படி பாவனையால் லோபம் மோகம் முற்றும் ஒழியும்; இதில் சிறிதும் சந்தேகமில்லை; மேற்படி பாவனையால் மதம் மானம் முற்றும் ஒழியும்; இதில் சிறிதும் சந்தேகமில்லை; மேற்படி பாவனையால் இடம்பம் கர்வம் முற்றும் ஒழியும்; இதில் சிறிதும் சந்தேகமில்லை—(எ-று.)

## 3. இயல்வது கரவேல்.

(பா-ம்.) இயல்வது - கொடுப்பதற் கிசைவதை; கரவேல் - நீ இரப்பவர்க்கு ஒளிக்காதிருப்பாயாக.

23-அதி. ஈகை. 3-செய்யுள்.

**இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்**
**குலனுடையான் கண்ணே யுள.**

(பொ-ரை.) யான் வறியேனென்று (இரப்பவன்) சொல்லும் துன்பந்தரு மொழியை (பிறரிடத்தே) தான் சொல்லாமையும்,

(அதனைத் தன்னிடத்தே சொன்னவர்க்கு இல்லை யென்னுமற்) கொடுத்தலும், (ஆகிய விரண்டும்) நல்லகுடியிற் பிறந்தவனிடத்தே உண்டாயிருக்கும்—(எ-று.)

(ஆ-ம்.) இயல்வது - (ஆத்ம சொரூபமாயுள்ள தனது யதார்த்தத்தை யுணருமாறு அதற்கு வேண்டிய சாதனங்களை உனது வீரப்பாட்டிற்குத் தக்கவாறு) அப்பியசித்தலை. கரவேல் - (விடய விச்சையின் பரிணாம வடிவாய் பரிணமிக்காத திருவடியால்). மறவாது யூகஞ்செய்வாயாக.

(இ. பி.) விவேக சூடாமணி.

**எத்திற வேது வாலோ வெய்தியு மநுடத் தேக**
**மத்திலு மார ஞார்த்த மறிவதற் கேது வாக**
**வொத்தவாண் மையை யடைந்து முண்மையா மூத்திசேர**
**வெத்தனஞ் செய்யா மூட னென்றுமான் மாவைக் கொன்**
**[றோன்.**

(போ-ரை.) எவ்விதக் காரணத்தினாலேயோ மானிட தேகத்தைப் பெற்றும். அதிலும் வேதார்த்தங்களை யறிதற் கேதுவாகப் பொருந்திய விவேகத்தன்மையை யடைந்திருந்தும், யதார்த்தமாகிய மோக்ஷத்தை யடையுமாறு பிரயத்தனஞ் செய்யாத மூடனானவன், எப்பொழுதும் தனது ஆத்ம சொரூபத்தைக்கொன்ற பூலையனாவான்—(எ-ற.)

## 4. ஈவது விலக்கேல்.

(பா-ம்.) ஈவது - (அறநோக்கி ஒருவர் மற்றொருவருக்குக்) கொடுப்பதை. விலக்கேல் - நீ தடுக்காதிருப்பாயாக.

17-அதி. அழுக்காறுமை. 6-செய்யுள்.

**கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ**
**முண்பதூஉ மின்றிக் கெடும்**

(பொ-ரை.) (ஒருவனால்) பிறர்க்குக் கொடுக்கப்படும் பொருளைக் குறித்து பொருமைப்படுவனது உறவானது, உடுக்கப்படுவதும் உண்ணப்படுவதும் இல்லாமலழியும்—(எ-று.)

(ஆ-ம்.) ஈவது - (கூடஸ்த சொரூபமாய் விளங்குந் தன்னையடைதற் கேதுவாயுள்ள வனுஷ்டானத்தை யாசிரியர்) உபதேசிக்கு மிடத்து. (அந்த உபதேசத்தை) விலக்கேல் - விபரீதத்தால் மறக்க முயலாதே.

## (இ. பி.) திருவாசகம்

**செழிகின்ற தீப்புகு விட்டிலிற் சின்மொழி யாரிற்பன்னாள்**
**விழுகின்ற வென்னை விடுதிகண் டாய்வெறி வாயறுகா**
**லுழுகின்ற பூமுடி யுத்தர கோசமங் கைக்கரசே**
**வழிநின்று நின்னரு ளாரமு தூட்ட மறுத்தனனே.**

(பொ-ரை.) தேனை வாயிலேயுடைய வண்டுகள் அறுகால் கிண்டுகின்ற கொன்றை முதலிய மலர்களைச் சடாபாரத்தில் தரித்துள்ள உத்தரகோசமங்கை யென்னுந் திவ்யக்ஷேத்திரத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானே! கொழுந்துவிட்டு எரிகின்ற விளக்கில் விரும்பி வீழ்ந்தழியும் விட்டிற் பறவைபோல மழலைச் சொற்களைப் பேசும் மங்கையரிடத்துப் பலகாலமும் விரும்பி மூழ்கி அழிகின்ற அடியேனை (அவர்பாலினின்றும்) நீக்கச் செய்வாயாக; ஆட்கொள்ளும் முறைமையில் எழுந்தருளி வந்து உனது அருள் நிரம்பிய ஞானோபதேசத்தை நீயுபதேசிக்கவும் அதனை யான் (மோக வசத்தால்) கவனியாதொழிந்தனன்; (இனி மோகமயலொழித்து வுனது அருள் நிரம்பிய ஞானோபதேசத்தை நீ யுபதேசிக்கின்ற முறைப்பிரகாரம் சித்த விருத்தியை யூகஞ்செய்து நிறுத்துவேன் என்னும் பொருள் எதிர்மறையினால் ஈண்டு கொள்ளத் தக்கது)—(எ-று.)

## 5. உடையது விளம்பேல்.

(பா-மீ.) உடையது - உனக்குள்ள பெருமையை. விளம்பேல் - (நீ பிறரறியச்) சொல்லாதிருப்பாயாக.

98-அதி. பெருமை. 9-செய்யுள்.

**பெருமை பெருமித மின்மை சிறுமை**
**பெருமித மூர்ந்து விடல்.**

(பொ-ரை.) பெருமைக் குணமாவது (காரணம் உண்டாகிய விடத்தும் அஃது இயல்பாக நேரக்கிச்) செருக்கில்லா திருத்தல். சிறுமைக் குணமாவது (காரணம் இல்லாத விடத்தும் அதனை ஏற்றிக்கொண்டு) செருக்கின் முடிவிலே நின்று விடுதல்—(எ று.)

(ஆ-ம்.) உடையது - (அகண்ட சொரூப சாக்ஷாத்காரமாயுள்ள) ஆத்மானுபவத்தை. விளம்பேல் - * (ஜிஞ்ஞாசுவிற்கன்றி எனைய பாமர விஷயிகளுக்கு ஒருபோதும்) கூறாதிருப்பாயாக.

(இ. பி) ஞானவாசிட்டம்.

**இயற்கைகுணஞ் சோதித்து முன்னே பின்னே யாவையுமாம் பிரமநீ யென்னல் வேண்டும், வியப்புறவா சையிலுமுல்வார்க் கிவ்வா றோதின் மீளாத நிரயத்தில் வீழ்த்த தாகும்,**

---

* ஜிஞ்ஞாசு - (உத்தம சம்ஸ்காரத்தினால் தனது யதார்த்த நிலையை) அறியும் விருப்புடையவன்.

பாமரன் - விதி நிஷேத போகங்களில் விருப்பத்தோடு சாஸ்திர வாசனையின்றி யிருப்பவன்.

விஷயி - சாஸ்திரானுசாரமாகப் போக நுகர்ச்சி யுடையவனாய் இகபர லோகங்களை யடையக் கர்மஞ் செய்பவன்.

**தியக்குறுபோ கத்தாசை தீர்ந்து புந்தி தெளிந்தவுனைப் போல் வார்க்கே திகழத் தோன்று, மயக்கமற வுணர்த்தவல்ல குரு வைக் கிட்டி வருந்தியுந்தன் பிறப்பறுக்கு மகனு மாக்கே.**

(பொ-ரை.) முன்பு சீடனது இயல்பான பக்குவங்களைப் பரிசோதித்துப் பின்பு சர்வமுமாய் விளங்கிய பிரஹ்மஸ்வரூபமே நீ யென்று உபதேசிக்கவேண்டும்; அதிசயிக்கும்படி விருப்பத்திற் சுழலுபவர்களுக்கு இந்தப் பிரகாரஞ் சொன்னால் அது திரும்பாத நரகாக்கினியில் அவர்களைத் தள்ளிவிட்டதாம்; கலக்கம் பொருந்திய போகத்தினது பிரியத்தை விட்டு அறிவு தெளிந்திருக்கின்ற உன்னை யொத்தவர்களுக்கே பிரகாசமாய்த் தோற்றும், மயக்கமில்லாமல் அறிவிக்க வல்லமையுடைய வாசாரியரைக்கிட்டி வருத்த முற்றுவது தனது பிறவியை நீக்கிக்கொள்ளும் சீடனும் முன் சொன்ன பிரகாரமே யிருக்கவேண்டும்—(எ-று.)

## 6. ஊக்கமது கைவிடேல்.

(பா-ம்.) ஊக்கமது - (செய்தொழிலில்) மனவெழுச்சியை. கைவிடேல் - நீ கைவிடாதிருப்பாயாக.

60-அதி. ஊக்கமுடைமை. 4-செய்யுள்.

**ஆக்க மதர்வினுய்ச் செல்லு மசைவிலா**
**வூக்க முடையா னுழை.**

(பொ-ரை.) அசைவில்லாத மனவெழுச்சி யுடையவனிடத்தே பொருளானது தானே வழிகேட்டுக்கொண்டு செல்லாநிற்கும்—(எ-று.)

(ஆ-ம்.) ஊக்கமது - (அபரிச்சின்ன சொரூபத்தை யடைதற் கேதுவாய சிரவண மனன நிதித்தியாசனவாயிலாகப்பழகும் ஞான

னுஷ்டானத்தை விட்டு * அஞ்ஞான சந்தேக விபரீதங்களால் அயலாதாரமாக நேரிடினப்போது), மனோ தைரியத்தை, கைவிடேல் - நீ விடாது மேற்கொண்டொழுகுவாயாக.

(இ. பி.) தாயுமானவர்.

**கேட்டவுடன் சிந்தித்தல் கேடிலா மெய்த்தெளிவால்**
**வாட்டமறு வுற்பவநோய் மாறுமோ—காட்டமுற்று**
**மெய்யான நிட்டையினை மேவினர்கட் கன்றோதான்**
**பொய்யாம் பிறப்பிறப்புப் போம்**

(பொ-ரை.) தத்துவஞானத்திலன்றி நிவிர்த்தியடையாத சனன மரணப் பிரவாகரூபத் துன்பம் சிரவணத்தானும், மனனத்தானும், நிதித்தியாசனத்தினுமே நீங்காது; (ஆதலின்.) நிதித்தியாசனத்தின் பரிபாகஸ்திதியில் விளங்காநின்ற அகண்ட பிரஹ்மாகார விருத்தியில், சித்தம் தைலதாரைபோல் நிலைபெற்று ஞாதுரு ஞான ஞேயமின்றி பிரஹ்மாகாரமாய் அமர்ந்திருத்தலாகிய சமாதியனுபவம் வாய்த்தால் அக்கணமே மித்தையா வடிவ பவவியாதியானது அத்தியந்த நிவிர்த்தியாம்.

## 7. எண்ணெழுத் திகழேல்.

(பா-ம்.) எண் - கணித நூலையும், எழுத்து - இலக்கண நூலையும், இகழேல் - இகழாமற் கற்றுக்கொள்வாயாக.

---

* அஞ்ஞானம் - பிரஹ்ம பாவனையை மூடிப் பேதங்காட்டுவதாம்.
சந்தேகம் - குரவன் வாக்கிய நம்பாமற் குழம்புவதாம்.
விபரீதம் - திரமறு சகம் மெய்யென்றுந் தேக நானென்றுங் கொள்ளு மோகமாம்.

40-அதி. கல்வி. 2-செய்யுள்.

**எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்**
**கண்ணென்ப வாழு முயிர்க்கு.**

(பொ-ரை.) அறியாதவர் (எண்ணென்று சொல்லுவனவும் மற்றை யெழுத்தென்று சொல்லுவனவும். ஆகிய இக்கலைகளிரண்டையும் (அறிந்தோர்) வாழ்தற்குரிய (சிறப்புடைய) மக்களுக்குக் கண்களாகும் என்று சொல்லுவார்—(எ-று.)

(ஆ-ம்.) எண் : (ஆதியாய் விளங்கும் அன்ம வடிவ சொரூபத்தில் அந்தக்கரண விருத்தி நிலைபெற்று ஆநந்தாகாரமாய் விளங்குவதற் கேதுவாகிய) மனனத்தையும், எழுத்து - அஹங்மாகார விருத்திகளைத் தடுத்து, வியாபக விளக்கத்தில் சித்தம் சித்திரதீபம்போல நிற்பதாகிய நிதித்தியாசனத்தையும், இகழேல் - நீ இகழாது மேற்கொண்டொழுகுவாயாக.

பிரம கீதை.

**வினவுற்ற கேள்விக்குக் கேட்பா ளுகி மேவியகா ணுதிபில் விழித்துக் காண்பா ளுகி, மனனத்தின் மந்தாவாய் ஞானந் தன்னின் மதித்திடுஞா தாவாகி மன்னு கின்றான், சொனவத் தற் பரனுகு மவனில் வேறுந் தோற்றமெலா மெய்யாகுந் தோற்ற மன்று, நினைவிற்றுற் பரனேயிவ் வெல்லா மென்று நினை வதும்வ நினைவான் நினைவு கேமே.**

(பொ-ரை.) கேட்கின்ற செவிக்குக் கேட்பவனுகியும், பொருந்திய கண்ணுக்கு விழித்துப் பார்ப்பவனுகியும், மனனத்தொழிலையுடைய மனத்திற்கு மனம் நிற்கின்றவனுகியும், மத்தியகத சொரூபமாய் விளங்கும் விஞ்ஞானத்திற்கு மதிக்கப்படாநின்ற விஞ்ஞாதாவாகியும், நிர்விகற்ப சமாதியில் நிலைபெற்றிருப்பவனே முன்

சொல்லிய அந்த கற்பனையேவான். அவனுக்குப் பின்னமாய்த் தோற்றுகின்ற வனைத்தும் உண்மையான தோற்றமல்ல; நேராக யாலோசிக்கில், அந்தக்கற்பனையே யிங்கனைத்து மென்று நினைப்பதுவே நினைக்கத்தக்க நினைவாகும்—(எ-று.)

## 8. ஏற்ப திகழ்ச்சி.

(பா-ம்.) எற்பது - ஒருவரிடத்திற் போய் இரப்பது. இகழ்ச்சி - உனக்குப் பழிப்பாகும்.

23-அதி. ஈகை. 2-செய்யுள்.

**நல்லா றெனினுங் கொளறீது மேலுலக**
**மில்லெனினு மீதலே நன்று.**

(பொ-ரை.) பிறர் (கொடுத்தலை வாங்கிக்) கொள்ளுதல் மேலுலகத்திற்கு நல்லவழி யென்பவர் உண்டாயினும், (அது) குற்றமாம்; (கொடுத்தவர்க்கு) அந்த மேலுலகத்தை யடைதல் இல்லையென்பவர் உண்டாயினும், கொடுத்தலே நல்லது—(எ-று.)

(ஆ-ம்.) ஏற்பது - (அநாதியாயுள்ள தனது நிஜவடிவை யடைதற்கேதுவாய * மனம் பிரஷ்டமாகாமாகாது) தேகாதிப் பிரபஞ்சாகாரமாகவாதல், இகழ்ச்சி - ஜனன மரண வடிவ சம்சாரத்தை யடைந்து வருந்துதற்குரிய பழிப்பிற்கேதுவாம்.

### (இ. பி.) ஞானவாசிட்டம்.

**அடையமேவண் டியதடைந்து மேற்றுயர மற்றின்ப மளவிலா தாய்க், கடையதாந் தருவிலங்கு பறவைகள்போல் வீணு**

---

* இராஜோகுண தமோகுண விர்த்தி ரகித மனம் அருவ மனமென்றும், அவற்றோடு கூடிய மனம் உருவ மனமென்றுஞ் சொல்லப்படும். முன்னது - ஞானிகளிடத்தும், பின்னது - அஞ்ஞானிகளிடத்து முள்ளனவாம்.

**ள்கள் கழியா தாகித், தடையிலா மனனத்தால் வாழ்வதே யுயர்வாளுள் சனனந் தீர்ந்தோ, ருடையபிறப் புயர்ந்ததாங் கிழவேச ரிப்பிறப்பா மொழிந்த வெல்லாம்.**

(பொ-ரை.) அடையத்தக்க வாத்ம ஞானத்தை யடைந்து இனித் துன்ப மிங்கி ஆநந்தமானது அளவற்றதாய்க் கீழான விருக்ஷங்களும், மிருகங்களும், பக்ஷிகளுமாகிய விவைகளைப் போல வீணாகக் காலத்தைப் போக்காமல், தடையற்ற ஆத்மவிசாரத்தால் ஜீவிப்பதே மேலான வாயுளாம்; மறுபவத்தை யொழிந்தவருடைய சனனம் மேலானதாம். ஏனைய வினைத்தும் கிழக்கழுதையின் பிறவியாம்—(எ-று.)

## 9. ஐயமிட் டுண்.

(பா-ம்.) ஐயம் - பிச்சையை. இட்டு - இரப்பவர்க்குக் கொடுத்து. உண் - நீ உண்பாயாக.

23-அதி. ஈகை. 7-செய்யுள்.

**பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்**
**தீப்பிணி தீண்ட லரிது.**

(பொ-ரை.) (எந்நாளும்) பகுத்துண்ணுதல் பழகியவனைப் பசியென்று கூறப்படும் தீயநோய் தீண்டுதலில்லை—(எ-று).

(ஆ-ம்.) ஐயம் - (காரண சொரூபமாயுள்ள தன்னை யடையுமாறடைய முயலும் சீடர்களுக்கு ஆத்ம சாக்ஷாத்காரத்தை யடைதற்கேதுவாய) - ஞானுனுசந்தான வுளவாலுண்டாகும் சந்தேகமுதலியவற்றை, இட்டு - (ஞானசாரிய ரருளிய்வாறு வொழுகி) வொழித்து, உண் - (அவ்வனுசந்தானத்தில் நிலைத்து, அங்குதயமாகும் நிரதிசயாநந்தத்தை) அனுபவித்திருப்பாயாக.

## (இ. பி.) கைவல்லிய நவநீதம்.

தடைகளே தெனிலஞ் ஞானஞ் சந்தேக விபரீ தங்கள்
படர்செயு மந்த மூன்றும் பலசன்மப் பழக்கத் தாலே
யுடனுடன் வரும்வந் தக்கா லுயர்ஞானங் கெடும்இவ் வற்றைத்
திடமுடன் கெடுப்பாய் கேட்டல் சிந்தித்த றெளித லாலே.

(பொ-ரை.) தடைகள் யாதெனின்; அஞ்ஞானம் சந்தேகம் விபரீதமென்பன. துன்பத்தையே விளைவிக்கு மந்த மூன்று விதமும் அநாதி சென்மப் பழக்கத்தினாலடிக்கடி வரும். வந்தால், மேலாய ஞானப்பிரகாசம் கெடும்; ஆதலின், அம்மூன்றையு முறுதியாக நின்று கெடுத்தல் செய்தி: கேட்டல், சிந்தித்தல், தெளிதல், என்னு மிம்மூன்றேதுக்களாலும்—(எ-று.)

அநுபவா னந்த வெள்ளத் தழுந்திமே யகண்ட மாகித்
தனுகா ணங்க ளாதி சகலமு மிறந்து சித்தாய்
மனதுபூ ரணமாய்த் தேக மானசற் குருவுங் காண
நனவினிற் சுழுத்தி யாகி நன்மகன் சுபாவ மானான்.

(பொ-ரை.) சொப்பிரகாச வெழுச்சிக் கநுபவமாயுள்ள தடையற்ற வானந்தப் பிரவாகத்தில் மூழ்கி, மூழ்கவே யகண்ட பரிபூரணமே தானாகி, தனு கரண புவன போகங்கள் முதலிய சகல கற்பிதமு நசித்து, தெரிவே வடிவாகியும் சின்மாத்திரமானதால் மனது பரிபூரணமாகியும் பூரணமே மானிடத் திருமேனி கொண் டெழுந்தருளிய சற்குருநாதனுங் காணும்படி தூங்காமல் தூங்குதலாகிய நனவிற் சுழுத்தி நிலையதாகியுஞ் சற்புத்திரனின்று தனது சுபாவமாகியு நிரதிசயானந்த வடிவமாயினன்—(எ-று.)

## 10. ஒப்புர வொழுகு.

(பா-ம்.) ஒப்புரவு - உலக நடையை யறிந்து; ஒழுகு - அந்த வழியே நடப்பாயாக.

14-அதி. ஒழுக்கமுடைமை. 10-செய்யுள்.

**உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்.**

(பரி-வா.) உயர்ந்தோரோடு பொருந்த நடத்தலைக் கற்றிலா தவர் பலநூல்களையும் கற்றாராயினும், விவேகமில்லாதவராவார்— (எ-று.)

(ஆ-ம்) ஒப்புரவு - (அகாரணசொரூபமாயுள்ள அஸ்தி பாதிப் பிரிய வடிவ சொரூபத்தை யுள்ளவா றடைதற்கேதுவாய) நிர் விகற்ப சமாதியை. ஒழுகு - சற்குரு கூறியவாறு அப்பியசிப்பாயாக

### (இ. பி.) மகாவாக்கியம்.

**சற்குருவி னருளாலுந் தவமுடிவின் பயனாலுஞ் சனன நீங்கிச், சிற்கனவாழ் வடைதற்கே சிந்தைசெயுந் திறமுடையார் சில ராகி, நிற்குநிலை சாதனங்க ளொருநான்கு மறைநான்கு நீந்தி யோக, வற்கமொடு சகலகலை களுந்தேர்ந்து ஞான நெறி வருவ ராமால்.**

(பொ-ளா.) ஞானாசாரியர் கிருபையினாலும், தவந் தவமுமற் செய்து முடிந்த பலத்தினாலும், பவத் துன்பம் நீங்கிப் பூரண ஞானச செல்வத்தைப் பெறுவதற்கே சிந்திக்கின்ற திறத்தையுடையவர்கள் நல்லறிவுள்ளவராகி அப்பியாசிக்கும் நிலையாகிய சாதன சதுஷ்டயங்களையும் வேதம் நான்கையும் ஆராய்ந்தறிந்தகன்று

இயமாதி யோகக் கூட்டத்துடன் சகல சாஸ்திரங்களையும் விசாரித்து அவற்றின் அபிப்பிராயங்களைக்கண்டு ஞானமார்க்கத்திற்கு வருவார்கள்—(எ-று.)

## 11. ஓதுவ தொழியேல்.

(பா-ம்.) ஓதுவது - நூல்களை வாசிப்பதில். ஒழியேல் - (எப்போதும்) நீங்காதிருப்பாயாக.

14-அதி. ஒழுக்கமுடைமை. 4-செய்யுள்.

***மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்***
***பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.***

(பொ-ரை.) (கற்ற) வேதத்தை மறந்தானாயினும் (வருணங் கெடாமையினாலே பின்னும்) ஓதிக்கொள்ளலாம் பிராமணனது உயர்ந்த வருணமானது ஆசாரங் குறைய அழியும்—(எ-று.)

(ஆ-ம்.) ஓதுவது - (அமேயசொரூபமாயுள்ள தன்னை யுணருதற்கேதுவாய வேதாந்த சாஸ்திரங்களைச் சற்குருவாயிலாகப்) படிப்பதை. ஒழியேல் - நீ (திட அபரோக்ஷ ஞானமுண்டாகுமளவும்) விடாதிருப்பாயாக.

(இ. பி.) வேதாந்தசூளாமணி.

***சிவபர விசாரணையே யுரைத்தலரி தாஞ்சாத்***
***திரப்பிரபஞ் சங்காமா திகளெதி ரிமாங்***
***காவலுறு சாதிகரு மாதிகமொ டேதான்***
***கருதுமனக் கற்பிதமே மந்தமசாத் திரத்தின்***
***மேவுறுமிவ் விருதிறமு மாருயிர்மெய்க் காட்சி***
***விரோதிகளா தலின்ஞானம் பயிறற்கு முன்ன***
***ரோவுவசாத் திரப்பிரபஞ் சந்தான்மெய்ஞ் ஞான***
***வுதவியா மான்மகாட் சியின்பின்விடு வதுவாம்.***

(பொ-ரை.) சீவேசுர இலக்கணங்களை விசாரித்துக்கொண்டிருத்தலே சொல்லுதற்கரிதாகிய சாஸ்திரப் பிரபஞ்சமெனப்படும், காமக்குரோதாதிகள் வயத்தில் நிற்பதே தீவிரப் பிரபஞ்சமாம். விதிக்கடங்கிய வருணாசிரம தன்ம முதலியவற்றோடு தாமுடன் பட்டுச் சங்கற்பிக்கும் மனக்கற்பிதமே மந்தப் பிரபஞ்சமாம். அசாஸ்திரப் பிரபஞ்சத்திற் பொருந்தும் தீவிரம் மந்தம் என்னும் இவ்விரண்டும் ஆத்ம தரிசனத்திற்கு விரோதமாயிருத்தலின், ஞானாப்பியாசஞ் செய்தற்கு முன்னரே நீக்கற்பாலனவாம், சாஸ்திரப் பிரபஞ்ச மெனப்படுவது உண்மை ஞானம் வாய்க்குமளவும் உதவியாம்; ஆத்ம தரிசனம் வாய்த்த பின்னர் விடத்தக்கதாம்—(எ-று.)

## 12. ஔவியம் பேசேல்.

(பா-ம்.) ஔவியம் - பொறாமைக் கேதுவாகிய சொற்களை, பேசேல் - (எப்போதும்) நீ பேசாதிருப்பாயாக.

17-அதி. அழுக்காறாமை. 3-செய்யுள்.

**அறனாக்கம் வேண்டாதா னென்பான் பிறனாக்கம்**
**பேணா தழுக்கறுப் பான்.**

(பொ-ரை.) (மறுமைக்கு) அறத்தையும் (இம்மைக்குச்) செல்வத்தையும் (தனக்கு) வேண்டாதவனென்று சொல்லப்படுவான் பிறனது செல்வத்தைக் (கண்டவிடத்து) மகிழாமல் பொறாமைப் படுவான்—(எ-று.)

(ஆ-ம்.) ஔவியம் - (அகர்த்தாவாயுள்ள தன்னை யறிய முயலாது இருவினைப்பயனால் விளையும் பிறனது பூஷணையில் வெறுப்பும், தூஷணையில் விருப்புமடைதலாகிய புடைபெயர்ச்சிக்கு ஏதுவான) விஷயாகாரச் சொற்களை, பேசேல் - (மறந்தும்) கூறாதிருப்பாயாக.

(இ. பி ) ரிபுகீதை.

புகல்சீவன் முத்தர்க்கும் பிராரத் தத்தாற்
பூடணமுந் தூடணமு மெங்கு முண்டே
யகமேவு மகம்பிரம நிச்ச யத்தா
லவர்சீவன் முத்தரலான் மற்றோர் செப்பும்
வெகுவான பூடணதூ டணங்க ளாலே
விமலமதா நிலைபெற்ற வன்னோர்க் கென்று
மிகழ்வான தெவையுமிலை யெனுமு ரத்தோ
டென்னிடைநா னின்பமுற விசைந்து நிற்பேன்.

(பொ-ரை.) மேலோர்களால் சிறப்பித்துச் சொல்லப்படு சீவன் முத்தர்களுக்கும் பிராரத்வ வினையால் வரும் புகழும் இகழும் எவ்விடத்து முண்டாம். மனத்தின்கண் பொருந்திய யான் பிரமமென்னும் நிச்சயத்தோடு எழுந்தருளியிருக்கிற சீவன் முத்தர்க ளெல்லாம மேலனையோர் செய்யும் மிக்க புகழிகழ்களினாலே பரிசுத்தமான நிலையையுடைய அவர்களுக்கு எப்பொழுதும் இழிவானவை யெவையுமில்லையென்கிற நிச்சயத்தோடெனது நிஜவடிவத்தின்கண் நான் ஆநந்தமாகப் பொருந்தியிருக்கின்றேன்-(எ-று.)

## 13. அஃகஞ் சுருக்கேல்.

(பா-ம்.) அஃகம் - உயர்ந்தோர் வழக்கோடு ஒத்து நடத்தலை, சுருக்கேல் - நீ குறைக்காதிருப்பாயாக.

43-அதி. அறிவுடைமை 6-செய்யுள்.

எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு.

(பொ-ரை.) உலகமானது எவ்விதத்தினால் நடப்பதாயிருக்கின்றது அவ்வுலகத்துடன் பொருந்தித் தானும் அவ்விதத்தால் நடப்பது அறிவாம்—(எ-று.)

(ஆ-ம்.) அஃகம் - (அகர்மண சொரூபமாயுள்ள ஆன்மானுபவத்தை அபரோக்ஷ வடிவாய் அமர்ந்துள்ள மகான்கள் நிலையினை அடைதற்கேதுவாகிய) தியான யோக சமாதியில் தலைப்பட்டிருத்தலை, சுருக்கேல் - (ஆண்டு வாசனை வசத்தால் எழாநின்ற நாம ரூப பரிணாமத்துக்கு இடந்தருதலாகிய வேதுவால்) குன்றுமாறு செய்யாதே.

## (இ. பி.) பெருந்திரட்டு.

**ஓதிய தியானந் தன்னா லுற்றநற் பயனா யுள்ள**
**வேதமில் சமாதி சொல்லி னெய்திய வமிர்தந் தன்னின்**
**மீதுறு மின்பந் தானாய் மிகல்குறை வின்றி யுள்ள**
**நீதியாந் தராசி னாவொத் திருப்பதென் றறிக நீயே.**

(பொ-ரை.) முற்கூறிய தியானத்தினா லடைந்த நன்மையாகிய பிரயோசனவடிவா குற்றமற்ற சமாதியில் பிரிதலின்றி யிருத்தலாந் தன்மையைச் சொல்லுமிடத்து, மேற்கூறிய சமாதியிலடைவுற்ற நனவிற்சுழுப்தி யானந்தத்தினால் அதிகரித்து வளராநின்ற நிரதிசயாநந்தமே தன்வடிவமாய் உயர்தல் தாழ்தலில்லாது சமமாயிருக்கின்ற தராசின் நாவைப்போல உயர்வு தாழ்வென்னும் விருப்பு வெறுப்பற்ற மார்க்கமாகிய மத்தியகத நிலையில் சகல கேவலத்தின் வசமாகாது பிரிதலின்றி நீ யிருப்பாயாக—(எ-று.)

## 14. கண்டொன்று சொல்லேல்.

(பா-ம்.) கண்டு - ஒன்றைப்பார்த்து, ஒன்று - மற்றொன்றை, சொல்லேல் - (எப்போதும்) சொல்லாதிருப்பாயாக.

30-அதி. வாய்மை. 3-செய்யுள்.

**தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்**
**றன்னெஞ்சே தன்னைச் சுடும்.**

(பொ-ரை.) (ஒருவன்) தனது நெஞ்சிலே அறியப்படுவதொன்றை (பிறர் அறிந்திலரென்று) பொய்யா தொழியக் கடவன். பொய்த்தானாயின், (அதனை அறிந்த) தனது நெஞ்சே (அப்பாவத்துக்குச் சாக்ஷியாய் நின்று) தன்னைத் தபிக்கும், (அப்பாவத்தின் பயனாகிய துன்பத்தை அடைவிக்கும்)—(எ-று.)

(ஆ-ம்.) கண்டு - (அக்கோரக் கொடிய **ஆன்மானுபவம்** தனக்கு உண்டாகாமையைத்) தெரிந்திருந்தும், **ஒன்று** - தனக்கு ஒப்பற்ற அவ்வாத்மானுபவம் உண்டென்று. சொல்லேல் - (சாதகரிடத்தில் என்றும்) கூறாதிருப்பாயாக.

## (இ. பி.) மெய்ஞ்ஞான நிலயம்.

**கூட வேடமுங் கூடவா சாரமுங் கூடஞா னமுங்கொண்டு**
**மூட ராகிய வவரவ ரறிவுற மொழிவர்கண் மொழிந்தாலென்**
**றேடு சிந்தையுஞ் சிதைவறு திச்சகத் திகழ்வுமங் கழியாத**
**பாட வாயரா மவரனு சாரியப் பளகரென் றறிஐயா.**

(பொ-ரை.) வஞ்சக வேடமும், வஞ்சக வாசாரமும், வஞ்சக ஞானமுங்கொண்டு தம்மை யடுக்கும் அவ்வம் மூடர்க ளறியுமாறு ஞானசாஸ்திரங்களைக்கூறுவர்; அவ்வாறு கூறுவதால் யாது பயன் வரும், பொருள் தேடுங் கருத்தும் அழியாம லிவ்வுலகத்தினது இழிவும் நீங்காத பிறரைத் தோத்திரஞ்செய்யும் வாயினையுடைய அவர், குற்றம் நிறைந்த அநாசாரியரென்று ஐயா நீ யறிவாயாக—(எ-று.)

## 15. நப்போல் வளை.

(பா-ம்.) நப்போல் - நகரந் தான் பிரயோசன முள்ளதாக விருந்து தன் வருக்கத்தைத் தழுவுதல்போல, வளை - நீ பிரயோசன முள்ளவனாக விருந்து உன்னினத்தைத் தழுவுவாயாக.

53-அதி. சுற்றந்தழால். 7-செய்யுள்.

***காக்கை கரவா கரைந்துண்ணு மாக்கமு***
***மன்னநீ ரார்க்கே யுள.***

(பொ-ரை.) காகங்கள் (தமக்கு இரையாயுள்ளவற்றைக் கண்டவிடத்து) மறைக்காமல் (இனத்தை) அழைத்து (அவ்வினத்தோடுங் கூட) உண்ணாநிற்கும். (சுற்றத்தினுலைடையும் பெருக்கங்களும்) அப்படிப்பட்ட இயல்பை யுடையவர்க்கே உளவாகும்—(எ-று.)

(ஆ-ம்.) நப்போல் - (அவ்யாகிர்த சொரூபமாயுள்ள தன்னைத் தானெனச் சாக்ஷாத்கரிப்பதற்கு) அஸ்தி பாதிப்பிரியம் தான் பிரயோசன முடைத்தாயிருந்து தன்னிடத்தில் கயிற்றரவுபோல் விகற்பித்தெழுந்த நாமரூப திருசியங்களைத் தழுவிநிற்றல்போல (நினைப்பு மறப்பென்னு மிரண்டிற்கு மத்தியில் விளங்குந் தனது உண்மை நிலையில் அவ்விரண்டுந் தன்மயமாகும்படி), வளை - பொருந்தி நிற்பாயாக.

(இ. பி.) கந்தரனுபூதி.

***கருதா மறவா நெறிகா ணவெனக்***
***கிருதாள் வனசந் தரவென் றிசைவாய்***
***வரதா முருகா மயில்வா கனனே***
***விரதா சுரசூ ரவிபா டணனே.***

(பொ ரை.) வரத்தைக் கொடுப்பவனே, கட்டிளமை யுடையவனே, மஞ்ஞை வாகனத்தை யுடையவனே, நாம ரூபங்கட்கு வே

றுபட்டிருப்பவனே, சௌரிய முடையவனே, சூர சம்ஹாரனே, நீ நினையாமலும் மறவாமலும் இருத்தற்குரிய நிலையை யறியுமாறு அடியேனுக்கு உனது திருவடித்தாமரைகளை (ஜீவப்பிரஹ்ம ஐக்கிய ஞானத்தை) எப்பொழுது கடாட்சிக்க மனமிரங்குவாய்—(எ-று.)

## 16. சனிநீ ராடு.

(பா-ம்.) சனி - ஜனிக்கின்ற, நீர் - ஆற்றுநீர் முதலியவற்றில், ஆடு - நீ ஸ்நானம் செய்வாயாக.

30-அதி. வாய்மை. 8-செய்யுள்.

**புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை**
**வாய்மையாற் காணப் படும்.**

(பொ-ரை.) (ஒருவனுக்கு) உடம்பு பரிசுத்தமாந் தன்மை நீரினால் உண்டாகும். (அதுபோல) மனம் பரிசுத்தமாந் தன்மை உண்மையால் உண்டாகும்—(எ-று.)

(ஆ-ம்.) சனி - (அவாங்மனோ கோசரமாயுள்ள ஆத்மாவைத் தானெனச் சாக்ஷாத்கரிப்பதற்கு ஏதுவாகிய சமாதி யப்பியாசத்தின் மேலீட்டினால்) உதயமாகாநின்ற, நீர் - அகண்டப் பிரஹ்மாகாரவிருத்தி அனுபவ அமைதி நிலையில் உளவாகும் அறிதுயிலெனப்பெயரிய நனவிற் சுழுப்தியிற்றோன்றும் ஆநந்தமாகிய) ஞானநு சந்தான தீர்த்தத்தில், ஆடு - நீ நிரந்தரந் திளைத்திருப்பாயாக.

(இ. பி.) சொரூபசாரம்.

**ஞானநு சந்தான ஞானிக்கு நீராட**
**றானகந்த கோலஞ் சதாசார - மானமற**
**வாங்கிப் புசிப்பதுவே மாபூசை சஞ்சாரந்**
**தீங்கற்ற சுத்தசமா தி.**

(பொ-ரை.) ஞானனுஷ்டானத்தில் நிற்றலே ஞானிக்கு நீராடும், தன்னெண்ணத்தின்படி விரும்பிய வேடமாதலே நித்தியாசாரமும், பிச்சையிடுவதை மானமின்றி வாங்கிப் புசிப்பதுவே மகாபூசையும், ஓர் கணமும் ஓரிடத்தில் நில்லாமல் தேச சஞ்சாரஞ் செய்வதே குற்றமற்ற சுத்த சமாதியுமாம்—(எ-று.)

## 17. ஞயம்பட வுரை.

(பா-ம்.) ஞயம்பட - (பொருளாலே) நன்மையுண்டாக, உரை - (பிறருடன்) நீ பேசக்கடவாயாக.

10-அதி. இனியவைகூறல். 6-செய்யுள்.

***அல்லவை தேய வறம்பெருகு நல்லவை***
***நாடி யினிய சொலின்.***

(பொ-ரை.) (பொருளாலே பிறர்க்கு) நன்மையைத் தருஞ் சொற்களை (மனத்தால்) ஆராய்ந்து இனிமையுள்ளனவாக (ஒருவன்) சொல்லுவானாயின், (அவனுக்குப்) பாவங்கள் குறையத் தருமம் வளரும்—(எ-று.)

(ஆ-ம்.) ஞயம்பட - (அசங்க சொரூபமாய தனது யதார்த்த நிலையில் அந்தக்கரண விருத்தி நிலைபெற்றிருத்தற் கேதுவாகிய யூகத்தினை நிரந்தரஞ் சாதித்து அச்சாதனையின் பரிபாகஸ்திதியிலுளவாகும் அறிதுயிலெனப் பெயரிய நிருவிகற்பத்தில் சித்தம்) சிவாகாரமாய் விளங்க, உரை - (அந்நிருவிகற்ப சிவாகார விளக்கத்தினின்றும் பகிர்முகப்படும் ஞான்று) பாகிய திருசிய மனைத்தையும் சின்மயமாய்க் கரைத்துப் பழகுவாயாக.

(இ. பி.) திருவாசகம்

***இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத் தெழுகின்ற***
***ஞாயிறே போன்று, நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தே***

**னியலாற் பிறிதுமற் றின்மை, சொற்றசென் றணுவாய்த் தேத
ய்த்துதேய்ந் தொன்றாந் திருப்பெருந் துறையுறை சிவனே
யொன்றநீ யல்லை யன்றியொன் றில்லை யாருன்னை யறியகிற்
பாரே.**

(பொ-ரை.) (சற்குருநாதன் உபதேசவுண்மை யறிவித்த பின்னர் அந்நெறிக்கணிடையறா முயற்சியுடன் பழகும் பழக்கவிருத்தியிற் புருடதந்திரமற் றிருத்தலாகிய) இத்தருணத்தில், ஜீவம்பாதஞகிய எனக்கு (மலகிருத்தன்மையை யுண்டுபண்ணுவதற் கேதுவாகிய அகண்டாகாரவிருத்திஞானம்) உதயமாகி அறிதுயிலெனப் பெயரிய நனவிற்சுழுப்தி ஆனந்தமுண்டாக அதனால் அவித்தை நாசமடைந்து அதனிற்கண (விளங்கு மவ்வானந்தத்தில்) உதயமாகின்ற ஞானசூரியனையே நோக்குதற்கும் துரிய விளக்கத்தில், (அத்துரியவிளக்கமன்றி அன்னியப் பிரதீதியானது இறையளவும் நிகழக்காண்கிலன், இப்பெற்றியானுக்கு ஜனிக்கும் சகஜானந்த வநுபவத்தால் சங்கற்பமும் வாசனையு மத்தியந்த க்ஷயமடைந்து) நினைப்பொழிய நினைந்தனன். இத்தகைய வநுபவ நிகழ்ச்சியானது எப்பதார்த்தங்களிலும் தற்சொரூபமே விசேஷித்து அப்பதார்த்தங்களினது தன்மை சாமான்யமாகக் காணப்பட்டு (மேற்சொல்லிய வநுபவம் திடவுறுதியடைந்த தன்மையால்) பதார்த்தங்களில் சாமான்ய விசேஷபாவமு நீங்கி ஐக்கிய நிலையை யடைகின்ற (சச்சிதானந்த விளக்கமாகிய) செல்வம் அதிகரித்து விளங்குகின்ற சகஜாநந்தத்தில் வாசஞ்செய்யும் துரியாதீதமே (சொரூப சமாதியைப் பழகுந் தருணத்தில்) தத்துவக் குழாங்களெல்லாம் நீ யல்லவாகி யதற்கதீதமாய் விளங்கப்பட்ட வுன்னை (அவ்விளக்கா நுபவ நிகழ்ச்சியைக்கொண்டு பார்க்குந் தருணத்தில் முன்பு நேதிகளாந்த பதார்த்தங்கள் யாவும்) அவ்விளக்கத்தை யல்லது வேறுயறிநி

லேன், (இத்தகைய சூழ்ச்சியால்) விளங்கப்படும் இத்துரியாதீத வநுபவத்தை நிஷ்காமிய புண்ணிய மிகுதிப்பேறில்லாது அறிய வல்ல புருடர் யாவர்! அறிய வல்லவர் இல்லை—(எ-று.)

## 18· இடம்பட வீடிடேல்.

(பா-ம்.) இடம் - கையிலுள்ள பொருள். பட - வீணெய் ழிய. வீடு - வீட்டினை. இடேல் - நீ கட்டாதிருப்பாயாக.

47-அதி. தெரிந்துசெயல்வகை. 1-செய்யுள்.

அழிவதூஉ மாவதூஉ மாகி வழிபயக்கு
மூதியமுஞ் சூழ்ந்து செயல்.

(பொ-ரை.) (தொழில் செய்யுமிடத்து அப்போது அதனால்) அழிவதையும் (அழிந்தால் பின்னே) ஆவதையும் ஆய்ந்து பிற்கா லத்துத் தரும் இலாபத்தையும் ஆராய்ந்து (உறுவதாயின்) செய்ய க்கடவன்—(எ-று.)

(ஆ-ம்.) இடம் - (அசரீர சொரூபமாய் ஹிருதயாம் பரத்தில் பிரகாசியாநின்ற நிரதிசயாநந்த நிலையினின்றும், பட - பிறழ்ந்து, வீடு - விஷயாநந்தத்தை அநுபவித்தற்பொருட்டுத் தேகதாதாத் மிய சம்பந்தமகிய மந்திரத்தினை, இடேல் - அடையாதிருப்பாயாக.

### (இ. பி.) ஞானவாசிட்டம்.

அகமகமென் றணைத்துயிரி னிடத்துமிருந் தனவரத முரைப்ப தாகி, நிகழொளியா யான்மதத் துவமான சொரூப த்தை நினைத்தல் செய்வார், திகழிதய குகையுறைபுந் தேவ தையை விட்டயலே தெய்வந் தேடன், மிகவரிய கவுத்துவத் தை யெறிந்துசிறு மணிதேடும் வேட்கை போலாம்.

(பொ-ரை.) நான் நானென்று சகல ஜீவர்களிடத்தும் மிருந்து சதாகாலமும் சொல்லுவதாய்ப் பிரகாசமாய் விளங்கும் ஆத்ம தத்துவமான செம்பொருளைச் சிந்தனை செய்வாம், (இங்ஙொழிந்து) பிரகாசிக்கின்ற ஹிருதயாம்பரத்தில் வசிக்கும் துரிய சொரூபத்தை விட்டு அன்னியங்களில் தெய்வம் உளதாகக் கருதி யாத்திரை செய்து க்ஷேத்திரங்களில் அத்தெய்வத்தைத் தேடுதல் (எத்தன்மைத்தெனின்.) மிகவும் பெறுதற்கு அருமையான (கரத்தினிடம் கிடைக்கின்ற மேலான) பதுமராகத்தை (கல்லென நினைந்து) வீசி அற்பமாய பலகறையைத் தேடுகின்ற ஆசைக்கு நிகராகும்—(எ-று.)

## 19. இணக்கமறிந் திணங்கு.

(பதம்.) இணக்கம் - தக்க குணத்தை, அறிந்து - இருக்கப் பார்த்து, இணங்கு - (ஒருவரோடு) சிநேகஞ் செய்வாயாக.

80-அதி. நட்பாராய்தல். 3-செய்யுள்.

**குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்றா**
**வினனு மறிந்தியாக்க நட்பு.**

(பொ-ரை.) (ஒருவனது) குணத்தையும் குடிப்பிறப்பையும் குற்றத்தையும் குறைவற்ற சுற்றத்தையும் ஆராய்ந்தறிந்து, சிநேகத்தை (அவனோடு) செய்யக்கடவன்—(எ-று.)

(ஆ-ம்.) இணக்கம் - (அக்ஷர சொரூபமாயுள்ள தன்னைப் பெறுதற்கேதுவாய சங்கற்ப விகற்ப ஆகாரமிறந்த) மத்தியகதநிலையை, அறிந்து - (சற்குருநாதனருளியவாறு தகுதியாக) அறிந்து, இணங்கு - (அதிற் றடையின்றி) நீ பொருந்தியிருப்பாயாக.

(இ. பி.) ஞானவாசிட்டம்.

***சொருபம்விட் டகலன் மோகமாம்வேறு சொல்லிட முன்புபின் பில்லை, யொருபொரு ணினைவை யொழித்துமே லப்பா லொருபொரு ணினைவுறி லந்த, விருபொருணடுவு ணினைவற விருக்கு மிதுசொரு பத்தியல் பிதுதான், மருவுகற்பனை மாண் டசைவில்கற் போலாய் வருநனுச் சுழுத்திதீர் வடிவாம்.***

(பொ-ரை.) *ஆத்மசொரூபத்தை விட்டு நீங்கிஞல், அதனை நீங்குமறிவே மோகமென்று சொல்லப்படும், வேறே மோகமுண்டென்று சொல்ல முன்னும் பின்னு மில்லை, ஒரு வஸ்துவின் நினைவை விட்டு மேலொரு புறத்திலிருக்கின்ற வஸ்துவை நினைக்கு மிடத்தில் அவ்விரண்டு வஸ்துவின் மத்தியிலும் சங்கற்பரகிதமா யிருக்கின்ற இந்த ஞானமே சொரூபத்தின் தன்மையாம். இந்த ஞானமே பொருந்திய கற்பனுரகிதமாய்ச், சலனமில்லாத பாடாணத்துக் கொப்பாய் வருகின்ற நனவிலுள்ள விருத்தி ஞானமும் சுழுப்தி யவஸ்தையிலுள்ள வஞ்ஞானமும் தீர்ந்த சொரூபமாம்—(எ-று.)*

## 20· தந்தை தாய்ப் பேண்·

(பா-ம்.) *தந்தை - தகப்பனையும், தாய் - தாயையும்,* பேண் - *நீ காப்பாற்றுவாயாக.*

90-*அதி. பெரியாரைப்பிழையாமை. 2-செய்யுள்.*

***பெரியாரைப் பேணு தொழுகிற் பெரியாரால்***
***பேரா விடும்பை தரும்.***

(பொ-ரை.) *(ஒருவர் பெருமை அறிவு முயற்சி யென்பவற்றால்) பெரியராயிஞரை நன்கு மதியாமல் (அவமதித்து) நடப்பாராயின்,*

(அந்நடக்கையானது) அப்பெரியவரால் (எந்நாளும்) நீங்காத துன்பங்களை (அவர்க்குக்) கொடுக்கும்—(எ-று.)

(ஆ-ம்.) தாய் - (அசலசொரூபமாய் நிலைத்தற்கேதுவாய சகச சமாதியை யடைதற்பொருட்டுச்) சவிகற்பசமாதியையும், தந்தை - நிருவிகற்ப சமாதியையும். பேண் - (தக்க தேச காலங்களை யறிந்து) நீ பிரியத்துடன் அப்பியசிப்பாயாக.

(இ. பி.) ரிபுகீதை.

**ஆதலினாற் கனவிலுமே பிரமத் துக்கிங்**
**கன்னியமா யணுவேனு முள்ளதென்னும்**
**பேதமுறும் புந்தியினைத் தூரத் தள்ளிப்**
**பிரமமெலா மதுவேநா னென்றே**
**சாதகமா முறுதியினைத் திடப்ப டுத்திச்**
**சந்ததமும் பாவித்துச் சலன மின்றி**
**யாதிமுடி வொன்றுமிலா வகண்டா கார**
**வநுபூதி யடைந்தக மயமே யாவாய்.**

(பொ-ரை.) ஆகையினாலே, சொப்பனத்திலும் பிரஹ்ம சொரூபத்திற்கு வேறாக அணுவாவது இருக்கிறதென்கின்ற பேதம்பொருந்திய புத்தியைப் பிரஹ்மவிசார மூலமாக நியதிகளைந்து நீக்கி, எல்லாம் பிரஹ்மஸ்வரூப மென்றும் அதுவே நானென்றும் பழகுகின்ற திட அப்பியாசத்தை யுறுதிப்படுத்திச் சர்வதா அப்பாவனையைச் செய்து அஞ்ஞான சந்தேக விபரீதங்களென்கின்ற தடைகளில்லாது சதோதயமாய் விளங்கும் அகண்ட சாட்சாத்கார வனுபூதியைப் பெற்று அவ்வகண்டாகார வனுபூதிமயமாய் நிலைத்திருப்பாயாக—(எ-று.)

## 21. நன்றி மறவேல்.

(பா-ம்.) நன்றி - ஒருவர் செய்த உபகாரத்தை, மறவேல் - (எப்போதும்) நீ மறவாதிருப்பாயாக.

11-அதி. செய்ந்நன்றியறிதல். 8-செய்யுள்.

**நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல**
**தன்றே மறப்பது நன்று.**

(பொ-ரை.) (ஒருவன் முன்செய்த) நன்மையை மறந்து விடுவது (ஒருவனுக்கு) அறனல்ல, (அவன் செய்த) தீமையைச் செய்த பொழுதே மறந்து விடுவது அறமாம்—(எ-று.)

(ஆ-ம்.) நன்றி - (அச்சுதசொரூபமாயுள்ள தன்னை யுணர்ந்து பிறவி யகலுதற் பொருட்டுச் சற்குருநாத னருளிய) மஹாவாக்கிய லக்ஷியார்த்தத்தை, மறவேல் - (என்றும்) நீ மறவாதிருப்பாயாக.

### (இ. பி.) கைவல்லிய நவநீதம்.

**சிட்டனிவ் வாறு சொல்லத் தேசிகர் மகிழ்ந்து நோக்கிக்**
**கிட்டவா வெனவி ருத்திக் கிருபையோ டருளிச் செய்வார்**
**துட்டமாந் தடைகண் மூன்றுந் தொடராமற சொரூப ஞான**
**நிட்டனா யிருப்பா யாகி னீசெயு முதவி யாமே.**

(பொ-ரை.) சீடனானவன் இவ்வண்ணந் துதித்துரைக்க ஆசிரியரானவர் மகிழ்ச்சியுடன் பார்த்து, சமீபத்தில் வாவென்று அழைத்து இருக்கச்செய்து கருணையோடு அனுக்கிரகஞ் செய்வார், பொ

ல்லாதனவாகிய பிரதிபந்தங்கள் மூன்றும் தொடர்ந்து வாராமல் ஞானசொரூப சமாதியை யுடையவனு யிருப்பாயாஞல் இதுவே நீ எனக்குச் செய்யுங் கைம்மாறும்—(எ-று.)

## 22. பருவத்தே பயிர்செய்.

(பா-ம்.) பருவத்தே - அது அது விளையுங் காலத்திலே, பயிர் செய் - அதை யதைப் பயிரிடுவாயாக.

49-அதி. காலமறிதல். 2-செய்யுள்.

*பருவத்தோ டொட்ட வொழுக றிருவினைத்*
*தீராமை யார்க்குங் கயிறு.*

(பொ-ரை.) காலத்தோடு பொருந்த (தொழில்செய்து) நடத்தல் (ஒருவரிடத்தும் நில்லாது நீங்குஞ்) செல்வத்தை (தன்னிடத்து) நீங்காமல் கட்டுவதாகிய கயிறாகும்—(எ-று.)

(ஆ-ரை.) பருவத்தே - (அசம்சாரியாயுள்ள தன்னைத் தானென ச்சாக்ஷாத்கரிப்பதற்கு ஏதுவாய சாதனங்களைச் சற்குருவாயிலாய் உணர்ந்து) பெறுதற்குரிய காலத்திலேயே, பயிர் செய் - (அவற்றை வைராக்கியத்தோடிருந்து) நீ விருத்திசெய்வாயாக.

(இ. பி.) நல்வழி.

*மூப்பதா மாண்டளவின் மூன்றற் றொருபொருளைத்*
*தப்பாமற் றன்னுட் பெறுனயின் - செப்புங்*
*கலையளவே யாகுமாங் காரிகையார் தங்கண்*
*முலையளவே யாகுமா மூப்பு.*

(பொ-ரை.) (ஒருவன்) முப்பது வயதுக்குள் * மலம் விட்சேபம் ஆவரணம் என்னும் முக்குற்றங்களும் நீங்கி ஒப்பற்ற பரம்பொருளைத் தவறாது தனக்குள்ளே † (அசம்பிரஞ்ஞாத சமாதிவாயிலாக) அடையாது விடுவனாயின், (அவனது அநுபவம்) பெண்களது முலையின் தளர்ச்சியளவே, அவர்களது மூப்பின் அளவாவதுபோலப் படித்த சாஸ்திர வளவேயாகும்—(எ-று.)

## 23. மண்பறித் துண்ணேல்.

(பா-ம்.) மண் - பிறரது விளை நிலத்தை, பறித்து - அபகரித்துக்கொண்டு, உண்ணேல் - நீ சீவனஞ் செய்யாதிருப்பாயாக.

18. அதி. வெஃகாமை. 1-செய்யுள்.

**நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்**
**குற்றமு மாங்கே தரும்.**

(பொ-ரை.) (பிறர்க்குரிய பொருளைக் கொள்ளுதல் நமக்கு அறமல்லவென்னும்) நடுவு நிலைமை யில்லாமல் (அவரது) நல்ல பொருளை (ஒருவன் அபகரித்தற்கு) விரும்பின். (அவ்விருப்பு அவன்) குடியைக் கெடச்செய்து பல குற்றங்களையும் அப்பொழுதே (அவனுக்குக்) கொடுக்கும்—(எ-று.)

---

* மலம் - பாவம் - அஃதாவது சன்மாந்தரங்களிற் செய்த அசுப கர்மங்களா லுண்டாய அதர்மம்.

விட்சேபம் - சித்த சலனம்.

ஆவரணம் - பிரஹ்ம ரூப ஆத்மாவை நானறியே னென்னும் அஞ்ஞானம்.

† அசம்பிரஞ்ஞாத சமாதி - சர்வ விருத்திகளின் நிரோதத்தோடு சித்தம் நிருவிகற்ப பிரஹ்மாகாரமாக நிலைத்தல்.

(ஆ-ம்.) மண் - (அணுசொரூபமாயுள்ள தன்னை யுணர்தற்குத் தடையாயுள்ள) மாயாகாரியமான தனு கரண புவன போகங்களை. பறித்து - யானெனதென் றபிமானஞ்செய்து, உண்ணேல் - (அது காரணமாக வெழும் போலியானந்தத்தை நிஜாநந்தமென்று கருதி) நீ அனுபவிக்க முயலாதிருப்பாயாக.

### (இ பி) பிரபுலிங்கலீலை.

**யானெனதென்ப திருந்திடு காறு**
**ஞான முறானது நண்ணில னாகிற்**
**றானிலை யாத சகந்திகழ் கிற்குந்**
**தீனமி லாத சிவந்திக ழாதே.**

(பொ-ரை.) (ஒருவன்) யான் எனதென்னும் அகமமதை யிருக்குமளவும் ஞானமடையான். அந்த ஞானத்தை யடையானாயின், தான் ஒரு முதலாக நிலைபெறாத சகம் (அவனுக்குக்) காணப்படும்; (அதனால்) மாசற்ற சிவம் விளங்காது—(எ-று.)

## 24. இயல்பலாதன செயேல்

(பா-ம்.) இயல்பலாதன - தர்மத்திற்கு விரோதமான காரியங்களை, செயேல் - (எப்போதும்) நீ செய்யாதிருப்பாயாக.

4-அதி. அறன்வலியுறுத்தல். 10-செய்யுள்.

**செயற்பால தோரு மறனே யொருவற்**
**குயற்பால தோரும் பழி.**

(பொ-ரை.) ஒருவனுக்குச் செய்தற் றன்மையது நல்வினையே, ஒழிதற் றன்மையது தீவினையே—(எ-று.)

(ஆ-ம்.) இயல்பலாதன - (ஸ்தாணு சொரூபமாயுள்ள தன்னை த்தானெனச் சாக்ஷாத்கரிப்பதற் கேதுவாய யோக ஞான வொழு க்கத்தை மேற்கொள்வதொழிந்து) பிறவிக்கேதுவாய செயல்களை, செயேல் - (எப்போதும்) நீ செய்யா திருப்பாயாக.

### (இ. பி.) வைராக்கிய சதகம்.

ஆமை யாருமைங் கையு போற் பொறியு ளடக்கலிற் புல னைந்துந், தீமை சேர்விட யங்களிற் செலா தமைத் துள்ளமே சிவையாக, சோம சேகரன் சரணமே சரணெனத் தொழுது நின் றழுதன்றோ, நாம நாவினாற் செபித்திலே யவத்திலே நா ளெலாங் கழித்தாயே.

(பொ-ரை.) ஆமையானது தன்பால் பொருந்திய ஐந்து அங்க த்தினையும் தீமை வருமிடத்துத் தனது ஒருடம்பின்கண் அடக்கிக் கொள்ளுதல்போலப் பஞ்சேந்திரியங்களையும் பாவங்களுக்கு ஏது வாய் வருகின்ற விஷயங்களிற் போகவொட்டாது விவேகத்தால் உள்ளடக்கி, நெஞ்சமே! கௌரியைப் பாகத்திலே வைத்த சந்திர சூடனாகிய சிவனது திருவடிகளே அடைக்கலமென வணங்கி நின் று, அத்திருவடிகளை அன்பால் நினைந்து, உருகி, அழுது, அவனது திருநாமமாகிய ஐந்தெழுத்தினையும் நாவினால் இடைவிடாது செ பித்தாயில்லை, மித்தையாகிய தேகபோகங்களைக் கருதி அவத்தொ ழிலாலே வாழ்நாளெல்லாம் வீணாளாகக் கழித்தனை—(எ-று.)

## 25· அரவ மாட்டேல்·

(பா-ம்.) அரவம் - பாம்பின் படத்தைப்போன்ற ஈாவை, ஆட்டேல் - (வீணை) நீ ஆட்டா திருப்பாயாக.

## 27. வஞ்சகம் பேசேல்.

(பா-ம்.) வஞ்சகம் - வஞ்சகமுடைய சொற்களை, பேசேல் - (எப்போதும்) நீ பேசா திருப்பாயாக.

28-அதி. கூடாவொழுக்கம். 1-செய்யுள்.

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க
ளைந்து மகத்தே நகும்.

(பொ-ரை.) வஞ்சனை பொருந்திய மனத்தை யுடையவனது மறைந்த ஒழுக்கத்தை (உடம்பாய் அவனோடு கலந்து நிற்கின்ற) பஞ்ச பூதங்களும் (கண்டு தம்) உள்ளே சிரிக்கும்—(எ-று.)

(ஆ-ர்.) வஞ்சகம் - (அநாவிர்த சொரூபமாயுள்ள தன்னையே தானாக வறிதற்கேதுவாய அகண்ட சாக்ஷாத்காரமுண்டாதற் பொருட்டுப்) "புத்தோகம் முத்தோகம் பூரணனந்தோகம், சத்தோகம் சித்தோகம் சாந்தோகம் - சுத்தோகம் - ஆரணங்க டேடரிய வற்புதோகம் சகல, காரணமாஞ் சைதன்யோகம்") என்றற் றொடக்கத்து வாக்கியங்களைக் கூறுவ தொழிந்து, முன்னே இன்பஞ் செய்வதுபோற் காட்டிப் பின்னே நிச்சயமாகத் துன்பஞ் செய்யும்) இதராகார வார்த்தைகளை, பேசேல் - (என்றும்) நீ பேசா திருப்பாயாக.

### (இ. பி) சிவஞான வள்ளலார்.

மனமொன்றும் வாயொன்று மின்றி யொருப்பட்ட மாதவர்பால், நனவினிற் றோன்றுவ தொன்றாக வுட்கி நடுக்கமுற, மனமொன்று வைத்துப்பின் வாயொன்று பேசிய வஞ்சகர்பால், கனவிலுந் தோற்றப் படுவதுண் டோகச்சி யேகம்பனே.

(பொ-ரை.) திருக்கச்சியின்கண் திருக்கோயில்கொண் டெழுந்தருளி யிருக்கின்ற ஏகம்ப மூர்த்தியானவர், மனம் ஒன்றை நினைத்தலும், வாக்கு ஒன்றைப் பேசுதலு மில்லாமல் அவ்விரண்டுந் தன்மயமாக ஒற்றுமை யடைந்த அன்பர்களிடத்துப் பிரமதேவன் அஞ்சி நடுக்கத்தை யடைய நனவிற் (சுழுத்தியில்) பிரத்தியட்சமாய் விளங்குவன். மனத்தினாலே ஒன்றை எண்ணிப் பிறகு வாக்கினாலே மற்றொன்றைப் பேசுகின்ற வஞ்சகர்களிடத்துச் சொப்பனத்திலும் பிரத்தியட்சமாக விளங்குவதுண்டோ! இல்லை—எ-று.

## 28. அழகலாதன செயேல்.

(பா-ம்.) அழகலாதன - சிறப்பல்லாத காரியங்களை. செயேல் - (என்றும்) நீ செய்யா திருப்பாயாக.

66-அதி. வினைத்தூய்மை. 4-செய்யுள்.

இடுக்கட் படினு மிளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்.

(பொ-ரை.) அசைவற்ற அறிவை யுடையவர் (தாம்) துன்பத்திலே படவரினும் (அது தீர்த்தற்பொருட்டு முன்செய்தவர்க்கு) இழிவுவந்த தொழில்களைச் செய்யமாட்டார்—(எ-று.)

(ஆ-ம்.) அழகலாதன - (அநாதிமுக்த சொரூபமாயுள்ள பிரஹ்ம சாட்சாத்கார முண்டாதற்பொருட்டு அதற்குச் சாதனமாகிய சிரவணாதிகளைச் செய்வ தொழிந்து பிறப் பிறப்பிற் கேதுவாய) * காமிய கர்மங்களை. செயேல்-(என்றும்) நீ செய்யா திருப்பாயாக.

எனவே † நிஷ்காமிய கர்மம் பரம்பரையாகச் சமாதி யப்பியாசத்திற்கு ஏதுவாமென்பது பெறப்பட்டது.

---

* காமிய கர்மம் - பயனைக் கருதிச் செய்யுங் கருமம்
† நிஷ்காமிய கர்மம் - பயனைக் கருதாது செய்யுங் கருமம்.

## 30. அறனை மறவேல்.

(பா-ம்.) அறனை - செய்யத்தக்க தருமத்தை, மறவேல் - (எந்நாளும்) நீ மறவா திருப்பாயாக.

கு-அதி. அறன்வலியுறுத்தல். 2-செய்யுள்.

அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறந்தலினூங் கில்லை கேடு.

(பொ-ரை.) (ஒருவனுக்குத்) தருமஞ் செய்தலின் மேற்பட்ட பெருக்கத்தைத் தருவதும் இல்லை, அத்தருமத்தை (மயக்கத்தால்) மறந்துவிடுகலின் மேற்பட்ட கேட்டைத்தருவதும் இல்லை-(எ-று.)

(ஆ-ம்.) அறனை - (ஏகசொரூபமாயுள்ள தன்னைத் தானென வுணர்தற்கு நாமரூப பரிணாமமும், சூன்யாகாரப் பரிணாமமுமாகாது அஸ்தி பாதிப் பிரிய வியாபக விளக்கத்தில் சித்தம் தைலதாரைபோல் நிலைபெற்றுப் பழகுதலாகிய) அறத்தினின்றும், மறவேல் - (பராமுகப்பட்டு) நீ மறந்துவிடா திருப்பாயாக.

### (இ. பி) கைவல்லிய நவநீதம்.

வாயுந் தம்பனஞ் சலத்தம்பனம் மணிமந்திர மருந்தாலே, தேயுத் தம்பனஞ் செய்திடி லதிலதிற் சிறந்தசத்திகளெங்கே, யோச் சச்சிதா நந்தமாய் வேறின்று நீனாந்திடா திருப்பாயேல், மாயச் சத்திபோ மிதன்றி மந்திர மறைகளிற் காணோமே.

(பொ-ரை.) வாயுஸ்தம்பனமும், சலஸ்தம்பனமும், தேயுஸ்தம்பனமும். மணி மந்திர ஔடதஙகளினலே (மந்திரவாதியாற்) செய்யப்படுமாயின், அவ்வப் பொருள்களில் விசேஷமாகவுள்ள சலன, திரவ. தாக சக்திகள் (நாசம். அல்லது திரோதானமாய் நிவிர்த்தி

த்துப்போமேயல்லது) எங்கே காணப்படும்; (அதுபோலவே) நீயும் (மாயைக்காதாரமாகிய) சச்சிதாநந்தாத்மகமான பிரமமாய் அந்நிய மொன்றையும் நினையா திருப்பாயாயின், (அசத்து சட துக்காத்மகமான) மாயாசத்தி (மீண்டெழாமல்) நிவிர்த்தியாய்விடும்; (ஜநந மரண ரூபமான மாயா நிவிர்த்திக்கு இத்திருசிய * விஸ்மரண மல்லாமல் †குப்தமான வசனம் சுருதிகளில் யாம் கண்டிலேம்-(எ-று.)

## 31. அனந்த லாடேல்.

(பா-ம்.) அனந்தல் - நித்திரையை, ஆடேல் - (அதிகமாக) நீ செய்யா திருப்பாயாக.

61-அதி. மடியின்மை. 5-செய்யுள்.

நெடுநீர் மறவி மடிதுயி னான்குங்
கெடுநீரார் காமக் கலன்.

(பொ-ரை.) சோம்பலும், (விரைவிற் செய்தற் குரியவைகளை) நீட்டித்துச் செய்யுங் குணமும், மறதியும், நித்திரையும், ஆகிய நான்கும் இறக்கும் இயல்பினை யுடையவர் விரும்பி யேறு மரக்கலமாம்—(எ-று.)

(ஆ-ம்.) அனந்தல் - (அநேக சொரூபமாயுள்ள தனது யதார்த்த சொரூபத்தினை யடைதற்கு இச்சையுடைய ஜிஞ்ஞாசுக்கள் சித்தம் சத்துவாகாரமாய்ப் பரிணமித்திருத்தல் வேண்டுமாதலின், இரஜோகுண தமோகுண பரிணமமாய் நிரந்தரம் சித்தவிருத்தியை விடாதிருப்பார்களாகி அஸ்தி பாதிப் பிரியாகாரமா யிருத்தலைத்தவிர்ந்து) நாம ரூபாகாரமாயாதலை, ஆடேல் - நீ செய்யா திருப்பாயாக.

---

* விஸ்மரணம் - நினையாமை.

† குப்தம் - இரகசியம்.

## (இ. பி.) கைவல்ய நவநீதம்.

மனதுசத் துவசொரூப மற்றிரண்டும் வந்துகலந் தனவ
வற்றை மாற்றி முற்போம், தனதுசன் மார்க்கந்தைவிடா
திருந்தபோது தமோகுணமும் ரஜோகுணமுஞ் சமிக்கும்
பின்னைக், கனபரிண மஞ்சலனம் போம்போனக்காற் கனங்
கழற்று நின்றவானகாசம் போலும், இனதுளமப் படியாமப்
பிரமத் தொன்றாய் நிருவிகற்ப சமாதியிலே நிற்குந் தானே.

(பொ-ரை.) மனதிற்குச சத்துவமே உபாதான மாகலின், அதற்கு அதுவே சொரூபமாம், ஏனைய விரண்டுஞ் சகாயமாக இடையே வந்து பொருந்தின. அவைகளைத் தக்க சாதனங்கொண்டு நீக்கினால் நீங்கும். தன்னுடைய இயற்கை யுருவமான சன்மார்க்கமாகிய தெய்வ சம்பத்தை விடாது அநுஷ்டித்து நிற்கும்போது விஷயபரிணாம வேதுவான தமோகுணமும், சலனபரிணாமவேதுவான ரஜோகுணமும், நசிக்கும்; பின்னே கனமாகிய விடய பரிணாமமும், ஒன்றினின்றொன்றிற் றுவாநிற்குஞ் சலன பரிணாமமும் அதன்கண் நீங்கிப்போம், அவை போகவே உன்மனமானது மேகபடலமாகிய களங்கமொழிந்து நின்ற சரற்கால வானம்போலச் சொச்சமாய், அசஞ்சல அதிசூட்சுமமாம்; ஆகவே, அப்படி அசஞ்சல அதிசூட்சுமமாகிய அத்தப் பிரஹ்மத்தில் ஏகரசமாய் நிருவிகற்ப சமாதியில் தானே நிற்கும்—(எ-று.)

## 32. கடிவது மற.

(பா-ம்.) கடிவது - ஒருவரைக் கடிந்து பேசுவதை, மற - நீ மறந்து விடுவாயாக.

### 10-அதி. இனியவைகூறல். 9-செய்யுள்.

இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

(பொ-ரை.) (பிறர் சொல்லிய) இனிய சொற்களானவை (தனக்கு) இன்பந்தருதலை அனுபவித்தறிகின்றவன், (அது நிற்க) கடுஞ் சொற்களை (பிறரிடத்தே) சொல்லுவது என்ன பயனைக் குறித்து—(எ-று.)

(ஆ-ம்) கடிவது - (அபரோக்ஷ சொரூபமாயுள்ள தன்னை அநாதியாகத் தொடர்ந்து கற்பனையாக) வருத்துவதாகிய நாம ரூப வடிவப் பிரபஞ்சத்தை, மற - (அந்தர்முகநாட்ட வப்பியாச த்தின் வலியால்) நீ மறந்து விடுவாயாக.

### (இ. பி.) கைவல்லிய நவநீதம்.

அசத்தி லெம்மட்டுண் டம்மட்டும் பராமுக மாகினு லம் மட்டும், நிசத்தி லுள்விழிப் பார்வையா யிப்படி நிரந்தரப் பழக்கத்தால், வசத்தி லுண்மன நின்றுசின் மாத்திர வடிவ மா யிடின்மைந்தா, கசத்த தேகத்தி லிருக்கினு மாநந்தக் கடல்வடி வாவாயே.

(பொ-ரை.) * மித்தையான நாம ரூபத்தில் எவ்வள வெவ்வள வாதரமுண்டோ அவ்வள வவ்வள வாதரமும் உபேட்சிக்கப் படுமாயின் அவ்வள வவ்வளவும் சத்தியரூபமான பிரமத்தில் அகமுகதிருஷ்டியுளதாம், (எவ்வள வெவ்வளவு பிரமதரிசனமாமோ ! அவ்வள வவ்வளவு நாம ரூபம் விடப்படும்.) இங்ஙனம், நிரந்தரம் (நெடுங்காலமாதரத்தோடு கூடிச்செய்யும்) அப்பியாசத்தால் மனம் உன் வச

* மித்தை - பிரஹ்மஞான மாத்திரத்தால் அழிந்துபோவது.

த்தில் நின்று சேதனமாத்திர ரூபமாய் ஸ்திதிபெறில் மைத்தா! வெறுக்கத்தக்க துக்கமயமான தேகத்திலிருப்பினும் நீ ஆநந்த சமுத்திர ரூபமாவாய்—(எ-று.)

## 33. காப்பது விரதம்.

(பா-ம்.) காப்பது - உன்னாலே காப்பாற்றத்தகுவது, விரதம் - விரதமேயாம்.

27-அதி. தவம். 5-செய்யுள்.

வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப் படும்.

(பொ-ரை.) (முயன்றால்) பெறவேண்டிய பயன்களை வேண்டியபடியே (மறுமையிலே தாம்) பெறலாமாதலால் செய்யத் தகுவதாகிய தவமானது இம்மையில் (அறிவுடையோராலே) முயலப் படும்—(எ-று.)

(ஆ-ம்.) காப்பது - (அபய சொரூபமாயுள்ள தனது யதார்த்த நிலையை அஞ்ஞான சந்தேக விபரீதங்களால் நழுவாது) காத்தற் கேதுவாயது, விரதம் - மாகர்த்தத்துவம், மாபோக்தத்துவம், மாத்தியாகத்துவ மென்னும் விரதங்களாம்.

(இ. பி.) கைவல்லிய நவநீதம்.

செய்கையுஞ்செய் விக்கையுமற் றிருக்குங் காந்தச் சிலைமலைமுன் னிரும்புகள்சேட் டிக்கு மாபோல், செய்கையுஞ் செய் விக்கையுமற் றிருக்கு மென்முன் சேடமான வுலகமெலாஞ் சேட்டை செய்யும், மெய்கலந்த விந்திரிய விகார ரூப விவகார விருத்திக்கும் விருத்தி தாழு, மெய்கலந்த சமாதிக்குஞ் சாட்சி யோநான் வெயில்போலென் றுறைத்தவனே விபுமா கர்த்தன்.

(பொ-ரை.) (ஒன்றைச்) செய்யுந் தன்மையும் செய்விக்குந் தன்மையும் (தான்) உடைத்தாகாமல் (ஏகமாய்ப் பெரிதாய் அசஞ்சலமாய்) இருக்கின்ற காந்தக் கல்லாகிய மலையின் முன்னே (அநேகமாய்ப் பரிச்சின்னங்களாய்த் தமக்கெனச் சேட்டையற்றுள்ள ஊசிமுதலிய இரும்புகள் சலியாநிற்குந் தன்மைபோல (ஒன்றைச்) செய்யுந் தன்மையும் செய்விக்குந் தன்மையும் இன்றி (ஏகமாய்ப் பூரணமாய்ச் சித்தாய்) இருக்கும் எனது சந்நிதியில் (அநேகமாய்ப் * பரிச்சின்னங்களாய்ச் சடமாயுள்ள பிரபஞ்சங்க ளெல்லாம் (தத்தம்) வியவகாரங்களைச் செய்யாநிற்கும் (உலக வியவகாரத்திற்கும், வியவகாரத்தின் அபாவத்திற்கும், சாட்சிமாத்திரமா யிருக்கும்) சூரியன்போலச சரீரத்தின்கட் பொருந்திய (நேத்திராதி) இந்திரியங்களால் விகாரரூபமான (காண்டன் முதலிய) வியவகாரங்களையுடைய மனோவிருத்திக்கும், மனோவிருத்தி தன்மயமாகப் பிரஹ்மத்தின்கட் பொருந்திய சமாதிக்கும், யான் சாட்சிமாத்திரமாய் உளனென்று அழுந்திய அநுபவ முடையவனே வியாபகமான மஹா கர்த்தனும்—(எ-று.)

## இதுவுமது.

அறுசுவையின் குணங்குற்ற மசுத்தஞ் சுத்த மபத்திய மபத்தியமெனவூ றாய்ந்தி டாமல், பொறுமையுடன் கிட்டினதைக் காட்டுத் தீப்போற் போகங்கள் புசிப்பவன்மா போகியாகும், சிறிதுபெரி துகடனதந் நியங்களன்மை தீமைகள்சேரினும்படிகச் செயல்போற் சித்தம், வெறிதிருக்கு மவனேமாத் தியாகி யாவன் விரதமிம்மூன் றுடையவரே வீடு ளோரே.

---

* பரிச்சின்னம் - கண்டம்.

(போ-ரை.) சுவைரசங்களையுடைய உணவுகளுள் இது குணமென்றும், இது குற்றமென்றும், இஃதசுத்தமென்றும், இது சுத்தமென்றும், இஃதபத்தியமென்றும், இது பத்தியமென்றும், பகுத்துப் பாராமல் சகிப்போடுகூட (தன்னை) நெருங்கிய சகலத்தையும் காட்டக்கினி புசிப்பதுபோல் (உணவாதி)போகங்களைப் புசியாநிற்பவன் மஹா போகியாம், சிறிதும் பெரிதுமான பொருள்கள் தன்னுடையதும் பிறருடையதுமான பொருள்கள் புண்ணிய பாவங்கள் தன்னை வந்தடையினும் (அடுத்த வர்ணங்களைப் பற்றாத) படிகத்தின் றன்மைபோலச் சித்தம் பற்றற்றிருக்குமவனே மஹாத்தியாகியெனப்படுவன் ; (மஹா கர்த்தன், மஹா போகி, மஹாத்தியாகி என்னும்) இம்மூவகை விரதமுமுடையோரே மோட்சத்தை யுடையராவர்—(எ-று.)

## 34. கிழமைப்பட வாழ்.

(பா-ம்.) கிழமைப்பட - உன் பொருள் பிறருக்கு உரிமைப்பட, வாழ் - நீ வாழ்வாயாக.

8-அதி. அன்புடைமை. 2-செய்யுள்.

அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு.

(போ-ரை.) அன்பிலார் (பிறர்க்குப் பயன்படாமையால்) எல்லாப் பொருள்களாலும் தமக்கே உரியர், அன்புடையார் (அவைகளாலே மாத்திரமல்லாமல்) தம்முடம்பாலும் பிறர்க்கு உரியர்-(எ-று.)

(ஆ-ம்.) கிழமைப்பட - (அபேத சொரூபமாயுள்ள தனது யதார்த்த நிலையில் உள்விழிப்பார்வை வாயிலாகச்) சித்தம் உரிமையடைந்து ஜிஞ்ஞாசுக்களது சித்தத்தையும், ஆன்மானுபவத்தில் உரிமை

டைவிக்குமாறு செய்வித்து, வாழ் - (நீ பிறழ்ச்சி யடையாது) லைத்திருப்பாயாக.

## (இ. பி.) தத்துவரத்னுவலி.

ஒப்பி லமல ஞேதிவைத்த வுரையை யோத லோது
வித்தல், செப்பும் பொருளைத் திரிவுமறத் தெளிகை பிற
ரத் தெளிவிக்கை, தப்பா ததனை மனத்தகத்தே தரிக்
கை யெனவுந் தானைந்தாம், வைப்பா யருந்தா மருந்தாகிச்
சிறந்த ஞான மகவினையே.

(பொ-ரை.) சமான ரகிதமாயும், இயல்பானே பாசங்களின்றி யவனுகியுமுள்ள பரமேசுரனுனவர், சீவர்களின் ஹிதத்தின்பொருட்டுக் கூறியுள்ள வேதார்த்தங்களை மக்கள் யாக்கையினை யெடுத்துள்ள வான்மாக்கள் சற்குருவாயிலாய்ச் சிரவணஞ் செய்தலும், அவ்வாறு சிரவணஞ் செய்ததை அதிகாரிகளுக்கு ஓதிவைத்தலும், ஓதிவைத்த அர்த்தத்தில் தனது சித்தம் அபரோக்ஷவடிவமா யமருமாறு சம்சய விபரீதமறச் சித்தத்தை நிறுத்திப் பழகுதலும், அதிதீவிரபக்குவிகளுக்கு அன்னோர் சித்தம் நிராலம்பஸ்திதியை யடையுமாறு அநுக்கிரகஞ்செய்தலும், அவ்வாறு அநுக்கிரகித்த நெறியினின்றும் பிறழ்ச்சி யடையாது அந்நெறியிலேயே தனது சித்தவிர்த்தி சிவாகாரமா யமர்ந்திருத்தலுமென இவ்வைந்தும் இனிப்பிறவா முடிவான பிறப்பினை யடைந்துள்ள ஞானுத்மாக்கள் அருந்துகின்ற மருந்தாகி வைக்கத் தக்கதாம்—(எ-று.)

## 35. கீழ்மை யகற்று.

(பா-ம்.) கீழ்மை-இழிவானவைகளை, அகற்று - நீ நீக்குவாயாக.

### 108-அதி. கயமை. 1-செய்யுள்.

*மக்களே போல்வர் கயவ ரவரன்ன*
*வொப்பாரி யாங்கண்ட தில்.*

(பொ-ரை.) கீழோர் (வடிவால் முழுதும்) மக்களைப்போலிருப்பர், அவர் மக்களை யொத்தாற்போன்ற வொப்பு (வேறிரண்டு சாதிகளிடத்து) யாம் கண்டதில்லை—(எ-று.)

(ஆ-ம்.) கீழ்மை - (அப்ரவிர்த சொரூபமாயுள்ள தன்னை யுணர்தற்கேதுவாய சமாதிக்குத் தடையான) காமாதிகளையும், நித்திரை, சோம்பல், ஆலசியம், அதிக உணவு முதலிய இழிவான குணங்களையும், அகற்று - நீ விட்டொழிப்பாயாக.

### (இ. பி.) பகவத்கீதை.

*சொன்ன வினைபோ யடங்கிடவே தோன்றுங் களிப்புங் காமமுமுன், பென்ன தியானென் கின்றதுவு மெரி போல் வெகுளி யொடுவலியு, முன்ன றவிர்ந்து சாந்திபெறுஞ் சாந்தி பெறவே யோரிடத்தும், பின்ன மடையா தொன்றாகி நின்ற பொருளின் பேருருவாம்.*

(பொ-ரை.) சொல்லிய இம்மனோ வாக்குக் காயங்கள் நிரோதமாய் வசமாகவே (தர்மத்தை * யதிக்கிரமணஞ் செய்த சந்தோஷத்தாற்) றோன்றும் மதமும், † விஷயாபிலாஷையும், முன்பேயுள்ள மமகார அகங்காரங்களும், அக்கினியைப்போற் றுரப்படுத்தா நிற்குங் குரோதமும், (சுருதி, ஸ்மிருதி ரூப சாஸ்திர விருத்த

---

* அதிக்கிரமணம் - மேற்கொள்ளல்.

† விஷயாபிலாஷை - விடய விச்சை.

மான) || அசத்தாக்கிரகமும் (ஆகிய இவற்றைக்) கருதுதலொழிந்து சாந்தி யடைவன், சாந்தி யடையவே யாதோரிடத்தும் வேறுபாடடையாமல் ஏகரசமாயுள்ள பிரஹ்மத்தின் பூரணரூபமான * அவஸ்திதிக்குச் சமர்த்தனாவன்—(எ-று.)

## 36· குணமது கைவிடேல்.

(பா ம்.) குணமது - குணமுள்ளதாகிய ஒன்றை, கைவிடேல் - (என்றும்) நீ விட்டு விடாதிருப்பாயாக.

51-அதி. தெரிந்து தெளிதல். 4-செய்யுள்.

குணநாடிக் குற்றமு நாடி யவற்றுண்
மிகைநாடி மிக்க கொளல்.

(பொ-ரை.) (குணங் குற்றங்களில் ஒன்றே யுடையார் உலகில் இல்லாமையால்.) (ஒருவனது) குணங்களை ஆராய்ந்து, (மற்றைக்) குற்றங்களையும் ஆராய்ந்து, (பின்பு) அவ்விருவகையுள்ளும் மிகுந்தவற்றை ஆராய்ந்து, மிகுந்தவற்றாலே (அவனை) அறியக் கடவன் —(எ-று.)

(ஆ-ம்.) குணமது - (அபரோக்ஷ சொரூபமாயுள்ள ஆத்மாநந் தஞ் சித்திக்கற்கேதுவாய) சாதனங்களை. கைவிடேல் - நீ விடாது மேற்கொண் டொழுகுவாயாக.

### (இ. பி.) பிரமகீதை.

சத்தியத் தான்மிகு சாந்தி தாந்தியா
லெத்தொழி லும்மிசை வற்றி ருத்தலாற்

---

|| அசத்தாக்கிரகம் - அசத்தைக் கிரகித்தல்.
* அவஸ்திதி - இருப்பு.

*பத்தியா லிறைவனைப் பண்ணும் பூசையாற்*
*சுத்தமே வேதாந்தமெய்த் துணிவு தோன்றுமால்.*

(பொ-ரை.) சத்தியத்தினாலும் மிகுந்த * சாந்தி ¶ தாந்திகளாலும் எந்தக் கருமங்களிலும் பொருந்தலற்றிருத்தலினாலும், பக்தியினாற் பரமசிவனைச் செய்யும் பூஜா விசேஷத்தினாலும், பரிசுத்தம் பொருந்திய வேதாந்தத்தின் உண்மையான நிச்சய முண்டாகும்—(எ-று.)

## 37. கூடிப் பிரியேல்.

(பா-ம்.) கூடி - (நல்லவரோடு) சிநேகித்து, பிரியேல் - (பின்பு அவரை விட்டு) நீ நீங்கா திருப்பாயாக.

**81. அதி. பழைமை. 7-செய்யுள்.**

*அழிவந்த செய்யினு மன்பறா ரன்பின்*
*வழிவந்த கேண்மை யவர்.*

(பொ-ரை.) அன்புடனே பழையதாய் வந்த நட்பினையுடையவர் (தமக்கு) அழிவு வந்தவைகளைச் செய்தாரானாலும், (அந் நட்பினிடத்தே) அன்பு நீங்கார்—(எ-று.)

(ஆ-ம்.) கூடி - (அப்பிரமேய சொரூபமாயுள்ள ஆத்மாவை அகண்டாகார விருத்தி வாயிலாகச்) சேர்ந்து, பிரியேல் - (பின்னர் விஷயாகார வாயிலாகப் பிரிந்து நீ அல்லற்படா திருப்பாயாக.

---

* சாந்தி - மனோ விருத்தி விடய வியாபாரமின்றி வைராக்கியமயமாய் நிற்றல்.

¶ தாந்தி - இந்திரிய விருத்தி விடய வியாபாரமின்றி வைராக்கியமயமாய் நிற்றல்.

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.



(இ. பி.) ஞானவாசிட்டம்.

ஓரிடம்விட் டோரிடத்தே யுள்ளமுறி லவற்றினடு வுண்மை யாகிப், பேரிலதா யுணர்விலதாய்ச் சடமிலதா யதுநியாய்ப் பிரிவே லென்றுங், கூரியபுந் தியினாலே யூகித்துக் குடும்பி யெனுங் குறிப்பை மாற்றித், தூரியதாம் படிமனத்தின் றுவக்கறுத்து விருந்தபடி துணிந்து நிற்பாய்.

(பொ-ரை.) ஒரு விஷயத்தினின்ற மற்றொரு விஷயத்தில் மனம் பொருந்தினால், அவ்விரண்டின் மத்தியில் சத்தாமாத்திரமாகி யும், நாமமில்லாததாகியும், விஷய வுணர்ச்சி யில்லாததாகியும், விஷயமிலலாததாகியு மிருக்கின்ற அது வென்னும் பிரமமும், நீ யென்னுங் கூடஸ்தனும், ஐக்கியமான சிதாநந்த சொரூபமுமாய்ப் பிரிவற்றிருப்பாய், எப்போதும் மிகுந்த நுட்பமாகியவறிவினால் யுக்தியாய் விசாரித்து (நான்)சமுசாரி யென்கின்ற கருத்தைக் கெடுத்து, வேரோடே கெடும்படி மனத்தின் துவந்துவந்தங்களைக் கெடுத்துச் சுபாவமா யிருந்தபடியே தெளிந்திருப்பாய்—(எ-று.)

## 38. கெடுப்ப தொழி.

(பா-ம்.) கெடுப்பது - (பிறரைக்) கெடுப்பதை, ஒழி - (எக்காலத்திலும்) நீ விட்டிருப்பாயாக.

21-அதி. தீவினையச்சம். 4-செய்யுள்.

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழி
னறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு.

(பொ-ரை.) (ஒருவன்) பிறனுக்குக் கேட்டைத் தரும் வினையை மறந்தும் எண்ணாதிருக்கக் கடவன்; எண்ணுவானாயின், அவ

வெண்ணினவனுக்குக் கேட்டைத் தரும் வினையை * அறக்கடவுள் எண்ணுவான்—(எ-று.)

(ஆ-ம்.) கெடுப்பது - (அபோக்த சொரூபமாயுள்ள தன்னை யடையப் பழகும் பழக்கத்திற்கு) வெதிரித்தமாயுள்ள, † ஈடணைத் திரயத்தை, ஒழி - (பிரயத்தன பூர்வகமாக) நீ ஒழிப்பாயாக.

## (இ. பி.) சிவஞான வள்ளலார்.

மண்ணாசை பொன்னாசை மாதரா ராசையுயர்
விண்ணாசை யாவும் வெறுத்திட்டா—லெண்ணரும
முள்ளபடி யானந்த யோகத்தின் மூழ்கியுடல்
விள்ளளவு நின்று விடு.

(பொ-ரை.) காணி, வீடு, முதலியவற்றில் விருப்பம், புத்திர விருப்பம், பெண் விருப்பம், மேலாய சுவர்க்க விருப்பம், ஆகிய இவ்வெல்லா விருப்பங்களும் சமாதி யப்பியாசத்திற்குத் தடையா யிருப்பதால் அவற்றின் தோஷங்களைக் கண்டு ஒழித்து, பின்னர் ஒன்றுங் கருதாது நீ உள்ளவாறு பிரஹ்மானந்த யோகசமாதியில் அழுந்தித் தேக பதன பரியந்தம் நீ இருப்பாயாக—(எ-று.)

## 39. கேள்வி முயல்.

(பா-ம்.) கேள்வி - (பெரியோர் சொல்வதைக்) கேட்பதற்கு, முயல் - நீ முயற்சி செய்வாயாக.

---

* அறக்கடவுள்-தர்ம சொரூபியான விறைவன்.

† ஈடணைத்திரயம் - மூவாசை; அவை மனைவி, மக்கள், பொருள்மீதுள்ள வாசை.

42-அதி. கேள்வி. 4-செய்யுள்.

கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை.

(பொ-ரை.) (உறுதி நூல்களைத் தான்) கற்காதவனானாலும், அவற்றின் பொருள்களைக் கற்றறிந்தவர் சொல்லக்) கேட்கக் கடவன், அக்கேள்வியானது ஒருவனுக்குத் தளர்ச்சி வந்தவிடத்துப் பற்றுக்கோடாந் துணையாம் (ஆதலால்)—(எ-று.)

(ஆ-ம்.) கேள்வி - (அமனசகவடிவமாகிய தனது உண்மை நிலை விளங்கும் பரியந்தம் சாஸ்திர உணர்ச்சியும், பிரஹ்ம நிஷ்டையுமுடைய தேசிகர் வாயிலாகச்) சிரவணஞ்செய்ய, முயல் - (பேரன்புடன்) நீ பிரயத்தனஞ் செய்வாயாக.

(இ. பி.) உபதேசவுண்மை.

ஆதலிமுன் மூவர்கட்கு மருமை யான வற்புதமா வாக்கியமே கேட்க வேண்டும், ஏதமுறு வாக்கியங்கள் கேட்க லாகா விரண்டற்ற வத்துவிதா னந்த ரான, போதகுரு வினையளிபோற் றேடிக் கண்டு பொய்யற்றுப் பணிவிடைகள் செய்து ஞான, சாதகத்துக் கிடரான விடய மெல்லாந் தள்ளிநின்று வுண்மைநிலை தானே யெய்தும்.

(பொ-ரை.) ஆகையினாலே, திரிமூர்த்திகட்கும் கேட்பதற்கு அருமையுடையதாய அற்புதமான * மஹாவாக்கியத்தின் அர்த்தமே கேட்கத் தக்கதாம், ஏனைய குற்றமுள்ள வாக்கியங்களின் அர்த்தங்கள் கேட்கத்தக்கன வன்றும்.

* மஹாவாக்கியம் - ஜீவப் பிரஹ்மங்களின் ஐக்கியத்தை யறிவிக்கும் வாக்கியம்.

† சஜாதியாதி பேதமிறந்த அத்துவிதானந்த சொரூபமான ஞானசிரியரை மலர்களிலுள்ள தேனை யுண்ணுமாறு திரிகின்ற வண்டுகள்போலத் தேடிப்போய்த் தரிசித்து, உண்மையான பணி விடைகளைச்செய்து, ஞானப்பியாசத்திற்குத் தடையாயுள்ள விஷயங்களை யெல்லாம் (பிரயத்தின பூர்வகமாக) நிக்ரகித்து, (ஞானசிரியர் கூறியவாறு) ஒழுகினால் யதார்த்த நிலை தானே சித்திக்கும் —(எ-று.)

## 40. கைவினை கரவேல்.

(பா-ம்.) கைவினை - (மனந்தெளிந்து செய்வதாகத் துணிந்த உனது) கைத்தொழிலை, கரவேல் - (அவசியமாகத் தெரிவித்தற் குரியவர்க்குத் தாமத குணத்தால்) நீ மறைக்கா திருப்பாயாக.

67-அதி. வினைத்திட்பம். 8-செய்யுள்.

கலங்காது கண்ட வினைக்கட் டுளங்காது
தூக்கங் கடிந்து செயல்.

(போ-ரை.) (மனம்) தெளிந்து (செய்வதாகத்) துணிந்த தொழிலினிடத்து (பின்) அசைதலில்லாமல் ஆலசியத்தை ஒழித்துச் செய்யக்கடவர்—(எ-று.)

(ஆ-ர்.) கைவினை - (அமிர்த சொரூபமாயுள்ள தனது உண்மைநிலை விளங்குமாறு செவ்வையாகச் சித்தித்த) நிஷ்டையினை (அதி தீவிர பக்குவிகளுக்கு உரைக்கும்பொழுது), கரவேல் - (என்றும்) நீ மறைக்கா திருப்பாயாக.

---

† சஜாதி - தன்னினம்.
விஜாதி - வேற்றினம்.
சுவகதம் - அவயவம்.

(இ. பி.) வேதாந்த சூளாமணி.

வேதமுத லாகியநூ லனைத்தினுஞ்சொற் பொருளை விளங்கியிடக் கரதலா மலகமெனக் காட்டிப், போதமய மாகியபே ரானந்தத் தழுத்தும் பொருவிகந்த விந்நூலை முத்திபெறற் குரிய, சாதனநான் கினையுமடைந் தெவராலு மென்றுங் கடுப்பரிய பிறவிநோய் தணிப்பதனுக் கெண்ணி, யாதரவி னருட்குரவன் றனைத்தேடி யுருகு மன்புடையோர் தமைக்காணி னளித்திடுக வுவந்தே.

(பொ-ரை.) வேதமுதலாயுள்ள எல்லா நூல்களிலுஞ் சொல்லப்பட்ட பொருள் யாதோ, அதனை அதிகாரிகட்கு நன்கு விளங்குமாறு உள்ளங்கை நெல்லிக்கனிபோற் காட்டி, அவர்களை ஞானமயமாய் விளங்கும் * பேரானந்த நிலையில் ஆழ்த்தத்தக்க ஒப்பற்ற இந்த ஞான சாஸ்திரத்தை முத்தி யெய்தற்குரிய † சாதன நான்கினையு மடையுமா றடைந்து யாவராலேனும் என்றுந் தடுத்தற்கரிய பிறவிநோய் தொலைப்பதற் கெண்ணமுற்று மிக்க ஆசைகொண்டு கருணைக்கடலாகிய ஞானாசிரியரை எங்கணுந் தேடி மனமுருகுகின்ற அன்புடைய மாணாக்கர் யாவரோ அவர்களைக் காணின், மிக்க மகிழ்வுகொண்டு தந்திடுதி—(எ-று.)

## 41· கொள்ளை விரும்பேல்.

(பா-ம்.) கொள்ளை - (பிறர் பொருளைக்) கொள்ளையிட, விரும்பேல் - (என்றும்) நீ ஆசைப்படா திருப்பாயாக.

---

* பேரானந்த நிலை - நிரதிசயாநந்தாநுபவம்.

† சாதன நான்கு - நித்தியா நித்திய வஸ்து விவேகம், இகாமுத்திரார்த்த பலபோக விராகம், சமாதி சட்க சம்பத்து, முமுட்சுத்வம் என்பனவாம்.

29-அதி. கள்ளாமை. 2-செய்யுள்.

உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வே மெனல்.

(பொ-ரை.) (குற்றங்களைத் தமது) நெஞ்சினாலே நினைத்தலும் (ஒருவர்க்குப்) பாவமேயாகும்; (ஆதலால்.) பிறனது பொருளை அவனறியாத வகையினாலே வஞ்சித்துக் கொள்வோமென்று நினையாதிருக்கக் கடவர்—(எ-று.)

(ஆ-ம்.) கொள்ளை - (அலோப சொரூபமாயுள்ள பிரஹ்ம சாட்சாத்காரத்தை யடைதற்கு விரோதியாயுள்ள) உலகாகா. இன்பத்தை, விரும்பேல் - (என்றும்) நீ இச்சியா திருப்பாயாக.

(இ. பி.) ஞானவாசிட்டம்.

எத்தனையெத் தனைத்தா யகிலத்தைப் பாழ்சுடா ரெறிக்குஞ் சோதி, யத்தனையத் தனைதோன்று மெந்நாள் மட்டெனத்துர்விடா மந்நாள் மட்டுங், கந்துவமார் பொருளெய்தா சகலமுமே யொழிச்சேடந் தானுஞ் சித்தந், தொக்கறவெப் புலையெல்லாம் போகாதேற் சமமான சோதி தோன்று.

(பொ-ரை.) சகத்தை எவ்வளவு எவ்வளவு நீக்கினையோ பரமப் பிரகாசமா யொளிரும் பரமாத்மாவானது அவ்வள வவ்வளவாக விளங்கும், எக்காலமட்டும் சகலமும் விடவில்லையோ அக்காலமளவும் உண்மையாகிய வஸ்து வந்தடையாது. சகல திருசியங்களும் விடபட்டால் மிஞ்சின † திருக்குவே தானாகும்; மனத்துவ

† திருக்கு - அறிவு. திருசியம் - அறியப்படுவது.

ந்துவ மொழியப் பேதங்க ளனைத்தும் நீங்காவிடின் பூரணமாகிய பரமாத்ம சொரூபப் பிரகாசந் தோற்ற மாட்டாது—(எ-று.)

## 42· கோதாட் டொழி.

(பா-ம்.) கோதாட்டு - குற்றம் பொருந்திய விளையாட்டை; ஒழி - நீ நீக்குவாயாக.

44-அதி. குற்றங்கடிதல். 9-செய்யுள்.

வியவற்க வெஞ்ஞான்றுந் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை.

(பொ-ரை.) எக்காலத்திலும் (தான் மிகவும் உயர்ந்த காலத்திலு மென்றபடி) தன்னை (மதத்தினாலே) நன்கு மதியாதிருக்கக் கடவன், (தனக்கு) நன்மையைத் தாராத தொழில்களை (மானத்தினால்) விரும்பாதிருக்கக் கடவன்—(எ-று.)

(ஆ-ம்.) கோதாட்டு - (உந்நத சொரூபமாயுள்ள அகண்ட சாட்சாத்கார முண்டாகாவாறு, நாம ரூபங்களை முன்னிட்டுக்) குற்றத்தையே விளைவிக்கும் மனோ இந்திரிய வியாபாரங்களை; ஒழி - நீ விட்டகன் றிருப்பாயாக.

### (இ. பி.) நிஷ்டாநுபூதி.

ஆதனத் திருந்தே சாதனை புரிந்தா லடங்கிடாப் பொறிபுல னடங்கும், ஆதனத் திருந்தே சாதனை புரிந்தா லடங்கிடு மனோ விடயங்க, ளாதனத் திருந்தே சாதனை புரிந்தா லறிவறி யாமைக ளொழியு, மாதனத் திருந்தே சாதனை புரிந்தா லகண்டவீ டடைவது நிசமே.

(பொ-ரை.) எவ்விதமாயிருந்தால் அந்தக்கரண விருத்தி சொரூபத்தி லயமாகுமோ அவ்விதமாய ஆசனத்திலிருந்து பிரஹ்ம நிஷ்டாப்பியாசஞ் செய்தால் அடங்காத இந்திரியங்களும் அவைகளின் விஷயவாசனைகளும் ஒடுங்கும், மேற்கூறிய ஆசனத்திலேயிருந்து பிரஹ்ம நிஷ்டாப்பியாசஞ் செய்தால் மனோவிருத்திகளனைத்தும் ஒடுங்கும். மேற்கூறிய ஆசனத்திலே யிருந்து பிரஹ்ம நிஷ்டாப்பியாசஞ் செய்தால் அறிவும் அறியாமையுமாகிய விரண்டும் நீங்கும், மேற்கூறிய ஆசனத்திலே யிருந்து பிரஹ்ம நிஷ்டாப்பியாசஞ் செய்தால் அகண்டாகார சின்மயாநந்த வீட்டைப் பெறுவது சத்தியம்—(எ-று.)

## 43. சக்கரநெறி நில்.

(பா-ம்.) சக்கர நெறி - (அரசன்) ஆக்கினை வழியில், நில் - நீ அடங்கி யிருப்பாயாக.

55-அதி. செங்கோன்மை. 2-செய்யுள்.

வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி.

(பொ-ரை.) உலகத் துயிர்களெல்லாம் (மழை பெய்யுமாயின்) அம்மழையை நோக்கி உளவாகா நிற்கும் (என்றாலும்,) குடிகள் அரசனது (செங்கோ லுண்டானால்) அச்செங்கோலை நோக்கி உளவாகா நிற்கும்—(எ-று.)

(ஆ-ம்.) சக்கர நெறி - (ஏகாத்ம சொரூப சாட்சாத்கார வடைவின் பொருட்டுத் தேசிகோத்தமரது) உபதேச மார்க்கத்தில், நில் - (மாறுதலின்றி) நீ நிற்பாயாக.

(இ. பி.) கைவல்லிய நவநீதம்.

அரவன்று கயிறென் றுற்போ லாளன்று தறியென் றுற்போல், குரவன்சொல் லுபதே சத்தாற் கூறுநூ லொளி யைக் கொண்டு, புரமன்று புவன மன்று பூதங்க ளன்று ஞா னத், திரமென்றும் பிரம மென்றுந் தெளிவதே யபவா தங்காண்.

(பொ-ரை.) இது சர்ப்பமன்று, இரச்சுத்தான் என்று தெளிந் தாற்போலும், இவ்வுரு புருடன் அன்று, கட்டைதான் என்று தெளிந்தாற்போலும், தேசிகர் உபதேசித்த உபதேச வலிகொண் டும், (அத்தேசிகர் உபதேசித்தபடியே) உபதேசித்தருளும் சாஸ்திர விவேகத்தைக்கொண்டும், இது சரீரமன்று, இது புவனமன்று, இது பூதங்களன்று, ஸ்திரமான சொரூபஞான மென்றும் பிரஹ்மமே என்றும் (சம்சயமின்றித்) துணிவதே * அபவாதமாம் —(எ-று.)

## 44. சான்றோ ரினத்திரு

(பா-ம்.) சான்றோர் - பெரியோருடைய, இனத்து - கூட்டத்தில், இரு - நீ சேர்ந்திருப்பாயாக.

45-அதி. பெரியாரைத் துணைக்கோடல். 6-செய்யுள்.

தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில்.

(பொ-ரை.) யோக்கியராகிய இனத்தினை யுடையனாகித் தானும் (அறிந்து) நடக்க வல்லவனைப் பகைவர் செய்யக்கிடந்த தொரு துன்பமும் இல்லை—(எ-று.)

* அபவாதம் - அதிஷ்டான மாத்திரமாக மிஞ்சி நிற்றல்.

(ஆ-ம்.) சான்றோர் - (சர்வாத்ம சொரூபானுபவம் பெற்றய்யு மாறு புறமுகச் சமாதி அகமுகச் சமாதி யென்னும் இருவகைச் சமாதியும் பெற்று அறிவானந்த சொரூபமாய் விளங்கும்) மகான்களது, இனத்து - சங்கத்திலேயே, இரு - நீ சேர்ந்திருப்பாயாக.

## (இ. பி.) அத்துவித வுண்மை.

*மேலாஞ் சதுட்ட சாதனங்கள் மேவிநிறைந்த பேர்க்குரைக்கின், மேலா மதுவா மெனத்திடமாய் விளங்கு மவையில்லாதவர்க்கு, மேலாம் பரமன் மான்மழுவாய் விளங்கியுரைத்தும் விளங்காது, மேலாஞ் சாதனங்கள்வர மேவ வேண்டுஞ் சாது சங்கம்.*

(போ-ரை.) மேலாகிய சாதனசதுட்டய சம்பத்துக்களை யடைந்து சாந்தியாதி குணங்கள் நிறைந்த அதிதீவிர * முமுட்சுகளுக்கு அகம்பிரஹ்ம நிச்சயத்தைப் போதித்தால் மகத்திற்கெல்லாம் மகத்தாய் விளங்கும் பிரஹ்மஸ்வரூபமே நாமென்ற அஞ்ஞான சந்தேக விபரீதங்களறக் † கரதலா மலகம்போல விளங்கும். அச்சாதன சதுட்டய சம்பத்துக்களில்லாத பாமர விஷயிகளுக்கு எப்பொருட்டு மேலாகிய பரசிவனே மான் மழு சகிதராய்ப் பிரத்தியட்சமாகி மேற்கண்ட நிச்சயத்தைப்போதித்தாலும் அது பேதபுத்திரூபமாயுள்ள மாயையின் பலத்தால் செவ்வனே விளங்காது, (ஆதலால்,) மேலாய சாதன சதுட்டய சம்பத்துக்கள் வருவதற்குச் ‡ சாதுசங்கப் பயிற்சி அத்தியாவசியம் வேண்டும்—(எ-று.)

---

* முமுட்சு - மோட்சவிச்சை யுடையவன்.

† கரதலாமலகம் - உள்ளங்கை நெல்லிக்கனி.

‡ சாதுசங்கம் - அறிவுடையோரது கூட்டம்.

## 45. சித்திரம் பேசேல்.

(பா-ம்.) சித்திரம் - ஆச்சரியத்தை விளைவிக்குஞ் சொற்களை, பேசேல் - (வீணாக) நீ பேசா திருப்பாயாக.

20-அதி. பயனில சொல்லாமை. 3-செய்யுள்.

நயனில னென்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கு முரை.

(பொ-ரை.) பயனில்லாத பொருள்களை விரித்து (ஒருவன்) சொல்லுஞ் சொல்லே இவன் நீதியில்லாதவ னென்பதனை யறிவிக்கும்—(எ-று.)

(ஆ-ம்.) சித்திரம் - (சர்வஞ்ஞ சொரூபமாயுள்ள பிரஹ்மத்தை யடைய அகமுகப்பட்டிருந்து பின் பிராரத்த வசத்தினால் புறமுகப்படுங்கால் கயிற்றிற் பாம்புபோலத் தன்னிடத்திற் கற்பிதமாயுள்ள நாம ரூபங்களில் யாது பற்றியாவது) புதுமையாக, பேசேல் - நீ பேசா திருப்பாயாக.

### (இ. பி.) கைவல்லிய நவநீதம்.

சென்றது கருதார் நாளைச் சேர்வது நினையார் கண்முன்
நின்றது புசிப்பார் வெய்யி னிலவாய்வின் விழுது வீழ்ந்து
பொன்மின சவம்வாழ்ந் தாலும் புதுமையா வொன்றும் பாரார்
நன்றுதீ தென்னார் சாட்சி நடுவான சிவன் முத்தர்.

(பொ-ரை.) (பிரபஞ்சத்தில் மித்தியா புத்தியால் இறந்தகாலத்தில்) போனதைப்பற்றி நினையார்கள், எதிர் காலத்தில் இனி வராநிற்பதைப் பற்றியும் நினையார்கள், நிகழ்காலத்தில் கண்முன்னே (பிராரத்த வலியால் வந்து) நிற்கின்ற போகங்களைப் புசி

யா நிற்பர்கள், சூரிய கிரணமான வெயிலானது சந்திர கிரணமான நிலவைப்போலச் சீதளமாகி (ஆல விருட்சத்திற்போல) ஆகாசத்தினின்றும் விழுதாக விறங்கி, மரித்துப்போன பிரேதம் பின் ஜீவித்தாலும். ஆச்சரியமாக வொன்றையும் நாடார்கள், (ஒன்றை இது) நன்றென்றும், (மற்றொன்றை) இது தீதென்றுஞ் சொல்லார்கள், சாட்சியாய்த் * (திரிபுடியின்) நடுவான சீவன் முத்தர்கள் —(எ-று.)

## 46. சீர்மை மறவேல்.

(பா-ம்.) சீர்மை - சிறப்பான காரியங்களை, மறவேல் - (என்றும்) நீ மறவா திருப்பாயாக.

24-அதி. புகழ். 7-செய்யுள்.

புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
யிகழ்வாரை நோவ தெவன்.

(பொ-ரை.) (தமக்குப்) புகழுண்டாக வாழமாட்டாதவர் (அது பற்றிப் பிறரிகழ்ந்தவிடத்தே இவ்விகழ்ச்சி நமது மாட்டாமையால் வந்ததென்று) தம்மை நோவாதவராகித் தம்மை இகழ்ந்து பேசுபவரை வெறுப்பது என்ன நினைத்து—(எ-று.)

(ஆ-ம்.) சீர்மை - (சர்வகத சொரூப அகண்ட சாட்சாத்காரத்தை யடைதற் கேதுவாய) தியான யோக சமாதிகளை, மறவேல் - (வியவகார காலத்திலும்) மறவா திருத்தலாகிய யூகத்தினைப் பெற்றிருப்பாயாக—(எ-று.)

---

* திரிபுடி - ஞாதுரு. ஞானம், ஞேயம். (திரி - மூன்று, புடி - பக்கம்.)

(இ. பி.) கைவல்லிய நவநீதம்.

விவகார வேளையெல்லாஞ் சமாதி யென்றால் விகற்ப மன்றோ மனமலைந்து விடாதோ விட்டால், அவதான நழுவு மன்றோ வென்று யாகி லதற்கொருதிட் டாந்தங்கே ளாசை கொண்டு, நவமாகப் பரபுருடன் றன்னைக் கூடி நயந்துசுக மனுபவித்த நாரி நெஞ்சந், தவமாக மனைத்தொழில்கள் செய்யும் போதுந் தழுவியநு பவித்தசுகந் தனைவி டாதே.

(பொ-ரை.) வியவகரிக்குங் காலமெல்லாஞ் சமாதி செய்த லெனத் தேவரீர் கூறின், பலவாகச் சிதையுமல்லவோ ! பலவாகச் சிதையின் மன மலைந்துவிடாதோ ! அங்ஙன மலைந்து விடுமாயின், உண்மை ஞானம் நழுவுமல்லவா ! இதனுக் கென் செய்துமெனச் சங்கிப்பையாயின், நீ விளங்குவியதற்காக வொரு திருட்டாந்தமுளது அதனை யான் கூறக்கேளுதி மிக்க வாசைகொண்டு புதிதாக வொரு சோர நாயகனைக் கூடி மிகவும் விருப்பமுற்றுச் சுகத்தை யனுபவி த்த வொரு ஸ்திரியின் மனமானது நோன்பு வழுவா தியற்றற் குரிய வில்லறமார்க்கத் தொழில்களைச் செய்கிறபோதும் சோரநா யகனைத் தழுவி யனுபவித்த மிக்க சுகப்பெருக்கை விடுமோ ! விடா தே, அம்மனம் அதுபோன்றிருக்கும்—(எ-று.)

## 47. சுளிக்கச் சொல்லேல்.

(பா-ம்.) சுளிக்க - கேட்பவர் கோபிக்கும்படியாக, சொல் லேல் - (யாதொன்றும்) நீ பேசா திருப்பாயாக.

20-அதி. பயனில சொல்லாமை. 1-செய்யுள்.

பல்லார் முனியப் பயனில சொல்லுவா
னெல்லாரு மெள்ளப் படும்.

(பொ-ரை.) (அறிவுடையோர்) பலரும் (கேட்டு) வெறுக்க, பயனில்லாத சொற்களைச் சொல்லுகின்றவன் எல்லாராலும் இகழப்படுவான்—(எ-று.)

(ஆ-ம்.) சளிக்க - (சர்வாகாரமாயுள்ள பிரம்மானு பூதியை யடைய, அப்பியாசஞ் செய்யுமிடத்து அது) சுருங்குதற் கேதுவாய சொற்களை, சொல்லேல் - (பகிர்முகப்பட்ட காலத்தில்) நீ பேசா திருப்பாயாக.

### (இ. பி.) சிவானந்தமாலை.

ஓடியுழன் றிந்த வுடம்பை யொறுத்தேந்
பாடியிடற் றைப்புன் படுத்தாதே—கேடுபிறர்க்
கும்மால் விளையாதே யொன்றுடனுந் தாக்காதே
சும்மாவே காணுஞ் சுகம்.

(பொ-ரை.) (மூர்த்தி, தலம், தீர்த்த மென்று) விரைந்து சென்று அலைந்து இந்தச சரீரத்தை வருத்தாதே, (சாஸ்திரங்களை முகபாடஞ் செய்து அவற்றினைப்) பாடிக் கண்டத்தினைப் புண்படுத்தாதே, பிறர்க்குக் கெடுதி உன்னு லுண்டாகுமாறு செய்யாதே, (நாம ரூபங்களுள்) யாதானும் ஒன்றோடும் சம்பந்தப்படாதே, ஆத்ம சுகமானது மன வாக்குக் காயங்களின் வியாபாரமின்றி யிருந்தால் பிரகாசிக்கும்—(எ-று.)

## 48. சூது விரும்பேல்.

(பா-ம்.) சூது - சூதாடுதற்கு, விரும்பேல் - (ஒரு பொழுதும்) நீ ஆசைகொள்ளா திருப்பாயாக.

### 94-அதி. சூது. 1-செய்யுள்.

வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉந்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.

(பொ-ரை.) (தான்) வெல்லும் வலிமை யுடையனாயினும் சூதா டுதலை விரும்பாதிருக்கக் கடவன், (வென்று பொருள் பெறுவார் உண்டென்றால்) அவ்வென்ற பொருளும் (இரையால் மறைந்த தூண்டி விரும்பினை (இரையெனக் கருதி) மீன் விழுங்கினாற் போலும்—(எ-று.)

(ஆ-ம்.) சூது - (சர்வாபாவ சொரூப ஸ்திதி பெருமை காரண மாகச்) சூதாடு கருவி புரண்டு பல பல வகையாய் மாறி வருவது போல வரும் பிறப்பிறப்பிற் கேதுவாய காரியங்களை, விரும்பே ல் - (ஒருபோதும்) நீ இச்சியா திருப்பாயாக.

## (இ. பி.) கைவல்லிய நவநீதம்.

*வாராயென் மகனே தன்னை மறந்தவன் பிறந்திறந்து*
*தீராத சுழல்காற் றுற்ற செத்தைபோற் சுற்றிச் சுற்றிப்*
*பேராத கால நேமிப் பிரமையிற் றிரிவன் பேதாய்*
*ஆராயுந் தன்னைத் தானென் றறியுமவ் வளவுந் தானே.*

(பொ-ரை.) வாராய் என் மகனே! (பிரத்தியக் அபின்ன பரமா ன்மாவான) தன்னை (நான் யாரென்று விசாரித்து) அறியாதவன் † (சுர நர திரியக்காதி யோனிகளிற்) சனித்து மரித்து நீங்காத சுழல் காற்றிலகப்பட்ட திரணம்போல இகலோகத்தினின்று பர லோகத்திற்குப் போவதும், பரலோகத்தினின்றும் மீண்டு இகலோ கத்தில் தலைகீழாக வீழ்வதுமாய் ஒழியாத காலசக்கரமாகிய சுழற்சி யிற் சுழலாநிற்பன், ஞான திருஷ்டியினால் யாரென்று விசாரித் தறியத்தக்க ‡ பிரத்தியகான்மாவாகிய தன்னைப் பிரஹ்மமென்று சாட்சாத்கரிக்கும் பரியந்தமும்—(எ-று.)

---

† சுர நர திரியக்—தேவர், மக்கள், பசு, பக்ஷிகள்.
‡ பிரத்தியக்—உள்.

## 49. செய்வன திருந்தச் செய்.

(பா-ம்.) செய்வன - செய்யுங் காரியங்களை. திருந்த - செவ்வையாக. செய் - நீ செய்வாயாக.

47-அதி. தெரிந்து செயல்வகை. 2-செய்யுள்.

தெரிந்த வினத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும்பொருள் யாதொன்று மில்.

(பொ-ரை.) தாம் தெரிந்துகொண்ட இனத்துடனே (செய்யத் தகுந்த தொழிலை) ஆராய்ந்து, (பின்னை தாமேயும்) எண்ணிச் செய்து முடிக்க வல்லவர்க்குப் பெறுதற்கரிய பொருள் யாதொன்று மில்லை—(எ-று.)

(ஆ-ம்.) செய்வன - (சர்வகாரண சொரூபானுபவமாகிய புருஷார்த்த வடைவின் பொருட்டுச் செய்தற்குரிய * திருசியானுவித்தம், சத்தானுவித்தம், நிருவிகற்பம் எனப் பாகியார்த்த பேதத்தால் அறுவகைப்பட்டுள்ள) சமாதிகளை, (தேசிகனருளிச் செய்தவாறு,) திருந்த - (சந்தேக விபரீத மகலுமாறு) செப்பமாக, செய் - நீ அப்பியசிப்பாயாக.

---

* (1) பாகிய திருசியானுவித்தம் - கடாதி விஷய சமுகத்துள் ஒன்றனைக் குறித்து அதன் நாம ரூபமான மாயாம்சங்களிரண்டையும் நீக்கி, அதிலுள்ள அஸ்தி பாதிப் பிரியமென்னும் சச்சிதானந்தப் பிரஹ்மாம்சத் திரயங்களை யநுசந்தானஞ் செய்வது.

(2) பாகிய சத்தானுவித்தம் - அகண்ட சச்சிதானந் தாத்விதீய சொரூபம் பிரஹ்மமென்று தியானிப்பது.

(3) பாகிய நிருவிகற்பம் - இந்தச் சமாதித் துவயாப்பியாச பலத்தால் பிரஹ்மானந்தானுபவத்தில் மனம் மக்கினமாய் நிஸ்தரங்க (அலையின்றிய) சமுத்திரம்போல நிச்சல வடிவாயிருப்பது.

(இ. பி.) தேவிகாலோத்தரம்.

சிறந்த சமாதியைச் செய்யுங் காலத்துக்
கருத்தெழுந் தடங்காது கலங்கு மாயினும்
வருத்தமா நித்திரை யுறுவு மாயினும்
திருத்தி யுறுத்துத்தன் னிலையிற் சேர்கவே.

(பொ-ரை.) சிறப்பினை யுடைய சட்சமாதியைப் பழகும் போது பூர்வ வாசனையினாலே மனமானது விட்சேப மடைந்து அடங்காது கலங்கினாலும், சரீர வருத்த முண்டாக அதனால் உறக்கம் வந்து பொருந்துமாயினும், (அப்போது மனத்தை அவற்றிற் செல்லாவாறு பிரயத்தன பூர்வகமாகத்) திருப்பிச் சின்மயமாகச் செய்து தனதுண்மை நிலையிலிருக்கக் கடவன்—(எ-று.)

## 50. சேரிட மறிந்து சேர்

(பா-ம்.) சேரிடம் - சேருதற்கு மிடத்தை. அறிந்து - தெரிந்து, சேர் - நீ சேர்வாயாக.

---

(4) ஆந்தர கிருசியானுவித்தம் - அந்தக்கரணத்தின்கணுள்ள காம சங்கற்பாதிகளாகிய கிருசியத்திற்கு நான் சாக்ஷியென்று அநுசந்தானஞ் செய்வது.

(5) ஆந்தர சத்தானுவித்தம் - அசங்க சச்சிதாநந்த ஸ்வயம்பிரகாச அத்வைத சொரூபமே நானென்று சிந்தனை செய்வது.

(6) ஆந்தர நிருவிகற்பம் - அச்சுவாநுபூதி சுகாவேசத்தால் கிருசியம் சத்தமெனு மிரண்டையும் விட்டு நிவாத தீபம் (காற்றில்லாத விளக்கு) போல நிர்ச்சிந்தை வடிவாயிருப்பது.

த்துபோல் உள்ளத்தில் வஞ்சம் வைத்துக்கொண்டு புறத்துத் து றவறத்தோர்போல் அவர் த வேடத்தால் விளங்கா நின்றனை, என க்குரிய மனைவியைத் துறந்து தவஞ் செய்கின்றேனென்று தொட ங்கிப் பிறர்க்குரிய மனைவியை யிச்சிக்கின்றாய், சீசீ முன்னிருந்த இல்லறமுமன்றி அதனை விட்டுப் பின்னர் அடைந்த துறவறமுமு ன்றி இவற்றி னடுவெனின்று † கூடாவொழுக்கஞ் செய்கின்றனை நெஞ்சமே! நீ இவ்விடத்திலிருந்து என்ன காரியஞ் செய்து கொ ண்டனை! இனி நீ யிருந்தால் இக்கூடா வொழுக்கத்தால் என்னைப் பவத் துன்பத்திலே தள்ளுவாயாகலின், நீ சாவாய், கெடுவாயெ ன்று விவேகங் கூறினதாம்—(எ-று.)

## 52. சொற்சோர்வு படேல்.

(பா-ம்.) சொல் - பேசுஞ் சொல்லில். சோர்வு - மறதியை, படேல் - (என்றும்) நீ அடையா திருப்பாயாக.

65-அதி. சொல்வன்மை. 2-செய்யுள்.

ஆக்கமுங் கேடு மதனால் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு.

(பொ-ரை.) பெருக்கமும், அழிவும், (தமது) சொல்லினுலே வருமாதலால், (அப்படிப்பட்டதாய) சொல்லினிடத்துச் சோர் வைத் தம்மிடத்தே உண்டாகாமல் காக்கக் கடவர்—(எ-று.)

(ஆ-ர்.) சொல் - (சர்வாதிஷ்டான சொருபாகாரமாதற் கே துவாய) அனுசந்தான வாக்கியங்களை (இடையறாது சிந்தனை செ ய்வதில்.) சோர்வு - (ஒரு சிறிதும் மனத்) தளர்ச்சியை, படேல் (எக்காலத்தும்) நீ அடையா திருப்பாயாக.

† கூடாவொழுக்கம் - தாம் விட்ட காம வின்பத்தை யுறுதி யில்லாமையினுலே பின்னும் விரும்பும் வழிதோன்ற, அவ்வழியே கொண்டு நின்று தவத்தோடு பொருந்தாததாகிய தீய வொழுக்கம்

(இ. பி.) வைராக்கிய தீபம்.

படையெடுத் தமர்க்கட் சாருமோர் வீரன் பகைஞரைச்
சயங்கொளா விடினும், விடையெனப் பொருதாங் கிறந்த
லேயன்றி வெந்கிட வன்னிடா னதுபோற், கடையென
விடா மிகழ்ந்துபே ரின்பங் கருதினேன் பெறுகலா விடினு,
மிடையறு தனைதா நிவநலான் மறந்து மெஃனுமோ மன்
னரின்வாழ்க் கையையே.

(போ-ரை.) ஆயுத மெடுத்துக்கொண்டு யுத்த களத்திலே செ
ல்லாநின்ற ஒப்பற்ற வீரனானவன், சத்துருக்களைச் ஜயங்கொள்
ளாத விடத்தும், இடபம்போல் அச் சத்துருக்களோடு யுத்தம்ப
ண்ணி அந்த ரணகளத்திலே இறந்துபோதலே யன்றிப் பயந்து
முதுகு கொடுக்க நினையான், அதுபோல, இழிவென்று அறிந்து
அற்பமாயுள்ள விடயாநந்தத்தை யிகழ்ந்து கைவிட்டுப் பேரானந்
தத்தை யடையக் கருதி, ஞான சாதகந் தொடங்கினேன் சாத்தி
யம் கைகூடி அவ்வின்பத்தைப் பெறுதிருந்தாலுமினும், க்ஷணமாயி
னும் இடைவிடாது அந்த இன்பத்தை எப்பொழுது அடைவே
னென்று கருதுவதே யன்றி, மறந்தாயினும் தான் முன்பு இகழ்
ந்து கைவிட்ட இல்வாழ்க்கையை மீண்டும் நினைப்பானோ—(எ-று.)

## 53. சோம்பித் திரியேல்.

(பா-ம்.) சோம்பி - சோம்பலடைந்து, திரியேல் - (வீணாக)
த் திரியா திருப்பாயாக.

61-அதி. மடியின்மை. 3-செய்யுள்.

மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியுந் தன்னினு முந்து.

(போ-ரை.) விடத்தகுவதாகிய சோம்பலை (தன்னுள்ளே) கொண்டு நடக்கும் அறிவில்லாதவன் பிறந்த குடியானது, அவனி னும் முற்பட அழியும்—(எ-று.)

(ஆ-ம்.) சோம்பி - (சத்தா சாமான்ய வடிவமாயுள்ள தன்னை யடைதற் கேதுவான ஞாநாப்பியாசஞ் செய்யுங் காலத்தில், தமோ குண மயமான மூட விருத்தியினால்) சோர்வடைந்து, திரியேல் (விஷயாகாரப்பட்டு) நீ திரியா திருப்பாயாக.

(இ. பி.) திருப்போரூர் சந்நிதிமுறை.

பற்பல் விதப்பூச் சோலை புகாதே பரிபூரணமா மே கச் சோலையி, லெழிற்பெற நீயெந் நாளு மகிழ்ந்தங் கிது வது வென்றொன் றையுநா டாமே, செப்பமதாய்நின் னையு நா டாமே சீரரு ளேவடி வாகி யிருந்து, திருப்புகழ் போரூ ரண்ணலை நாடிக் கூவாய் வரக் கூவாய் குயிலே.

(போ-ரை.) பலபல புட்ப சாதிகள் செறிந்துள்ள பூஞ்சோலை யை யடையாது, (எங்கு நிறைந்த) பூரணமாகிய மேகத் தவழும் அருளாகிய சோலையை யடைந்து அச்சோலையில் நீ அழகுபெற எந் நாளும் மகிழ்ந்து, அச்சோலையில் இது வென்றும் அது வென்றும் ஒன்றையும் நாடாமல் நடுவே நிற்கும் இயல்பாய், அவ்வாறு நிற் குமுன்னையும் நோக்காமல் அருளே வடிவாகி அவ்வருளாகாரத்தி லிருந்து உலகம் புகழும் திருப்போரூரி லெழுந்தருளிய என்னப் பனைத் தியானித்துக் குயிலே நீ வரக் கூவக் கடவாய், கூவக் கட வாய்—(எ-று.)

## 54. தக்கோ னெனத் திரி.

(பா-ம்.) தக்கோனென - தகுதி யுடையவனென்று (அறிவு டையார் யாவரும் உன்னைப்) புகழ்ந் துரைக்கும்படி, திரி - நீ சஞ் சரிப்பாயாக.

7-அதி. புதல்வரைப் பெறுதல். 9-செய்யுள்.

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்.

(போ-ரை.) தன் புத்திரனை (கல்வி கேள்விகளினுலே) நிறைந்தோனென்று (அறிவுடையோர்) சொல்லக் கேட்ட தாய், பெற்ற காலத்தினும் மிக மகிழ்வாள்—(எ-று.)

(ஆ-ம்.) தக்கோனென - (சக்தி சொரூபமாயுள்ள தனதெதார்த்த சொரூப நிலையில் சித்தம் அகண்டப் பிரஹ்மாகார வடிவாய்ப் பரிணமிக்குமாறு செய்த அதனுல், அதிகாரி புருஷனைனென்று (திடஞானிகள்) சொல்ல. திரி - (நிரந்தரம் சமாதியினை) நீ பழகுவாயாக.

## (இ. பி.) ரிபுகீதை.

ஆதலினும் முனியத்தை யடைந்த பின்ன
ரங்குற்ற பலாபலத்தை யெறிந்த லேபோ
லேதமற வுணர்பொருளை யுணர்ந்த பின்ன
ரிங்குற்ற நூலையெலா மெறிதல் வேண்டும்
வாதகமா நூலையெலா மெறிந்த பின்னர்
வருந்தியுமே யாகவுந மிடைவிடாமற்
போதமுறச் சாதகமா நிதித்யா சத்தைப்
புரிபுடனே பூரணமாய்ப் பழகல் வேண்டும்.

(போ-ரை.) ஆகையால், (பைங்கூழ் செய்யும் மாக்கள்) தானியத்தைக் கிரகித்துக்கொண்ட பின் அங்கேயிருந்த வைக்கோலினை எறிகின்ற முறைமைபோலக் குற்றமற அறிபொருளை (அஸ்தி பாதிப் பிரிய விலக்கணங்களை யுடைய ஆத்மாவை) செவ்வனே ஆரா

ய்ந் தறிந்த முமுட்சுக்கள் நிதித்தியாசனத்தில் சித்தவிருத்தியை தைலதாரைபோல நிறுத்திப் பின் பழகத் தொடங்குங்கால், இவ் விதற்குத் தடையாயுள்ள சாஸ்திரங்களெல்லாந் தூரப்போக்குதல் வேண்டும்; தடையாயுள்ள அந்தச் சாஸ்திரங்களை யெல்லாம் தூரத்தள்ளிய அதன் பின்னர் இடையறாது ஊக்கத்துடன் சதாகால மும் இடைவெளிக்கு அவகாசங் கொடாது ஜீவப்பிரஹ்மைக்கிய அபேத ஞானமாகிய சாக்ஷாத்கார முண்டாகுமாறு சாதகமாகிய நிதித்தியாசனமெனப் பெயரிய சமாதியை மிகுந்த பேரன்புடனே பூரணமாய் அப்பியாசஞ் செய்தல் வேண்டும்—(எ-று.)

## 55. தானமது விரும்பு

(பா-ம்.) தானமது - (சற்பாத்திரங்களிலே) தானஞ் செய்தற்கு, விரும்பு - (என்றும்) நீ ஆசைப்படுவாயாக.

23-அதி. ஈகை. 10-செய்யுள்.

சாதலி னின்னாத தில்லை யினிததூஉ
மீத லியையாக் கடை.

(பொ-ரை.) (ஒருவனுக்கு) இறத்தல்போல் துன்பஞ் செய்வ தொன்று இல்லை, அப்படிப்பட்ட இறத்தலும் (வறியார்க்கு ஒன் றைக்) கொடுத்தல் முடியாத விடத்து இன்பஞ் செய்வதாகும்—(எ-று.)

(ஆ-ம்.) தானமது - (சச்சிதாநந்த சொரூபமாய் விளங்கும் தனது சொரூபத்தைத் தானெனச் சாக்ஷாத்கரிப்பதற்குத் தடை யாயுள்ள உடல் பொருளாவிகளைச் சற்குருநாதன்பால்) அர்ப் பணஞ் செய்வதற்கு, விரும்பு - நீ நிரந்தரம் மேற்கொண்டொழு குவாயாக.

### (இ. பி.) திருவாசகம்.

அன்றே யென்ற னாவியு முடலு முடைமை யெல்லாமுங், குன்றே யனையா யென்னையாட் கொண்ட போதே கொண்டிலையோ, வின்றோ ரிடையூ றெனக் குண்டோ வெண்டோண் முக்க ணெம்மானே, நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ விதற்கு நாயகமே.

(பொ ரை.) அத்தினமே என்னுடைய உயிரும் உடலும் பொருளுமாகிய எல்லாவற்றையும் மலையை நிகர்த்த சிவபெருமானே! அடியேனை (குருமூர்த்தமாய் எழுந்தருளி வந்து) அடிமை செய்து ஆட்கொண்ட பொழுதே ஏற்றுக்கொள்ள வில்லையோ! (அங்ஙனமாக) இப்பொழுது (தொண்டுபூண் டொழுகாநின்ற) அடியேனுக்குத் தடையிருக்கின்றதோ! எட்டு புஜங்களையும் மூன்று கண்களையுமுடைய என் தந்தையே! நலத்தினையே அருள் செய்யக்கடவை, கொடிய தீமையே செய்யக்கடவை, இப்பேர்க்கொத்த காரியத்திற்குத் தலைவனாகிய காரணன் யானோ—(எ-று.)

## 56. திருமாலுக் கடிமை செய்.

(பா-ம்.) திருமாலுக்கு - மகா விஷ்ணுவுக்கு, அடிமை செய் - நீ தொண்டு செய்வாயாக.

1-அதி. கடவுள் வாழ்த்து. 8-செய்யுள்.

அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது.

(பொ-ரை.) தருமக் கடலாகிய கடவுளது அடியாகிய (மரக்கலத்தைச்) சேர்ந்தவர்க் கல்லாமல், (அதனின்) வேறாகிய கடல்களைக் கடத்தல் கூடாது—(எ-று.)

(ஆ-ம்.) திருமாலுக்கு - சாக்ஷி சொரூபமாயுள்ள தனதெதார்த்த நிலையைப் பெறுதற்கு, அடிமை செய் - (சிவோஹம் என்று பா பாவித்து நீ சமாதி செய்திருப்பாயாக.

(இ. பி.) ரிபுகீதை.

அங்கமுத லணுவுமிலா தகண்டா கார
மாகியுள வத்துவித பரசி வத்தைச்
சங்கமறச் சந்ததமுஞ் சிவோக மென்னுஞ்
சலியாத பாவனையாற் பூசை செய்து
துங்கபர சிவகருணை திடமாய்ப் பெற்றுத்
தொடருமனோ விகற்பமெலா முடனே தீர்ந்து
பங்கமிலாப் பரமசிவ போதங் கூர்ந்து
பரமசிவ பத்தனுமா யினே னையா.

(போ-ரை.) உடம்பு, பொறி முதலியவற்றுள் ஒரு சிறிது மில்லாது அகண்ட வடிவமாயிருக்கும் அத்துவித பரசிவத்தை அசங்கமாய் எப்பொழுதும் சிவோஹ மென்கின்ற சலித்த லில்லாத பாவனையினாலே ஆராதித்துப் பரிசுத்தமுள்ள பரமசிவத்தின் கிருபையை உறுதியாகவடைந்து, தொடர்ந்து வருகின்ற மனத்தினது வேறுபாடுக ளனைத்தும் அக்கணமே நீங்கிப் பிரதிபந்த மில்லாத மேலாகிய சிவஞானத்தை யடைந்து, ஐயா! நானே பரமசிவ பக்தனும் ஆயினேன்—(எ-று.)

## 57· தீவினை யகற்று.

(பா-ம்.) தீவினை - பாபத் தொழில்களை, அகற்று - (எப்போதும்) நீ நீக்குவாயாக.

21-அதி. தீவினையச்சம் 2-செய்யுள்.

தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும்.

(பொ-ரை.) (தனக்கு இன்பந் தருதலைக் குறித்துச் செய்யுந்) தீவினைகள் (பின்பு அவ்வின்பத்தை யொழித்துத்) துன்பங்களையே தருதலால் (அப்படிப்பட்ட) தீவினைகள் தீயினும் அதிகமாக (ஒருவனால்) அஞ்சப்படும்—(எ-று.)

(ஆ-ம்.) தீவினை - (சாந்தசொரூப அகண்ட சாட்சாத்கார முண்டாகக்) காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதமென்னும் அரிஷட் வர்க்கங்களையும், அகற்று - (பிரயத்தன பூர்வகமாக) நீ ஒழிப்பாயாக.

## (இ. பி.) அத்துவிதவுண்மை.

இல்லற மென்றுந் துறவென்று மெண்ண வேண்டா
பற்றையில், அல்ல னீங்கி யொருநினைவா யசைவற் றிருந்து
சொரூபமடைதச், செல்ல விடையூ றின்றியதைச் சேர்ந்தே
னென்று தன்னிலையைப், புல்ல விடையூ றுதுமதைப் போ
க்கி விடுக வேதானும்.

(பொ-ரை.) (நீ மோக்ஷசாதனம்) இல்லறமோ வென்றும், துறவறமோ வென்றும், எண்ணவேண்டியதில்லை, (அவ்விரண்டுஞ் சாதனமாவதில்லை, பின் யாதெனின்,) அவற்றுள் காமாதிகளால் வினையுந் துன்பங்கள் நீங்கி, ஏகபாவனையாய் மனோ வாக்குக் காயங்கள் அசைவற்றிருந்து, ஆத்ம சொரூபத்தை யடைதற்கு யாதொரு தடையுமில்லாமல் அவ்வாத்ம சொரூபத்தை அடைந்தே னென்று தன் சுபாவ ஸ்திதியைப் பொருந்தத் தடையா யிருப்பதைப் போக்கக் கடவாய், அதுவே சாதனமாம்—(எ-று.)

## 58. துன்பத்திற் கிடங்கொடேல்.

(பா-ம்.) துன்பத்திற்கு - துன்பம் வந்து சேர்தற்கு, இடங்கொடேல் - (எப்போதும்) நீ இடந்தரா திருப்பாயாக.

35-அதி. துறவு. 1-செய்யுள்.

யாதனின் யாதனி னீங்கியா னோத
லதனி னதனி னிலன்.

(பொ-ரை.) (ஒருவன்) யாதொரு பொருளின் யாதொரு பொருளின் நீங்கினான், (அவன்) அப்பொருளினாலே அப்பொருளினாலே துன்ப மடைதல் உடையவனாகான்—(எ-று.)

(ஆ-ம்.) துன்பத்திற்கு - (சின்மாத்திர சொரூபத்தில் நில்லாது மனம் வாதனா வசத்தால் அடிக்கடி) விக்ஷேபப் படுதற்கு, இடங்கொடேல் - (என்றும்) நீ இடந்தரா திருப்பாயாக.

(இ. பி.) திருமந்திரம்.

ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை யறுமின்கள்
ஆசைப் படப்பட வாய்வருந் துன்பங்கள்
ஆசை விடவிட வானந்த மாமே.

(பொ-ரை.) (அகண்ட சாட்சாத்கார சுகத்தை யடைய விரும்புகின்ற மனிதர்களே ! சுகம் வேண்டுமானால்) விடய விச்சையை முற்றும் விட்டு ஒழியுங்கள், விடய விச்சையை முற்றும் விட்டொழியுங்கள், ஈசுவரனிடத்தும் ஆசையை விட்டு ஒழியுங்கள், அல்லேனனின், இச்சை அதிகரிக்க அதிகரிக்க துக்கங்கள் விருத்தியாய் வரும், இச்சையை ஒழிக்க ஒழிக்கப் பிரஹ்மானந்தம் அதிகரிக்கும்—(எ-று.)

## 59· தூக்கி வினை செய்.

(பா-ம்.) தூக்கி - (முடிக்கும் உபாயத்தை) ஆராய்ந்தறிந்து, வினை - ஒரு தொழிலை, செய் - (அதன் பின்பு) நீ செய்வாயாக.

48-அதி. வலியறிதல். 1-செய்யுள்.

*வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந்*
*துணைவலியுந் தூக்கிச் செயல்.*

(பொ-ரை.) (தான் செய்யக்கருதிய) தொழிலது வலிமையையும், (அதனைச் செய்து முடிக்கும்) தனது வலிமையையும், (அதனை விலக்கும்) பகைவனது வலிமையையும், (இருவர்க்கும்) துணையாவோரது வலிமைகளையும் ஆராய்ந்து, (தனது வலிமை மிகுமாயின் அத்தொழிலைச்) செய்யக் கடவன்—(எ-று.)

(ஆ-ம்.) தூக்கி - (சிவசொரூபமாயுள்ள தன்னை ஐயந் திரிபின்றி யடைதற்கு நல்லாசிரியர் மூலமாகச் செய்யத் தக்க சாதனங்களை ஆராய்ந்து) (பின்னர்), வினை செய் - அச்சாதனங்களை (விசுவாசத்தோடு) நீ செய்வாயாக—(எ-று.)

(இ. பி.) அவிரோதவுந்தியார்.

*இருமையுமில் லைமல்லோர்க் கிம்மெய்கொண் டம்மெய்*
*யிரவினையுந் தெரிகலையுந் தீபற*
*வேலையா சாணையுந் தீபற.*

(பொ-ரை.) ஒரு மெய்யென்னும் பெயரினையுடைய சரீரத்தினது அசுத்தமும், அஃதளவற்ற துக்கத்தோடும், அவ்வி அறிதற்கு அரிய அநித்தியத்தோடும் கூடியிருத்தலையும், மற்றுமொரு மெய்யென்னு மியல்பினையுடைய வீட்டினது பரிசுத்தமும், அதனது

* நிரதிசயானந்தமும், நித்தியத் தன்மையும், அந்த வீட்டினை யடைதற்கு இந்தச் சரீரம் இன்றியமையாமையும், சன்மார்க்கத்திலே செய்த தபோ பலத்தால் இந்தச் சரீரம் பெற்ற அருமையும், பிரத்தியக்ஷத்தினாலும், வாக்கியத்தினாலும், கண்டும், கேட்டும், அறிந்துளோர்க்கு இந்தச் சரீரம் நீங்குவதற்கு முன்பே ஆசாரியனை நீங்கி, ஞானாசிரியனை யடைந்து, அதி சீக்கிரத்தில் வீட்டு நெறியை விசாரித்து மீட்டை கூடுதலே கருமம்—(எ-று.)

## 60. தெய்வ மிகழேல்.

(பா-ம்.) தெய்வம் - கடவுளை, இகழேல் - (ஒருபோதும்) நிந்தனை செய்யா திருப்பாயாக.

85-அதி. புல்லறிவாண்மை. 10-செய்யுள்.

உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும்.

(பொ-ரை.) உயர்ந்தோர் பலரும் உண்டென்ப தோர்பொருளை (தன் புல்லறிவால்) இல்லை யென்று சொல்லுவோன் (மனிதனென்று நினைக்கப்படான்,) பூமியிலே (காணப்படுகின்ற) ஒரு பேயென்று நினைக்கப்படுவோன்—(எ-று.)

(ஆ-ம்.) தெய்வம் - † சூன்ய சொரூபமாய் விளங்கும் சிதாத்மாவை, இகழேல் - (‡ சடபுத்தி, ஜனச்சேர்க்கை, விஷயாசக்தி, குதர்க்கம், அபிமானம், சபலத்துவ முதலியவற்றால்) நீ யிகழ்ச்சி செய்யா திருப்பாயாக.

---

* நிரதிசயானந்தம் - அதிசய (பேத) மற்ற வின்பம்.
† சூன்ய சொரூபம்=நாம ரூபங்களின் அபாவ வடிவ சிவம்.

## (இ. பி.) ஞானவாசிட்டம்.

மிகமாத் துமதத் துவத்தினுயர் தியான முபகா ரங்க ளொடு, நிகழ்பூ சனையா மிவ்வழியா லன்றிப் பிறிதோர் நெறி களினும், புகழ்மெய் யுணர்வு கிடையாது பூரண தியான பூசையினை, யிகழ்மூ டர்கள்செய் யினும்பதின்மூன் றிமைப் பிற் பசுவீந் துளபேறும்.

(பொ-ரை.) பிரகாசிக்கின்ற ஆத்ம தத்துவத்தினது மேலான தியானம் பூசா திரவியங்களுடன் செய்கின்ற வாராதனையாகும், இம்மார்க்கத்தினு லல்லாமல் வேறொரு மார்க்கங்களினுல் மகான்கள் துதிக்கின்ற வுண்மை ஞானங் கிடைக்கமாட்டாது. பூரணத் தியானமான ஆராதனையை நிந்திக்கின்ற மூடர்கள் செய்தாலும், பதின்மூன்று மாத்திரையில் அவர்க்குக் கோதான பலனுண்டாகும் —(எ-று.)

## 61. தேசத்தோ டொத்து வாழ்.

(பா ம்.) தேசத்தோடு - தேசாசாரத்தோடு, ஒத்து - (விரோத மில்லாமல்) ஒத்து, வாழ் - நீ வாழ்வாயாக.

---

‡ சடபுத்தி—மந்த மதி.

ஜனச்சேர்க்கை—பாமரர்களோடும், விஷயிகளோடுங் கூடுதல்.

விஷயாசக்தி—விஷயத்தில் ஆசை; மனைவி முதலியோரிடத்து விருப்பம்.

குதர்க்கம்—விதண்டை பேசுதல்.

அபிமானம்—தேகத்திலும், விஷயத்திலும், யான் எனதென்னும் புத்தி.

சபலத்துவம்—அடிக்கடி மனம் விட்சேப மடைதல்.

22-அதி. ஒப்புரவறிதல். 4-செய்யுள்.

ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

(பொ-ரை.) உலக நடையை அறிந்து செய்பவன் உயிரோடு கூடி வாழ்பவனாவான், அதனை யறிந்து செய்யாதவன் (உயிருடையவனா யிருந்தாலும்,) இறந்தவர்களுக்குள் (ஒருவனாக) வைக்கப்படுவான்—(எ-று.)

(ஆ-ம்.) தேசத்தோடு - (மகாசூன்ய சொரூபமாயுள்ள பிரஹ்ம சாட்சாத்காரத்தை அடைதற்கு விக்கின முண்டாகாவாறு) சீவன் முக்தர்களது ஒழுக்கத்திற்கு, ஒத்து - (விரோதமின்றி) ஒத்து வாழ் - நீ ஒழுகுவாயாக.

(இ. பி.) திருமந்திரம்.

சித்தஞ் சிவமாகச் செய்தவம் வேண்டாவாற்
சித்தஞ் சிவானந்தஞ் சேர்ந்தோ ருறவுண்டாற்
சித்தஞ் சிவமாக வேசித்தி முத்தியாஞ்
சித்தஞ் சிவானந்தஞ் செய்தவப் பேறே.

(பொ-ரை.) ஆத்மா சிவமாவதற்குச் செய்யத்தக்க தவம் ஒன்றும் வேண்டியதின்று, சித்தத்தின்கண் சிவானந்தத்தை யடைந்த ஞானிகளது சிநேக முண்டாகுமாயின், ஆத்மா சிவமாகவே மோட்சம் சித்திக்கும், ஆத்மா சிவானந்தமாதலே ஒருவன் செய்த தவத்தின் பயனும்—(எ-று.)

## 62. தையல்சோற் கேளேல்.

(பா-ம்.) தையல் சொல் - (பின்னே கேட்டைத் தருவதாகிய) பெண் புத்தியை, கேளேல் - (ஒருபோதும்) நீ கேட்கா திருப்பாயாக.

91-அதி. பெண்வழிச்சேறல். ௪-செய்யுள்.

பெண்ணேவல் செய்தொழுகு மாண்மையி னாணுடைப்
பெண்ணே பெருமை யுடைத்து.

(போ-ரை.) (காரணமில்லாமல் தனது) இல்லாளது ஏவற் றொழிலைச் செய்து திரிகின்றவனது ஆண் தன்மையைக் காட்டிலும் நாணத்தையுடைய (அவள்) பெண் தன்மையே மேம்பாட்டையுடையது—(எ-று.)

(ஆ-ம்.) தையல் சொல் - (ஸ்வயம் பிரகாச சொரூபப் பிரத்தியட்சத்திற்கு மாறானவற்றைக் கூறும்) * ஆண்மையில்லாத பேதவாதிகளது வார்த்தைகளை, கேளேல் - (ஒருபோதும்) நீ கேட்காதிருப்பாயாக.

(இ. பி.) சிவஞான வள்ளலார்.

ஒன்றென்றும் பலவென்று முபயமென்று முருவென்று மருவென்று முபயமென்று, நன்றென்றுந் தீதென்று நானேயென்று ஞானமென்று ஞேயமென்று ஞாதாவென்று, அன்றென்று மாமென்றுஞ் சமயப்பேய்க ளறைகின்ற பிணக்குவழி யனைத்துநீத்துக், குன்றலிலா வானந்தக் குரவனின்னைக் கும்பிட்டே னென்பிறவி பின்பிட்டேனே.

(போ-ரை.) பரம்பொருள் ஏகமெனவும், அநேகமெனவும், ஏகாநேகமெனவும், உருவமெனவும், அருவமெனவும், உருவாருவமெனவும், நன்மையெனவும், தீமையெனவும், அகமெனவும், காட்சியெனவும், காணப்படு பொருளெனவும், காண்பானெனவும், அல்லவெனவும், ஆமெனவும், பேதவாதிகளாகிய சமயப் பேய்கள்

* ஆண்மை - ஒன்றற்குந் தளராது நிற்றல்.

சொல்லுகின்ற தவமுன் மார்க்கங்களனைத்தும் பிரயோசனமில்லையென்று கழித்து, குறைவுபாடற்ற ஆநந்தமயமாய் நின்றுள்ள எமதாசிரியரே! தேவரீரைக் கைகுவித்து நமஸ்கரித்தேன், அதனால் என் சநநங்களனைத்தும் பின்னிடும்படியாகச் செய்தேன்—(எ-று.)

## 63. தோன்மை மறவேல்.

(பா-ம்.) தொன்மை - பழைமையாகிய சிநேகத்தை, மறவேல் - (என்றும்) நீ மறவாதிருப்பாயாக.

81. அதி. பழைமை. 1-செய்யுள்.

*பழைமை யெனப்படுவ தியாதெனின் யாதுங்*
*கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.*

(பொ-ரை.) பழைமை யென்று சொல்லப்படுவது யாதென்றால், (அது பழைமையோர்) உரிமையாலே செய்தவைகளைச் சிறிதாயினும் சிதைக்காமல் (அவைகளுக்கு உடன் படுவதாகிய) சிநேகமாம்—(எ-று.)

(ஆ-ம்.) தொன்மை - (ஸ்வப்பிரகாச வடிவமாய்த் திருசியமியாவற்றிற்குஞ் † சத்தாஸ்பூர்த்தியைத் தந்து) அநாதியாயுள்ள ஆத்மாவில் (திருசிய நோக்கிழந்து நிலைத்திருத்தலை,) மறவேல் - (ஒருபோதும்) நீ மறவா திருப்பாயாக.

(இ. பி.) கைவல்லிய நவநீதம்.

*கானனீர் கிளிஞ்சில் வெள்ளி கந்தர்ப்ப நகர்களூர்*
*வானமை கயிற்றிற் பாம்பு மலடிசேய் முயலின் கோடு*

---

† சத்தாஸ்பூர்த்தி - இருத்தல், விளங்கல்.

பீனமாந் தமிபு மானிற் பிரபஞ்ச மெல்லாம் பொய்யே
ஞானமெய் மகனே யுன்னை நம்மானை மறந்தி டாதே.

(பொ-ரை.) கானலிற் சலம்போலும், சுத்தியில் இராஜதம் போலும், கந்தர்வ நகரம்போலும், சொப்பன நகரம்போலும், ஆகாசத்தில் நீல நிறம்போலும், இரச்சுவிற் சர்ப்பம்போலும், வந்தியா சுதன்போலும், சச விஷாணம்போலும், பருமையான தாணுவிற் புருஷன்போலும், (மூலாகங்காராதிப்) பிரபஞ்ச மனைத்தும் மித்தை: பிரக்ஞான கனப் பிரஹ்மமே சத்தியம்; மைந்தா! இத்தன்மையான உனது ஆன்மாவை நம்மேலானை நீ மறவாதே-(எ-று.)

## 64. தோற்பன தொடரேல்.

(பா-ம்.) தோற்பன - தோல்வி யடையக்கூடிய கருமங்களை, தொடரேல் - (ஆரம்பித்து) நீ செய்யா திருப்பாயாக.

47-அதி. தெரிந்து செயல்வகை. 3-செய்யுள்.

ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
யூக்கா ரறிவுடை யார்.

(பொ-ரை.) (பின் பெறக்கடவதாகிய) இலாபத்தை நோக்கி, (முன் பெற்றுள்ள) முதலையும் இழத்தற்கு ஏதுவாகிய செய்தொழிலை, அறிவுடையவர் மேற்கொள்ளார்—(எ-று.)

(ஆ-ம்.) தோற்பன - (சுத்த சொரூபமாயுள்ள தன்னை மறத்தற்கேதுவான) பகிர்முக வியவகாரங்களில், தொடரேல் - (எஞ்ஞான்றும்) நீ பற்றுவையா திருப்பாயாக—(எ-று.)

(இ. பி.) நெஞ்சறிவிளக்கம்.

காண்பது மழிந்து போகுங் காயமு மழிந்து போகு
மூண்பொரு ளழிந்து போகு முலகமு மழிந்து போகும்.

பூண்பணி நாகை நாதர் பொற்பத மழியா தென்று நெஞ்சே.
வீண்பொழு தினைப்போக் காமல் வெளிதனி லொளிபார்

(பொ-ரை.) ஓ மனமே? காணப்படுகின்ற திருசியங்க ளனைத்தும் நசித்துப்போகும், சரீரமும் சிதைந்துபோகும், புசிக்கத்தக்க சகல போக வஸ்துக்களும் ஒழிந்துபோகும், அவற்றிற் காதாரமாயுள்ள வுலகமும் லயமாய்ப்போகும், சர்ப்பத்தை ஆபரணமாக வுடைய நாகலிங்க மூர்த்தியினது பொன்போன்ற திருவடிகள் எக்காலத்து மழிவற்ற வுண்மைப் பொருளென்று அவைத்திலே காலங் கழிக்காமல், மனுகாயத்தின்கண் விளங்கும் சிதாகாயத்தை நீ நோக்கி நிலைத்திருக்கக் கடவாய்—(எ-று.)

## 65· நன்மை கடைப்பிடி.

(பா-ம்.) நன்மை - நலமுள்ளவைகளை, கடைப்பிடி - நீ உறுதியாகப் பற்றுவாயாக.

43-அதி. அறிவுடைமை. 2-செய்யுள்.

சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு.

(பொ-ரை.) (மனத்தை அது) போன விஷயத்திலே போக விடாமல் (அவ்விஷயங்களில் நன்மை தீமைகளை ஆராய்ந்து) தீயதிலிருந்துநீக்கி, நல்லதனிடத்து போகவிடுவது அறிவாம்—(எ-று.)

(ஆ-ம்.) நன்மை - (புத்த சொரூபமாயுள்ள தன்னை யடைந்து ஜனன மரண வடிவ சம்சாரம் நிவிர்த்தியாதற் பொருட்டுச் சமாதி வாயிலாக வெளியாகுக்) தானறிவாநந்தத்தை, கடைப்பிடி - (பராமுகத்தா விழவாது) நீ வைராக்கியத்தோடு மேற்கொண் டிருப்பாயாக.

## (இ. பி.) திருக்கு திருசிய விவேகம்.

தானறிவா னந்தமெனல் சத்தியமே யன்னியமுந்
தானெனங்ங னவதெனச் சற்குருவுந் - தானு
மறிவன்றி யில்லா வருவுருவம் போல
வறிவுந்தா னன்றியிலே யால்.

(பொ-ரை.) தானென்ப தறிவானந்தப் பொருளென் றருளிய தன்மையே, அவ்வறிவா னந்தத்திற்கு மாறாயுள்ள திருசியங்களும் தானாகும்வண்ண மெவ்வாறென்று மாணாக்கன் வினவ, அதற்கு ஞானாசாரியர் தானாகிய வறிவைத் தவிர ரூபாரூப மில்லா வாறு போல அவ்வறிவுந் தானென்பதைத் தவிர வில்லாமையா லனைத்துந் தானெனப்படும்—(எ-று.)

## 66· நாடொப்பன செய்.

(பா-ம்.) நாடு - நாட்டிலுள்ளவர் பலரும், ஒப்பன - ஒத்துக் கொள்ளத்தக்க நல்ல காரியங்களை, செய் - நீ செய்வாயாக.

64-அதி. அமைச்சு. 7-செய்யுள்.

செயற்கை யறிந்தக் கடைத்து முலகத்
தியற்கை யறிந்து செயல்.

(பொ-ரை.) (நூல் வழியினால் தொழில்) செய்யும் வகைகளை யறிந்த விடத்தும் உலகத்திலே (அப்போது நடக்கின்ற) இயற்கையைத் தெரிந்து (அதனோடு பொருந்தச்) செய்யக் கடவன்—(எ-று.)

(ஆ-ம்.) நாடொப்பன - (ஸ்வயம்பு வடிவமாயுள்ள தன்னை யுணருமாறு காட்சியை யெல்லாங் கண்ணதாய்க் கரைத்துக் கண்ணொழிந் தொருபொருளில்லா மாட்சியை யளிக்க வல்ல) மகான்க ளங்

கிகரிக்கத்தக்க அப்பியாசங்களை, செய் - (இடைவிடாது) நீ செய்வாயாக.

## (இ. பி.) கைவல்லிய நவநீதம்.

ஒன்று மேகம்பக னேபுமான் முமுட்சியா லுறைத்துமா நுடாக்கிசன், நன்று செய்யாமே காட்டிய நூல்வழி நடந்து நல் லவர்பின்னே, சென்று துட்டவா தனைவிட்டு விவேகாய்ச் செனித்தமா யையைத் தள்ளி, நின்று ஞானத்தை யடைந்தவர் பவங்கள்போ நிச்சய மிதுதானே.

(பொ-ரை.) ஞானபுத்திரா? (சகல ஞான சாஸ்திரங்களின் சாரபூதமான) ஒருபாயத்தைச் சொல்லுகிறோம் கேட்பாய், புருடப்பிரயத்தனத்தா லமுர்ந்த மநுடர்களுக்கு ஈசுரன் பிரஹ்மாசுக்கு கொடுத்தற் பொருட்டே அருளிச் செய்த வேதத்தின் காண்டத்திரய நெறியில் நடந்து, பின் பிரஹ்ம நிஷ்டர்களான பெரியோர்கள் பிறகே திரிந்து (அப்பெரியோர்கள்) சகவாசத்தாற் சாந்தியாதி வாசனைகளை யுடையவராய் (முன்னுள்ள) குரோதாதி மலினவாசனைகளை யொழித்து, ஆன்மாநான்ம விவேகத்தை யுடையவர்களாய் அவிவேகத்தாலுண்டான பேத புத்தியைப் போக்கி, (தன் அநுபூதியிற் சிவோஹமென்று நின்று, சமுசய ரகித பிரஹ்மான்ம வயிக்கிய) ஞானத்தைப் பெற்றவருடைய (சுரா நர திரியக்காதி ரூபங்களான வெகுவித) சநநங்கள் நீங்கும்; இதுவே (சுருதி ஸ்மிருதிகளின்) சித்தாந்தமாம்—(எ-று.)

## 67. நிலையிற் பிரியேல்.

(பா-ம்.) நிலையில் - நிற்கின்ற நிலையிலிருந்து, பிரியேல் - (எப்போதும்) நீ நீங்கா திருப்பாயாக.

97-அதி. மானம். 4-செய்யுள்.

தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை.

(பொ-ரை.) (குடிப்பிறந்த) மனிதர் தம்முயர்ந்த நிலையை விட்டு, அந்நிலையை நின்றும் தாழ்ந்த விடத்துத் தலையை விட்டு அதனி னின்றும் வீழ்ந்த மயிரினை யொப்பர்—(எ-று.)

(ஆ-ம்.) நிலையில் - (க்ஷேத்திரக்ஞ வடிவமாய் விளங்குந் தனது அசங்க) நிலையி னின்றும், பிரியேல் - (நாம ரூபாகாரப் பட்டு) நீ பிரியா திருப்பாயாக.

## (இ. பி.) அத்துவிதவுண்மை.

நினைவு நீங்கி லுருநாம நீங்கு மவையைத் தள்ளிடினும்
நினைவு நீங்கு மற்றவையி னினக்கே திச்சை யதினின்று
நினைவு நீங்கி நின்றிடமே நிலைமை யான முத்தியென்று
நினைவு கொண்டந் நிலையைவிட்டு நீங்கா தென்று நின்றிடு.

(பொ-ரை.) சங்கற்பம் நீங்கினால் நாம ரூபங்கள் நீங்கும்; அந்த நாம ரூபங்களை நீக்கினால் சங்கற்பம் நீங்கும், அவ்விரண்டின் கண் உனக்கு யாதின்கண் இச்சை யிருக்கின்றதோ அதன்கண் நின்று சங்கற்பம் நீங்கி நின்றவிடமே மாறுபாடற்ற மோக்ஷமா மென்று சங்கற்பங்கொண்டு அம்மோக்ஷ நிலையை விட்டு என்றும் நீங்காது நிற்பாயாக.

## 68. நீர் விளையாடேல்.

(பா-ம்.) நீர் - ஆழமுள்ள நீரில், விளையாடேல் - (நீந்தி) நீ விளையாடா திருப்பாயாக.

ஏகதேசமாயுள்ள விடயானந்தத்தை, நுகரேல் - (அனுபவிக்க வெ
க்காலத்தும்) நீ கருதா திருப்பாயாக—(எ-று.)

(இ. பி.) வைராக்கிய தீபம்.

சாதக தசைக்கண் விடயமே தடையாகுஞ் சாத்திய மா
னபின் புசித்தற், காதல்வைத் திடினப் பிரமவா னந்தத் தக்
கமோ விடயவா னந்தங், கோதில்வீட் டின்பம் பெறுகல
விடினுங் கூடுதற் கெனிற்கரி பிழைக்கில், மீதிலோர் சிங்க
மதனையே யன்றித் தேடுமோ தேரையூன் றனையே.

(போ-ரை.) ஞானசாதக தசையின்கண் விடயங்களே அதற்குத் தடையாகு மாகலின், அவற்றினை வைத்துக்கொண்டு சாதகம் பண்ணல் கூடாது. ஆனால் அவ்விடயங்களைச் சாதக தசைக்கண் அனுபவியாது சாத்தியமான பின்பேனும் அனுபவித்தற்கு வைத்துக்கொள்வையானால், அச்சாத்திய தசைக்கண்ணே உதயமான அந்தப் பிரஹ்மானந்தத்தினும் இந்த விடயானந்தம் அதிகமாக வேண்டுமாதலின், இந்த † விடயானந்தமே போதும் அந்தப் பிரஹ்மானந்தத்தை யடைய ஞானசாதகம் பண்ணவேண்டுவதே யில்லை, ஆனால், சாதகம் பண்ணிக்கொண்டு வருமிடத்துச் சாத்தியங் கைகூடிக் குற்றமற்ற வீட்டின்பம் வந்து சித்தியாத காலத்தாயினும் பொருந்தி அனுபவித்தற்கு அவைகளை வைத்துக்கொள்வே னென்பையானால், யானையினை இரையாகத் தேடிச் சென்ற குற்றமில்லாத ஒப்பற்ற சிங்கம் அந்த யானை தப்பிப்போயிற்றென்றால் அதனையே தேடுதலன்றி யற்பமாயுள்ள தேரையினது மாமிசத்தைத் தின்னத் தேடுமோ—(எ-று.)

† விடயானந்தம் - வனிதாதி போகங்களில் உண்டாகும் இன்பம்.

## 70. நூற் பலகல்

(பா-ம்.) நூல் - (அறிவைத் தருகின்ற) சாஸ்திரங்கள், பல - பலவற்றினை, கல் - நீ கற்றுக்கொள்வாயாக.

40-அதி. கல்வி. 1-செய்யுள்.

*கற்கக் கசடறக் கற்பவை கற்றபி*
*னிற்க வதற்குத் தக.*

(பொ-ரை.) கற்கப்படு நூல்களைப் பழுதறக் கற்கக் கடவன், (அப்படி) கற்ற பின்னே அக்கல்விக்குத் தகுதியாக (அவைகளாலே சொல்லப்பட்ட வழியிலே) நிற்கக் கடவன்—(எ-று.)

(ஆ-ம்.) நூல்பல - (நாநா ரூபமாயுள்ள தனது யதார்த்த நிலையை யுணராத் தலைப்படுங்காலத்து அத்தடைகள் பிரபலமாக விருக்குமாயின், அவை யொழியுமளவும் சற்குரு வாயிலாகப்) பிரபல சுருதிகளை, கல் - நீ ஓதக் கடவாயாக.

### (இ. பி.) சூதசங்கிதை.

உயிரெலாந் தமதுண் மையையறி யாம லூறுமறைப் பழுதிபே யுள்ள, செயிரிலு லுடலு னெனுமபி மானஞ் சேர்ந்ததிப் பந்தவஞ் ஞானம், பயிலும்வே தாந்தத் தெளிவுநூலோர்ந்து பத்தியாம் பெருவழி யொழுகின், மயிலியல் பாகனருளுறு மதனல் வாய்த்திடு மனுபவ ஞானம்.

(பொ-ரை.) சீவர்க ளனைவரும் தம்முடைய யதார்த்த நிலையை உணராது பொருந்திய ஆவரணம் அநாதியாகவே யுள்ள குற்றத்தால், தேகம் நானென்கின்ற அபிமானத்தை யடைந்தனர், இந்தப் பந்தவடிவமாகிய வஞ்ஞானம்,பொருந்திய வேதாந்தமென்னுந் தெ

ளிவாகக் கூறும் பிற பல சுருதிகளை யாராய்ந்து, அகண்ட பக்தி யெ ன்கின்ற பெரிய மார்க்கத்தில் நடந்தால் மயில்போன்ற சாயலினை யுடைய உமைபாகனது கருணை வந்து பொருந்தும், அக்கருணையி னால் (அஞ்ஞானங்கெட்டுச்) சுவானுபவஞானம் சித்திக்கும்—(எ-று.)

## 71. நேற்பயிர் விளை.

(பா-ம்.) நெற்பயிர் - நெல்லுப் பயிரை, விளை - (முயற்சி செய்து) நீ விளையச் செய்வாயாக.

104-அதி. உழவு. 7-செய்யுள்.

தொடிப்புழுதி கஃசா வுணக்கிற் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்.

(பொ-ரை.) (ஒரு நிலத்தினை யுழுதவன்) ஒரு பலப்புழுதி காற் பலமாம்படி (அதனைக்) காயவிடுவானாயின், (அதனிடத்துச் செய்த பயிர்) ஒரு பிடியில் அடங்கிய எருவும் இட வேண்டாமல் பருத்து விளையும்—(எ-று.)

(ஆ-ம்.) நெற்பயிர் - (நிர்விகார சொரூபநிலை வாய்க்க அதற்கே துவாய) நிருவிகற்ப சமாதியை, விளை - (என்றும்) நீ விருத்தி செய் வாயாக.

(இ. பி.) விவேகசூடாமணி.

திருசிய மியாவு நீக்கித் திடமுற வகண்ட பாவத்
சருவதா யடைவ தற்கே சாதுவா மெதிக ளுக்குச்
சிரவண மாதி கன்மஞ் செய்தபின் சுருதி தானே
சருவதா நிருவி கற்ப சமாதியை விதிக்கு மன்றே.

(பொ-ரை.) காணப்படுகின்ற தேகாதி நாம ரூபப் பிரபஞ்சங்க ளனைத்தையும் ஒருங்கே தள்ளி, ஸ்திரமாக எப்போதும் அகண்ட

சாக்ஷாத்காரத்தை யடைவதற்காகவே சாதுத்தன்மை யடைந்திருக்கின்ற முமுக்ஷுகளுக்குச் சிரவண முதலாகிய ஞான சாதனங்களைச் செய்து முடித்த பின்பு உபநிடதங்கள் சர்வதா நிருவிகற்ப சமாதியில் நிலைத்திருக்கும்படி விதிக்கின்றன வல்லவா—(எ-று.)

## நேர்பட வொழுகு

(பா-ம்.) நேர்பட - செவ்வையான நடையுற, ஒழுகு - (விதி வழியிலே) நீ நடப்பாயாக.

14 - அதி. ஒழுக்கமுடைமை. 8-செய்யுள்.

நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க
மென்று மிடும்பை தரும்.

(பொ-ரை.) (ஒருவனுக்கு) நல்ல வாசாரமானது அறத்திற்குக் காரணமாகும், தீய வாசாரமானது இருமைகளிலும் துன்பத்தைக் கொடுக்கும்—(எ-று.)

(ஆ-ம்.) நேர்பட - (நிஷ்கிரிய சொரூபமாய தன்னில்) சித்தம் செவ்வனே நிற்குமாறு, ஒழுகு - நீ நிதித்யாசனஞ் செய்வாயாக.

(இ. பி.) விவேகசூடாமணி.

திருசியத் தோற்றந் தன்னைத் திருக்குமாத் திரமே யாகப்
பிரவிலா பித்து நின்னைப் பிரமமாத் திரமாய்ப் பார்த்திங்
கரியனே வெளியி லுள்ளி லாவது சமாதி பெற்றுக்
கருமபந் தம்வ ரைக்குங் காலநீ தள்ளு வாயே.

(பொ-ரை.) காணப்படுகின்ற நாம ரூபப் பிரபஞ்சத்தை அறிவு சொரூபமேயாகத் தெளிந்து உன்னைப் பிரஹ்ம சொரூபமாகவே கண்டு இவ்விடத்து அருமையாயுள்ள ஞானபுத்திரா! பாகிய

அந்தர நிஷ்டைகளுள் யாதாவது தொன்றனைப் பெற்றுத் தேக பதன பரியந்தம் நீ காலங் கழித்து வருவாயாக—(எ-று.)

## 73. நைவன நணுகேல்.

(பா-ம்.) நைவன - பின் வருத்த மடையத் தக்கவைகளில், நணுகேல் - (என்றும்) நீ சேரா திருப்பாயாக.

21-அதி. தீவினையச்சம். 6-செய்யுள்.

*தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால*
*தன்னை யடல்வேண்டா தான்.*

(பொ-ரை.) துன்பஞ் செய்யுங் கூறுபாடுடையவான பாவங்கள் தன்னை (பின் வந்து) வருத்துதலை வேண்டாதவன் தீமைக் கூறுபாடுடையவான வினைகளைத் தான் பிறரிடத்தே செய்யாதிருக்கக் கடவன்—(எ-று.)

(ஆ-ம்.) நைவன - (சிற்சம்பந்த ஸ்திதியில் சித்தம் * தைலதாரைபோல் நிலைத்தற் பொருட்டுத்) துன்பத்தைத் தருவதாகிய இதராகார வியாபாரங்களில், நணுகேல் - (என்றும்) நீ சேராதிருப்பாயாக.

(இ. பி.) பகவத் கீதை.

*வாங்கி யைம்பொறி நின்ற மனத்தினை*
*நீங்கி டாவகை நின்னு ளிருத்தியே*
*தீங்கி யாவையுஞ் சிந்தைசெ யாமையாம்*
*பாங்கி யாதது வேபயில் வாயரோ.*

(பொ-ரை.) (நேத்திர முதலிய இந்திரிய வாயில்களாற் புறம் போந்து) உருவ முதலிய பஞ்ச விஷயங்களிற் சஞ்சரித்து நிற்கி

* தைலதாரை - இடைவெளியின்றி ஒழுகுந் தைலம்.

ன்ற மனத்தை (விஷயத்தின் † தோஷ திருஷ்டி முதலிய வைரா க்கியத்தின் ஏதுவாகிய வுபாயங்களால் உள்ளே) இழுத்து, ஸ்வரூப மான நித்திரை யடையாதபடி (சர்வ வுபாதிகளி னின்றும் விடுபட்ட) பிரத்தியகான்மாவின் கண்ணே ‡ நிரோதமாகச் செய்து, (சமாதிக்கு யாதாவதொரு சிந்தனையும் விக்கின மாகலின்,) யாதானும் ஓரநான்ம பதார்த்தத்தையாவது, அல்லது பிரத்தியகான்மா வையாவது, சிறிதும் விருத்திக்கு விஷயமாக்காமையாகிய தன்மையினை யுடைய அப்பியாச மெதுவோ அவ்வுபாயத்தையே நீ பழகுவாய்—(எ-று.)

## 74. நொய்ய வுரையேல்.

(பா-ம்.) நொய்ய - அற்பமாகிய வார்த்தைகளை, உரையேல் - (என்றும்) நீ சொல்லா திருப்பாயாக.

20-அதி. பயனில சொல்லாமை. 10-செய்யுள்.

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.

(பொ-ரை.) சொற்களிலே பிரயோசனமுடைய சொற்களைச் சொல்லக் கடவர், சொற்களிலே பிரயோசனமில்லாத சொற்களைச் சொல்லா திருக்கக் கடவர்—(எ-று.)

(ஆ-ம்.) நொய்ய - (நிர்லேப சொரூபமா யிராவாறு தடைசெய்கின்ற யான் எனதென்னும் விருத்திக் கேதுவாயுள்ள) இழிவாகிய சொற்களை, உரையேல் - (ஒருபோதும்) நீ சொல்லா திருப்பாயாக.

---

† தோஷ திருஷ்டி - குற்றங் காண்டல்.
‡ நிரோதம் - அடக்கம்.

(இ. பி.) நன்னெறி.

இன்சொலா லன்றி யிருநீர் வியனுலகம்
வன்சொலா லென்று மகிழாதே - பொன்செய்
கதிர்வளையாய் பொங்கா தழற்கதிரால் தண்ணென்
கதிர்வரவாற் பொங்குங் கடல்.

(பொ-ரை.) பொன்னாலே செய்யப்பட்டு ஒலிக்கின்ற வளையல்களை யுடையவளே! மதுரமாகிய சொல்லினால் வல்லாமல் கடினமாகிய சொல்லினாலே கடல் சூழ்ந்த பெரிய பூமியிலே யுள்ளவர் எந்நாளும் மகிழ்ச்சியை யடையார், கடலானது சுடுகிற கிரணங்களையுடைய சூரியன் வருகையினாலே பொங்காது, சீதளம் பொருந்திய கிரணங்களையுடைய சந்திரன் வருகையினாலே பொங்கும்— (எ-று.)

## 75. நோய்க்கிடங் கொடேல்.

(பா-ம்.) நோய்க்கு - வியாதிக்கு, இடங்கொடேல் - (அது உன்னை யணுகும்படி) நீ யிடந்தரா திருப்பாயாக.

95-அதி. மருந்து. 6-செய்யுள்.

மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணின்
ஊறுபா டில்லை யுயிர்க்கு.

(பொ-ரை.) * (அம்மூவகை) மாறுகோளும் இல்லாத உணவை (தன்னுள்ளம் வேண்டியவளவை) மறுத்து (பிணி வாராத வளவினால் ஒருவன்) உண்ணுவானானால், (அவன்) உயிர்க்கு (பிணிகளாலே) துன்பம் விளைதல் உண்டாகாது—(எ-று.)

---

* அம் மூவகை மாறுகோள் - உண்பவன் சரீர சுபாவத்தோடு மாறு கொள்ளுதல், காலவியல்போடு மாறுகொள்ளுதல், சுவை வீரியங்களால் தம்முள் மாறுகொள்ளுதல் என்பனவாம்.

(ஆ-ம்.) கோய்க்கு - (நிர்மல வடிவமாயுள்ள சத்தா சாமான்ய த்தினை யடையாவாறு செய்யும்) மல * விட்சேப வாவரணங்கட்கு. இடங்கொடேல் - (ஒருபோதும்) நீ இடந்தரா திருப்பாயாக.

## (இ. பி.) விவேக சூடாமணி.

மேத்தவும் புடபா கத்தான் மேவிய மலத்தை விட்டுச்
சுத்தமாம் தன்கு ணத்தைச் சொன்னமே வுவதே போலச்
சித்தமுந் தியானத் தாலே சேர்ந்தமுக் குணம லத்தைச்
சுத்தமாய் விட்டுத் தன்னின் சுபாவமாஞ் சொரூப மேவும்.

(பொ-ரை.) சுவர்ணமானது நாநாவிதமாயுள்ள புடத்தின் பகுதிகளாலே தான் பொருந்தி யிருந்த களங்கத்தை விட்டுப் பரி சுத்தமாயுள்ள தன் உண்மைக் குணத்தை யடைவதுபோன்று மன மும் அகண்டாகார தியானத்தாலே மத்தியில் வந்து பொருந்திய † சாத்வீக இராஜச தாமச மென்னும் முக்குணங்களாகிய களங்கத் தை முழுதும் விட்டு தனது யதார்த்த சொரூபத்தைப் பொருந் தும்—(எ-று.)

## 76. பழிப்பன பகரேல்.

(பா-ம்.) பழிப்பன - (பிறர்) பழிக்குஞ் சொற்களை, பகரேல் - (என்றும்) நீ பேசா திருப்பாயாக.

---

* மலம் - பாபம். விக்ஷேபம் - சலித்தல். ஆவரணம் - மறை த்தல்.

† சாத்வீகம் - பிரகாசம் அல்லது சாந்தம்.
இராஜசம் - பிரவிர்த்தி அல்லது கோரம்.
தாமசம் - மோகம் அல்லது மூடம்.

20-அதி. பயனில சொல்லாமை. 8-செய்யுள்.

அரும்பய னாயு மறிவினார் சொல்லார்
பெரும்பய னில்லாத சொல்.

(பொ-ரை.) அறிதற்கரிய பயன்களை ஆராயவல்ல அறிவையுடையார் மிகுந்த பயனில்லாத சொற்களைச் சொல்லார்கள்—(எ-று.)

(ஆ-ம்.) பழிப்பன - (நிருபாதிக சொரூப பிரஹ்ம சாட்சாத்கார வடைவிற்குத் தடையாயுள்ள) அற்ப சுருதி வாக்கியங்களை பகரேல் - (எக்காலத்தும்) நீ பேசா திருப்பாயாக.

(இ. பி.) தேவாரம்.

வஞ்ச மின்றி வணங்குமின் வைகலும்
வெஞ்சொ லின்றி விலகுமின் வீடுற
நைஞ்சு நைஞ்சுநின் றுள்குளிர் வார்க்கெலா
மஞ்ச லென்றிடு மானைக்கா வண்ணலே.

(பொ-ரை.) (சிறிதேனும்) கபடமில்லாது எப்போதும் பரமேசுரனை வணங்குங்கள், கொடிய சொற்களைக் கூறுதலொழிந்து விலகிப் போங்கள், முத்தியடைய அன்பினால் மனமுருகி யுருகி நின்று உள்ளக் குளிர்ச்சியை யடைபவர்களுக் கெல்லாம் (பிறவியினால் வரும் துன்பத்திற்குப்) பயப்படாதீர்களென்று கருணைபுரிவான் திருவானைக் காவலின்கண் வீற்றிருக்கும் சிவபெருமான்—(எ-று.)

## 77. பாம்பொடு பழகேல்.

(பா-ம்.) பாம்பொடு - (பால் கொடுத்தவர்க்கும் விஷத்தைத் தருகிற) பாம்புக் கொப்பானவரோடு, பழகேல் - நீ சகவாசஞ் செய்யா திருப்பாயாக.

89-அதி. உட்பகை. 10-செய்யுள்.

உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருட்
பாம்போ டுடனுறைந் தற்று.

(பொ-ரை.) மனப்பொருத்த மில்லாதவரோடு கூட (ஒருவன்) வாழும் வாழ்வு, ஒரு குடிசையினுள்ளே நாகப் பாம்போடு கூட வாழ்ந்தாற்போலும்—(எ-று.)

(ஆ-ம்.) பாம்பொடு - (நிரவயவ சொரூப சாட்சாத்காரத்திற்குத் தடையாய்) அரவுபோன்று தீமையை விளைவிக்கும் புத்தி விருத்தியுடன் கூடுதலே, பழகேல் - நீ அப்பியாசஞ் செய்யா திருப்பாயாக.

(இ. பி.) உபதேசவுண்மை.

புற்றாந் தேகக் குகையதனிற் பொருந்தி வாழு மோரரவம், புற்றாந் தேகேந் தியவழிபோம் புலனை மறித்துப் பிடித்திழுத்துப், புற்றாங் குகையிற் கட்டுமட்டும் போக்கும் வரவும் விடுவதில்லை, புற்றாங் குகையிற் கட்டுண்ட புலனைக் கழித்து விடுவாயே.

(பொ-ரை.) புற்றாகிய சரீரமென்கின்ற குகையினிடத்துத் தங்கி வாழ்கின்ற ஒப்பற்ற மனமென்னுஞ் சர்ப்பமானது புற்றாகிய உடற்கணுள்ள இந்திரியங்களென்கின்ற மார்க்கத்தில் செல்வதாம்; அவ்வாறு சென்று விஷயங்களைப் பற்று மதனை உபரதி வைராக்கியங்களால் தடுத்துச் சிரவணாதிகளாகிய கயிற்றினாலே கட்டி யிழுத்து, புற்றாகிய சரீரமென்கின்ற குகையில் † அகண்ட தியானஞ் செய்து லயப்படுத்துகிற பரியந்தமும் சநந மரணங்கள்

† அகண்ட தியானம்=ஜீவப்ரஹ்ம ஐக்கியானு சந்தானம்.

நீங்குவதில்லை; ஆகையால், புற்றாகிய சரீரமென்கின்ற குகையில் கட்டுப்பட்ட அம்மனத்தை ‡ தத்துவ ஞானத்தால் நியதிகளைந்து விடுவாய்—(எ-று.)

## 78. பிழைபடச் சொல்லேல்.

(பா-ம்.) பிழைபட - குற்றமுண்டாக, சொல்லேல் - (யாதொன்றையும்) நீ சொல்லா திருப்பாயாக.

44-அதி. குற்றங்கடிதல். 4-செய்யுள்.

குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
யற்றந் தரூஉம் பகை.

(பொ-ரை.) முடிவை (தனக்குத்) தரும் பகை குற்றமேயாம்; (ஆதலால்,) அக்குற்றம் (தன்னிடத்து வாராமையையே) பயனாகக் கொண்டு காக்க வேண்டும்—(எ-று.)

(ஆ-ம்.) பிழைபட - (நிர்விகற்ப சொரூப நிஜஸ்திதியை யடைதற் குரிய வனுசந்தானமானது) தவறுதலடைய, சொல்லேல் - (உலோகாசார வார்த்தைகளுள் ஒன்றையும்) நீ பேசாதிருப்பாயாக.

(இ. பி.) ஒழிவிலொடுக்கம்.

தன்னறிவு சாட்சியல்லாற் சாயுச்சி யப்பயனைச்
சொன்னபிழை கெட்டேன் றொலைப்பரோ-முன்னே
நடவா வழியொருவன் சொல்ல நடந்து
தடுமாறி நொந்தறியா தார்.

(பொ-ரை.) சிவாநுபவம் நன்றாய் விளங்கிற்றென்பதற்கும் அஃதின்றென்பதற்குந் தனக்குத் தன்னறிவு தானே சாட்சியாயி

‡ தத்துவ ஞானம்—உண்மையான ஞானம்.

ருக்கவும், பயனைக் குறித்து மயக்கத்தா லந்த வநுபவந் தனக்கு உண்டுபோற் காட்டிப் பிறர்க்கு வீடடையு நெறியான வுபதேசப் பொருளைக் கூறிய பாவங்களை, கெட்டேன்! எந்தக்காலம் நீக்கிக் கொள்வரோ! அஃதன்றியுந் தாமுன் செல்லாத வோரூர்க்குப் பின் செல்லுங்கால் அவ்வூ ரடையு நெறி யாதென் றந்நெறிக்கட் டான் முன் நடவா வொருவனைக் கேட்ப, அவனதன்கட் சென்று ன்போன்று நெறியல்லா நெறிகூற, ஈதுண்மையெனக் கருதி அந்நெறிக்கட் சென்று முன்னிருந்த வூரும், பின்னடையு மூருமன்றி நடுவிடைத் தடுமாறி மனமுடல் வருந்தி யறிந்தவ ரலர்—(எ-று.)

## 79. பீடு பெற நில்.

(பா-ம்.) பீடு - பெருமையை. பெற - அடைய, நில் - (நல்ல வழியிலே) நீ நிற்கக் கடவாயாக.

98-அதி. பெருமை. 4-செய்யுள்.

ஒருமை மகளிரே போலப் பெருமையுந்
தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு.

(பொ-ரை.) பிளவுபடாத மனத்தை யுடைய பெண்கள் (நிறையினின்றுந் தவறுது தம்மைத் தாங்களே பாதுகாத்துக்கொண்டு நடக்கும் விதம்) போல, பெருமைக் குணமும், (ஒருவன் நிறையினின்றுந் தவறுமல்) தன்னைத்தான் பாதுகாத்துக் கொண்டு நடக்க வல்லனுயின், (அவனிடத்து) உண்டாம்—(எ-று.)

(ஆ-ர்.) பீடு - (நிர்க்குண சொரூப அகண்ட சாட்சாத்காரத் தினுல் திரிபுடி ரூப துவைத மிறந்த) ஐக்கிய ஸ்திதியை, பெற - அடைய, நில் - (சிவ சொரூபமாந் தேசிக ரருளிய வழியில்) நீ நின்றொழுகுவாயாக.

(இ. பி.) பெருந்திரட்டு.

இல்லின்ப மிகழ்ந்து பேரின்பம் வேண்டி யெழிற்குரு வருடனின் மேலா, நல்லுணர் வதனைப் பெற்றே காந்த நண்ணியே சமாதியிற் றொடங்கி, யல்பக லேக்க ணாவபாட் டிடுவோ னறைதரு பணிக்கன்பி காமன், வல்கரிப் பாகன் போலநோக் குவர்க்கு மனையின்பிட் டிச்சையு மெழுமோ.

(பொ-ரை.) சிற்றின்பத்தை வெறுத்துப் பேரின்பத்தை விரும்பி, அழகு பொருந்திய குருவினுடைய திருவருளினாலே மேன்மை பொருந்திய மெய்யுணர்வைப் பொருந்தி, ஒரு தனியிடத்தை யடைந்து சமாதி யப்பியாசத்தில் ஆரம்பித்து, இரவும் பகலும் கழைக்கூத்தன், பாம்பாட்டி, சொல்லத்தக்க நாவிதன், தோணி யியக்குவான், வலிமைபொருந்திய யானைப்பாகன் போன்று, (சொரூபத்தை) நோக்கி யிருப்போர்க்கு சிற்றின்பத்தில் மறுபடியும் விருப்பம் உண்டாகுமோ ! உண்டாக மாட்டாது—(எ-று.)

## 80. புகழ்ந்தாரைப் போற்றி வாழ்.

(பா-ம்.) புகழ்ந்தாரை - (அறிவுடையோரால்) துதி செய்தவரை, போற்றி - (கைவிடாது) காப்பாற்றி, வாழ் - நீ வாழ்வாயாக.

53-அதி. சுற்றந்தழால். 2-செய்யுள்.

விருப்பறாச் சுற்ற மியையி னருப்பறா
வாக்கம் பலவுந் தரும்.

(பொ-ரை.) அன்பு நீங்காத சுற்றமானது (ஒருவனுக்குக்) கிடைக்குமாயின், (அது) கிளைத்தல் நீங்காத பல செல்வங்களையும் (அவனுக்குக்) கொடுக்கும்—(எ-று.)

(ஆ-ம்.) புகழ்ந்தாரை - (நிராகார சொரூபத்தில் நிலைத்துப் பிறவிப் பிணியை நீக்கற்பொருட்டு மேன்மக்கள் யாவரும்) சிறப்பித்துக் கூறும் தேசிகோத்தமரை, போற்றி - (என்றும்) துதித்து, வாழ் - நீ வாழ்வாயாக.

## (இ. பி.) தத்துவதேசிகம்.

ஈசனெடு மால்பிரம னென்பர்சிலர் தெய்வ
மாசிலரு கன்சுகத னென்பர்சிலர் மற்றும்
பேசுவர்க டேவதை பிறப்பினை யறுக்குந்
தேசிகனை யல்லதொரு தெய்வமறி யோமே.

(பொ-ரை.) ஒரு சாரார் உருத்திரனையும், திருமாலையும், பிரமனையும், தெய்வமென்று கூறுவார்; மற்றொரு சாரார் குற்றமில்லாத அருகனையும், புத்தனையும், தெய்வமென்று கூறுவார்; (இன்னொரு சாரார்) இன்னும் (வெவ்வேறாக) தேவதைகள் (உண்டென்று) கூறுவார்; (அங்ஙனமாயினும் யாம்) ஜன்மத்தை யொழிக்கும் குருவை யல்லாமல், வேறொரு தெய்வ முண்டென்று அறிந்தோமில்லை—(எ-று.)

## 81· பூமி திருத்தி யுண்.

(பா ம்.) பூமி - விளை நிலத்தை, திருத்தி - சீர் திருத்தி, (பயிர் செய்து அதன் விளைவை,) உண் - நீ சாப்பிடுவாயாக.

104-அதி. உழவு. 3-செய்யுள்.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்.

(பொ-ரை.) (யாவரும் உண்ணும்படி) உழுதலைச் செய்து (அதனால் தாமும்) உண்டு வாழுகின்றவரே (தமக்கு உரியராய்) வா

ழ்கின்றவர். மற்றவரெல்லாரும் (பிறரைத்) தொழுது (அதனல் தாம்) உண்டு (அவரைப்) பின் செல்லுகின்றவர்—(எ-று.)

(ஆ-ம்.) பூமி - (ஈசீஸ்வர சொரூபமாதற்பொருட்டு ஞானபூமி எழனுள் முதல் மூன்று பூமியின் அப்பியாச பலத்தினைக்கொண்டு மனத்தினை, திருத்தி - (அகண்டாகார விருத்தியால் ஆவரணுதியம்சங்கள் இறையளவேனுமில்லாவாறு) செப்பஞ்செய்து. உண் - (அது காரணமாக வெளிப்படும் பிரஹ்மாநந்தத்தை) நீ அநுபவித் திருப்பாயாக.

(இ. பி.) தாயுமானவர்.

*காராரு மாணவக் காட்டைக் களைந்தறக் கல்லடசங் காரமென்னுங், கல்லைப் பிளந்துநெஞ் சகமான பூமிவெளி காணத் திருத்தி மேன்மேல் ; பாராதி யறியாத மோனமாம் வித்தைப் பதித் தன்பு நீராகவே, பாய்ச்சியது பயிராகு மட்டுமா மாயைவன் பறவையணு காத வண்ணம் ; நேராக நின்றவிளை போகம் புசித்துய்ந்த நின்னன்பர் கூட்ட மெய்த, நினைவின் படிக்குநீ முன்னின்று காப்பதே நின்னருட் பாரமென்றும் ; ஆராரு மறியாத சூதான வெளியில்வெளி யாகின்ற துரிய மயமே, அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி யானந்த மான பரமே.*

(பொ-ரை.) இருள் நிறைந்த ஆணவக் காட்டை வேரறப்பறித்து வெட்ட வெளியாக்கி, அதன்கணுள்ள அகங்காரமென்கிற கல்லைப்பிளந் தெறிந்து, மனமாகிய நிலமானது வெளியாய்த் தோன்றும்படி திருத்தி, மேலுமேலும் மண்ணகத்தார் முதலானவர்கள் அறியாத மோனநிலையென்கிற விதையை யூன்றி, அன்பினை நீராகப் பாயவிட்டு, அது பயிராகு மளவும் பெரிய மோகமென்னும்

வலிய பறவை சேர்ந்து அழிக்காதவகை தமது முயற்சியினளவிற் குறையாமல் செவ்வே நின்று அப்பயிரைக் காத்து, பின் மனவொருமையால் விளைந்த ‡ சிவபோகத்தை யனுபவித்து உஜ்ஜீவித்த உன்னடியார் கூட்டத்தை நானடையுமாறு என் எண்ணத்தின்படி நீ எனக்குப் பிரத்தியக்ஷமாகி நின்று காப்பாற்றுவது 'உன் திருவருட் குரிய கடமையாம். எப்பொழுதும் எவ்வகைப்பட்ட மேலோரும் உணராத இரகசியமான சிதாகாயத்தில் வெளிப்படத்தோன்றுகின்ற துரியவடிவே! இவ்வண்டங்களும் இவற்றின் புறத்திலுள்ள அண்டங்களும் குறுகி யுள்ளடங்கும்படி ஒப்பற்ற பரிபூரணமாகிச் சுகரூபமாயுள்ள பரம்பொருளே! —(எ-று.)

## 82. பெரியாரைத் துணைக்கோள்.

(பா-ம்.) பெரியாரை - (அறிவிற் சிறந்த) பெரியோரை, துணைக்கொள் - நீ (உனக்குத்) துணையாகச் செய்துகொள்வாயாக.

45-அதி. பெரியாரைத் துணைக்கோடல். 3-செய்யுள்.

அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

(போ-ரை.) அப்பெரியவர்களை (அவர்) மகிழத் தக்கவைகளை யறிந்து செய்து தமக்குச் சிறந்தவராகக் கொள்ளுதல், (ஒருவர்க்கு) அரிய பேறுகள் பலவினும் அருமை யுடையதாம்—(எ-று.)

(ஆ-ம்.) பெரியாரை - (நிரிந்திரிய சொரூப சாட்சாத்கார மடையுமாறு ஆன நற்கல்வி, அறிவு, அடக்கம், வைராக்கிய முதலியவற்றை யுடைய) பிரஹ்ம நிஷ்டாபரர்களை, துணைக்கொள் - (என்றும்) நீ பற்றுக்கோடாகக் கொண்டிருப்பாயாக.

---

‡ சிவபோகம் - தானந்தம்.

(இ. பி.) ஞானவாசிட்டம்.

அறக்குறைவை நிறைவாக்குஞ் சம்பத் தாக்கு மாபத் தைச் சுபமாக்கு மசுபம் தன்னைச், சிறக்குமுயர்ந் தவர்கூட்ட மென்னுங் கங்கைச் சிதநீ ராடினர்க்குச் செந்தீ வேள்வி, யிறக்கரிய தவந்தானந் தீர்த்தம் வேண்டா மிடர்ப்பந்த மறுத்தெ வர்க்கு மினியோ ராகிப், பிறப்பெனும்வே லைப்புணையா முணர்வு சான்ற பெரியோரை யெவ்வகையும் பேணல் வேண்டும்.

(பொ-ரை.) மிகவு மற்பமான (அறிவை) பூரணமாக்குவதாயும், (விடயங்களால் வரும்) ஆபத்துக்களைச் சம்பத் தாக்குவதாயும் (ஒன்றிலுஞ் சுகியாத) அமங்கலத்தை (சர்வத்திலுஞ் சுகிக்கின்ற) மங்கல மாக்குவதாயு மிருக்கின்ற சிறந்த மகான்களது சங்கமென்கிற சானவியினது குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானஞ்செய்தவர்களுக்குச் சிவந்த வக்கினி காரியமான யாகங்களும், கெடாத தவங்களும், மகா தானங்களும், புண்ணிய தீர்த்தங்களும் வேண்டுவதில்லையாம் ; ஆதலால், துக்கமாகிய பந்தத்தை நாசஞ் செய்து யாவர்க்கு மினிமை யுள்ளவராயும், சநந மென்னுஞ் சமுத்திரத்தைக் (கடப்பதற்குக்) கப்பலாயு மிருக்கின்ற அறிவு நிறைந்த மகான்களை எவ்விதத்திலும் விரும்பல் வேண்டும்—(எ-று.)

## 83. பேதைமை யகற்று.

(பா-ம்.) பேதைமை - அறிவில்லாமையை, அகற்று - (உனக்குள் இராமல்) நீ நீக்கி விடுவாயாக.

36-அதி. மெய்யுணர்தல். 8-செய்யுள்.

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு.

(பொ-ரை.) பிறவிக்கு முதற்காரணமான அஞ்ஞானமானது கெட்டொழிய, மோட்சத்திற்கு நிமித்த காரணமான செவ்விய பொருளைக் காண்பதே (ஒருவனுக்கு) மெய்யுணர்வாம்—(எ-று.)

(ஆ-ம்.) பேதைமை - (நிர்ஜீவ சொரூபமாயுள்ள தன்னையுள்ளவாறு தரிசித்தற் பொருட்டு அநாத்மாவாகிய தேகேந்திரிய முதலியவற்றில் ஆன்மபுத்தி, அநித்தியமான பிருதிவி முதலியவற்றில் நித்தியபுத்தி. துக்க வடிவு தனுதிகளில் சுகபுத்தி, அசுசியான சரீர முதலியவற்றில் சுசிபுத்தி யென்னும்) அஞ்ஞானத்தை, அகற்று - (அகம்பிரமாஸ்மி யென்னும் பாவனையினால்) நீ ஒழிப்பாயாக.

(இ. பி.) ரிபுகீதை.

பேதமதி பொருந்தியிடுஞ் சித்தந் தானே
பிறவிமுதற் றுயர்செய்யும் பெந்த நல்கு
மேதமுறும் பேதமதி யிகழ்ந்த போதே
யின்னலெலாந் தீர்ந்துடனே மோட்ச நல்கு
மாதலினு லகம்பிரம மகமெல் லாமென்
றகம்பிரம பாவனையே செய்த வற்றால்
வாதகமாம் பேதமதி யனைத்தும் நீக்கி
வழுவற்ற சித்தத்தான் முத்தி சேர்வாய்.

(பொ-ரை.) பேதபுத்தியைப் பொருந்தி யிருக்கின்ற மனந்தானே பிறத்தல் முதலாகிய துன்பத்தைச் செய்கின்ற பந்தத்தைக் கொடுக்கும், குற்றம் பொருந்திய பேதபுத்தி சுருதி குரு சுவானுபவத்தால் நீங்கிய காலத்தில், சகல துன்பங்களும் நீங்க அந்தக்கரணமே முத்தியைக் கொடுக்கும்; ஆகையால், நானே பிரஹ்மம் சர்வமும் நானே யென்று அகம்பிரஹ்ம பாவனையே செய்து அப்பாவனைகளாலே மாறுபாடுகளைச் செய்கின்ற பேதபுத்திகளை

த்தையு மொருங்கே யொழித்துக் குற்றமில்லாத சாந்தி விரக்தியு டைய மனதால் மோக்ஷமடையக் கடவாய்—(எ-று.)

## 84. பையலோ டிணங்கேல்.

(பா-ம்.) பையலோடு - (யூகமின்றிய) சிறுவருடன், இணங்கேல் - நீ சகவாசஞ் செய்யா திருப்பாயாக.

46-அதி. சிற்றினஞ்சேராமை. 1-செய்யுள்.

சிற்றின மஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்.

(பொ-ரை.) பெரியோரியல்பு சிறிய வினத்தை அஞ்சா நிற்கும். மற்றைச் சிறியோரியல்பு (அது சேர்ந்த பொழுதே அதனைத் தனக்கு) உறவாக எண்ணித் துணியும்—(எ-று.)

(ஆ-ம்.) பையலோடு - (நிஷ்ப்ரகிருதி சொரூப அகண்ட சாட்சாத்கார முண்டாதற்பொருட்டு) வாசாகைங்கரியமாய் ஞானானுபவத்தைப் பேசும் அஞ்ஞர்களுடன், இணங்கேல் - (என்றும்) நீ சேரா திருப்பாயாக.

### (இ. பி.) போதாமிர்தம்.

வெகுளி தங்கிய வுளத்தினர் விகாரமே விளைதர மொழி நாவர், முகுளி தம்பொறி முகத்தினர் மோகபோ கத்தின் மூழ் கிடுமூட ரகள மொன்றிய வறிவினி னனுபவ மறுபவ ரறமோத, னிகள பெந்தன மெனவவ ரவர்தமை நீங்குக நெறிசேர்வார்.

(பொ-ரை.) நன்மார்க்கத்தி லொழுகுவோர் கோபம்பொருந்திய மனத்தினை யுடையவர், பிறருக்கு மனவருத்தம் உண்டாகக்

கொடுமொழி கூறும் நாவை யுடையவர், சுளித்தல் பொருந்திய முகத்தை யுடையவர், அஞ்ஞான கூபத்தில் மூழ்கி யுள்ள அறிவீனர்கள், பரிசுத்தம் பொருந்திய ஆத்மாவி னனுபவம் ஒழிந்தவர், ஆகிய இவர்கட்கு அறநெறியைக் கூறுதல் விலக்கிடலாமென (பந்தத்திற் கேதுவாமெனக்)கருதி, அவ்வவர்களை விட்டு நீங்குவாராக—(எ-று.)

## 85. பொருடனைப் போற்றி வாழ்.

(பா-ம்.) பொருடனை - திரவியத்தை, போற்றி - காப்பாற்றி, வாழ் - நீ வாழ்வாயாக.

12-அதி. நடுவுநிலைமை. 2-செய்யுள்.

செப்ப முடையவ னாக்கஞ் சிதைவின்றி
யெச்சத்திற் கேமாப் புடைத்து.

(பொ-ரை.) நடுவுநிலையை யுடையவனது செல்வமானது (பிறர் செல்வம்போல்) அழிதலின்றி அவன் சந்ததியார்க்கும் உறுதியாதலை உடையதாம்—(எ-று.)

(ஆ-ம்.) பொருடனை - (நிர்விசேஷ சொரூபமா யென்று மொருதன்மைத்தாயுள்ள) முத்திப்பொருளை, போற்றி - (ஞானபூமி வாயிலா யியற்றும் அப்பியாச தசையில் சிரவணாதிகளால்)பாதுகாத்து, வாழ் - நீ வாழ்வாயாக.

### (இ. பி.) ஞானவாசிட்டம்.

மோகமில்லா தவர்செறிவான் முதுநல்லறத்தின் சமுகத்தாற், காகதாலி யம்போலக் கருத்திலுதிக்கு முதலான, யோகபூமி யுதித்தலுமே யுள்ளேயமுத முளையொப்பா, மேகவிவேக நீர்பாய்ச்சி யிதுகாத்தளிக்கப் படுமுயன்றே.

(பொ-ரை.) மயக்கமற்ற சத்துக்களது சங்கத்தினாலும், முதிர்ந்த நிட்காம தருமத்தின் சங்கத்தினாலும், காகதாலிய நியாயத்தைப்போல (சுபேச்சை யென்று) முதன்மையாகிய ஞானபூமியானது மனதிலுண்டாகும். அகத்தி லமுதாங்குரத்துக் கிணையாக உதயமாகவும் ஒன்றான விவேகமாகிய ஜலத்தைப் பாய்ச்சி முயற்சித்து இது காத்து இரட்சிக்கப்படும்—(எ-று.)

(இதுவுமது.)

விடுதியாலே தழைக்குமிது விசாரத்தாலவ் விடுதிதனை,
வடுவிலுழவர் நென்முளைப்போல் வருந்திவளர்க்க நாடோறு,
மொழிவின்மறுபூ மிக்கிந்த வொன்றேசாரு பூமியென, முடி
வில்வெளியா மதிலிரண்டா மூன்றாம்பூமி தனைப்பெறலாம்.

(பொ-ரை.) பற்றின்மையால் இந்த முதற்பூமியானது வளரும், விசாரணையினால் அப்பற்றின்மையை களங்கமற்ற பள்ளர்கள் (தங்கள் பூமியில்) நெல் முளையை (வளர்ப்பது) போல தினந்தோறும் வருத்தப்பட்டு வளரச் செய்ய, கெடுதலில்லாத அடுத்த பூமிகளுக்கு இம் முதற்பூமியான தொன்றமே காரண பூமியாக அந்தத்தில் வெளிப்படும், அதினின்றும் இரண்டாம் பூமியாகிய விசாரணையையும், தனுமானசியாகிய மூன்றாம் பூமியையும் அடையலாகும்—(எ-று.)

## 86. போர்த்தொழில் புரியேல்.

(பாபி.) போர்த்தொழில் - சண்டையாகிய தொழில்களை, புரியேல் - (என்றும்) நீ செய்யா திருப்பாயாக.

86-அதி. இகல். 2-செய்யுள்.

பகல்கருதிப் பற்றா செயினு மிகல்கருதி
யின்னாசெய் யாமை தலை.

(பொ-ரை.) (தன்னோடு) கூடாமையை நினைத்து வெறுப்பவைகளை (ஒருவன்) செய்தானாயினும், (அவனோடு) மாறுபடுதலைக் குறித்துத் துன்பந் தருபவைகளை (தாம் அவனுக்குச்) செய்யாமை உயர்ந்தது—(எ-று.)

(ஆ-ம்.) போர்த்தொழில் - (நிஷ்ப் பஞ்ச சொரூபமாக விளங்குவதற்குத் தடையாயுள்ள) சாதி சமய ஆசார சாஸ்திர தருக்கப் போரினை, புரியேல் - (என்றும்) நீ கைக்கொள்ளா திருப்பாயாக.

## (இ. பி.) பிரமகீதை.

சதுமறைப் பொழிந்த வாதனை பொல்லாத் தர்க்கவா தனை
யுலகத்தின், மதமுறு சமய வாதனை தார மக்கள்சுற் றத்தி
ன்வா தனையு, மிதமுறும் பொருளின் வாதனை தேகேந் திரிய
மனம் புத்திநற் பிராணன், முதலவா தனையும் வித்தைவா
தனையு முடிவில்போ கத்தின்வா தனையும்.

(பொ-ரை.) நான்கு வேதங்களுக்கும் புறம்பாய சாஸ்திரவாசனையும், குதர்க்க வாசனையும், ஜகத்தில் அகங்காரமுள்ள சமய வாசனையும், மனைவி, புத்திரர், உறவோர் (ஆகிய இவர்களிடத்துள்ள) வாசனையும், நன்மை பொருந்துகின்ற திரவியத்தின் வாசனையும், உடல், இந்திரியம், மனம், புத்தி, நல்ல பிராணவாயு முதலானவற்றின் வாசனையும், கல்வியின் வாசனையும், ஒழிவில்லாத போகத்திலுள்ள வாசனையும்—(எ-று.)

## (இ. பி.) இதுவுமது.

ஏறுடைச் சிவனைத் திருநெடு மாலை யிகழும்வா தனையு
ம்வே தத்திற், கூறிடு ஞான சாதன மாகக் கொள்ளுமுத்
தூளபுண் டரத்தை, மாறுட னிகழும் வாதனை பாவ வாதனை

மாயாபரா னூடர்க்கு, வேறுடும் பாராத் துவிதஞா னந்தை விலக்கிடும் விரோதிவிஸ் லாவரே.

(பொ-ரை.) இடப வாகனத்தையுடைய உருத்திரனையும், திருமகளை மார்பிலுடைய மகாவிஷ்ணுவையும், நிந்திக்கும் வாசனையும், வேதத்திற் கூறும் ஞானத்திற்குச் சாதனமாக அங்கீகரிக்கின்ற (விபூதி) உத்தூளனம், திரிபுண்டர மிவற்றை விரோதத்துடனே நிந்திக்கும் வாசனையும், பாவ சம்பந்தமான வாசனையும், ஆகிய வெல்லாம் தேவர்களே! மனிதர்களுக்குத் துவிதத்தை நாசஞ் செய்யும் மேம்பாடுள்ள அத்துவித ஞானத்தை நீக்குகின்ற விரோதிகளாம்—(எ-று.)

## 87· மனந் தடுமாறேல்.

(பா-ம்.) மனம் - (எவ்வகைப்பட்ட துன்பஞ் சேர்ந்த காலத்தும்) மனத்தை, தடுமாறேல் - நிலைகலங்கா திருக்கச் செய்வாயாக.

63-அதி. இடுக்கணழியாமை. 5-செய்யுள்.

அடுக்கி வரினு மழிவிலா னுற்ற
இடுக்க ணிடுக்கட் படும்.

(பொ-ரை.) இடைவிடாது மேலுமேலும் வந்தனவாயினும், (தன்னுள்ளக் கோட்பாடு) விடாதவனை அடைந்த துன்பமானது (தான்) துன்பத்திலே படும்—(எ-று.)

(ஆ-பீ.) மனம் - (நிரஞ்சன சொரூப சாட்சாத்கார வப்பியாசஞ் செய்யு மிடத்து வாதனை வசத்தினாலே) மனம் (சலனப்படுமாயின்,) தடுமாறேல் - (அக்கணமே சலனகார விருத்தி யெழுமிடத்தையே நோக்கி யிருந்து அச்சலனத்தைத்) தடுமாற்ற மின்றி நீ யொழிப்பாயாக.

## (இ. பி.) உபநிடதம்.

*பொன்போல விலங்குமனஞ் சஞ்சலத்தாற் குரங்காம்*
*புத்திவிசா ரித்தறியும் பொறிவதனா லரவாந்*
*தன்போல விலையெனலா லகங்கார மதமாந்*
*தனைநிகராஞ் சித்தமொரு தன்மையினா னாயா*
*மின்போலுஞ் சலனமன மசையாம னிறுத்தி*
*விசாரிக்கும் புத்தியினை மெய்ப்பொருட்பால் விடுத்து*
*வன்போடு வருமகங்கா ரத்தினையுங் கடிந்தால்*
*வைத்தவிடத் திருந்துசித்த மகத்துவமுந் தருமே.*

(**போ-ரை.**) மாற்றுயர்ந்த பொன்போல மல ரகிதமாக விளங்கும் மனமெனப்படுதல் யாதோ, அது பகிர்முகத்தாய வழி வெய்துஞ் சஞ்சலத்தினால் குரங்கு போல்வதாகும், அதன் திரிபாகிய புத்தி யெனப்படுவது காரியங்களை விசாரித்தறியும் மிகுதியினால் கட்செவி போல்வதாகும், அப்புத்தியின் திரிபாகிய அகங்கார மெனப்படுதல் தன்னைப்போல ஒருவரு மில்லையெனக் கோடலால் மதயானை போல்வதாகும், அவ்வகங்காரத்தின் திரிபாகிய சித்தமெனப் படுதல் இழிவில் தனக்குத் தானே நிகரெனப்படும் ஓரேதுவினால் நாய்போல்வதாகும், மின்போலத் தோன்றி மறைதலையுங் கணமேனும் நில்லாது சலித்தலையுடைய அந்த மனதை அந்தர்முகத்தாய வழிச் சற்றுஞ் சலியாமல் நிறுத்திப் பொய்ப்பொருளையே நிஜமென விசாரித் துழலும் புத்தியெனப்படுவதை மெய்ப்பொருளாகிய சைதன்யத்தின்கண் விசாரிக்க விடுத்து, விடய வலிமைகொண்டு பிறந்திறந்து வருதற்குரிய அகங்காரத்தையும் நாசப்படுத்தினால், சித்தமெனப்படுவது விசாரித்து இலக்காக வைத்த அந்தச் சைதன்யத்தினிடத்தில் பிறழாதி

ருந்து நவ நவமாய மேலாய நிலைகளையும், ஏகமாக நிற்கும் மகத்தத்துவத்தையுந் தந்தே விடும்—(எ-று.)

## 88. மாற்றானுக் கிடங்கொடேல்.

(பா-ம்.) மாற்றானுக்கு - பகைவனுக்கு. இடங்கொடேல் - (உன்னை யணுகும்படி) நீ இடந்தரா திருப்பாயாக.

89-அதி. உட்பகை. 2-செய்யுள்.

வாள்போல் பகைவரை யஞ்சற்க வஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

(பொ-ரை.) வாள்போல (வெட்டுவோமென்று வெளிப்பட்டு நிற்கும்) பகைவரை அஞ்சாதிருக்கக் கடவர். (அப்படி நில்லாமல்) உறவினர்போலே (மறைந்து நிற்கும்) பகைவரது நட்பினை அஞ்சக் கடவர்—(எ-று.)

(ஆ-ம்.) மாற்றானுக்கு - (நித்திய சொரூபமாய் விளங்கும் ஆன்மாவை யடைதற்கு) மாறாயுள்ள அநான்ம பாவத்திற்கு, இடங்கொடேல் - (என்றும்) நீ இடந்தரா திருப்பாயாக.

### (இ. பி.) ஞானவாசிட்டம்.

பொய்யதாமுயற் கொம்பினைப் பற்றவும் போக்கவு
நினைப்பாரா, ரைய னேபரபோதபூ ரணத்திலே மாயலொன்று வருமாறென், பொய்ய தாகிய வனேகபாவனையினைப்
பொருந்தல்புன் பிறப்பாகு, மைய மின்றிய வேகபாவனை
யினி லழுந்துதல் பவந்தீர்தல்.

(பொ-ரை.) அசத்தாயுள்ள † சசவிஷாணத்தைப் பிடிக்கவும் விடுக்கவும் கருதுபவர் யாவர், எனதாசிரியரே! பிரஹ்ம ஞான

† சசவிஷாணம்=முயற்கொம்பு.

மாகிய பூரணத்தில் வேறொன்று வருகின்ற விதமெவ்வாறு? அசத்தியமாகிய எளவிறந்த பாவனையை அடைதல் இழிவாகிய பிறப்பிற்கேதுவாகும், சந்தேக மில்லாத ஏக (ஆன்ம) பாவனையை யடைதல் பிறவி நீங்குதற் கேதுவாமென்று (வசிட்டமுனி) சொன்னார்—(எ-று.)

## 89. மிகைபடச் சொல்லேல்.

(பா-ம்.) மிகைபட - (சொல்லத் தகுவதற்கு) அதிகமாக. சொல்லேல் - (யாதொன்றையும்) நீ சொல்லா திருப்பாயாக.

20-அதி. பயனில சொல்லாமை. 9-செய்யுள்.

பொருடீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருடீர்ந்த
மாசறு காட்சி யவர்.

(பொ-ரை.) மயக்கத்தி னின்றும் நீங்கிய குற்றமற்ற அறிவினை யுடையோர், பயனினின்றும் நீங்கிய சொற்களை மறந்தும் சொல்லமாட்டார்—(எ-று.)

(ஆ-ம்.) மிகைபட - (நித்தியாநந்த சொரூப சாட்சாத்கார முண்டாக்கும் சற்குருவின் முன்னர்) அடங்கி யொழுகுதற்கு மாறாக, சொல்லேல் - (எதனையும்) நீ சொல்லா திருப்பாயாக.

### (இ. பி.) போதாமிர்தம்.

அருளுறமங் கறைந்திடுத லறமலா துரைத்த லறை பொழுதி னிடையுரைத்த லகங்கரிப்பங் குரைத்தல், பொருளறிவு தாறுரைத்தல் பொருளல்லா துரைத்தல் புன்கோட்டி கொண்டுரைத்தல் பொடிவனவங் குரைத்த, லிருளுறவச் செவிச்சொல்ல லேவலிசைத் திடுத லிடமறியா திறை

யருளிச் செயவுரைத்தல் வினவ, நெருநெறுநற் குருகீர்த்தி யல்லதுபா டிடுத பேசிகன்றன் சந்நிதியிற் பிரவிடுமிவையே.

(பொ-ரை.) குருமூர்த்தியின் சந்நிதானத்தில் அருளோடு கூடி யறத்தைப் புரியும் வகையைக் கூறுதல், அறமல்லாதவற்றைக் கூறுதல், குருமூர்த்தி ஒன்றைக் கூறும்பொழுது இடையே தடுத்து மற்றொன்றைச் சொல்லுதல், தனது மேன்மையைப் புலப்படுத்தும் அகங்கார வார்த்தைகளைக் கூறுதல், பதார்த்த சோதனையின் தேர்ச்சியைக் கூறுதல், பயனில்லாத வார்த்தைகளைக் கூறுதல், சிற்றினத்தாரைத் தன்னுடன் சேர்த்துப் பேசுதல், நிந்திக்கத் தக்கவைகளைக் கூறுதல், பிறரது செவியில் இரகசியமாகச் சொல்லல், பிறர்க்குத் தனக்கேவல் புரியுமாறு கட்டளையிடுதல், சந்தர்ப்ப மறியாது குரு அருளிச் செய்ததைக் கூழுதல், அதுபற்றி அவரோடு கேட்டல், தெளிவு பொருந்திய சற்குருவினது கீர்த்தியைப் பாடாது மற்றொன்றைப் பாடுதல் ஆகிய இவற்றை நீ முற்றும் ஒழிப்பாயாக—(எ-று.)

## 90· மீதூண் விரும்பேல்·

(பா-ம்.) மீதூண் - அதிக வுணவை, விரும்பேல் - (என்றும்) நீ விரும்பா திருப்பாயாக.

95-அதி. மருந்து. 7-செய்யுள்.

தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணி
னோயள வின்றிப் படும்.

(பொ-ரை.) (தன் சரீர சுபாவமும், அதற்கேற்ற உணவும், காலமும்) ஆராயாது, (வேண்டியதோ ருணவை வேண்டியதொரு

காலத்து வயிற்றுக்) தியளவல்லாமல் (ஒருவன்) மிக வுண்ணுவா ஞெயின் (அவனிடத்துப்) பிணி அளவில்லாமல் வளரும்—(எ-று.)

(ஆ-ம்.) மீதூண் - (நித்திய முக்த சொரூப சாட்சாத்கார சமாதியினின்றும் பிராரத்த வசத்தால் வெளிப்பட்டவிடத்துச்) சமாதி விக்கினமாய விடய போகங்களை, விரும்பேல் - (என்றும்) நீ பிரியங்கொள்ளா திருப்பாயாக.

## (இ. பி.) வைராக்கிய தீபம்.

பெண்ணைவிட் டகலா வொருவிடன் றன்னைப் பிறர் வழக்கினிற்கொடு போகக், கண்ணைவிட் டகலா தவள்வரல் போலுங் கண்டுகொண் டேகியாங் கலைத்தவ், வண்ணமாயினு மாற்றிக் கிரத்தினின் முடித்தவ் வனிதைபான் மருதரன் மானப், பண்ணிய சமாதி விடுத்தயி ருருங்கம் பசிதணித் ததைபுறும் பரிசே.

(பொ-ள்.) அழகினுல் மிகுந்துள்ள ஒரு பெண்ணைக் கணப்போதாயினும் விட்டு நீங்காத ஒரு காமியை அவனுக்குக் கடன்கொடுக்க வேண்டிய பிறர் வந்து வழக்கினிடை அழைத்துக்கொண்டு செல்ல அவன் தனது கண்ணைவிட்டு நீங்காது அந்தப்பெண் வருதல்போலும் பார்த்துக்கொண்டு சென்று அவ்விடத்து அந்த வழக்கினை எப்படியாயினும் சீக்கிரத்தில் தீர்த்துக்கொண்டு அந்தப்பெண்ணிடத்தில் மீண்டும் வந்து கூடியிருத்தல்போல அறிஞரும் கணமாயினும் இடைவிடாது தாம் பண்ணிய ஞானசமாதியை விட்டு நீங்கிக் காடி கூழ் எதாயினும் சீக்கிரத்தில் வாங்கிப் புசித்துத் தமது பசியை மாற்றிக்கொண்டு மீண்டும் வந்து அந்த ஞான சமாதியைக் கூடுமுறைமை (இருக்கும்)—(எ-று.)

## 91. முனை முகத்து நில்லேல்.

(பா-ம்.) முனை முகத்து - யுத்த முகத்திலே, நில்லேல் - (சந்தர்ப்ப மறியாது வலியப்போய்) நீ நிற்கா திருப்பாயாக.

48-அதி. வலியறிதல். 3-செய்யுள்.

உடைத்தம் வலியறியா ரூக்கத்தி னூக்கி
யிடைக்கண் முரிந்தார் பலர்.

(போ-ரை.) (தலைவனுதலை) யுடைய தமது வலியினளவைத் தெரிந்து கொள்ளாதவராகி மனவெழுச்சியால் (தம்மின் வலியரோடு) போர் செய்யத் தொடங்கி (அவர் வருத்தலால் அது செய்து முடிக்கப் பெறுமல்) நடுவிலே கெட்டவர் (உலகத்துப்) பலராவர்—(எ-று.)

(ஆ-ம்.) முனை முகத்து - (நிரதாய சொரூப சாட்சாத்காரவடைவிற்கு விரோதஞ் செய்வதாகிய) நாம ரூப நாட்டத்தில், நில்லேல் - (என்றும்) நீ பிரம்வசியா திருப்பாயாக.

(இ. பி.) கைவல்லிய நவநீதம்.

மேவு மண்ணிலவ் வியத்தமே வியத்தமாய் விவகரிக்கிடவேண்டில், நாவி னுண்மண்ணைக் குடமென்ப தக்குடநசிப்பது நாவாலே, பாவு நாமரூ பங்களை மறந்துமண் பார்ப்பதே பரமார்த்தம், சீவ போதகற் பிதங்களை மறந்துசின் மயமாவாயே.

(பொ-ரை.) திரளையான மண்ணில், (குலால வியாபாரத்திற்கு முன்) வெளிப்படாதிருந்த கட சத்தியே (குலால வியாபாரத்திற்குப் பின்) கடமென்னும் நாமத்தை யடையும்:—(அதுபோலச்

சிருஷ்டிக்கு முன் † அவ்வியாகிருத நாமமுடையதாயிருந்த இந்த ஆகாச முதலிய ஜகத்தே பின் சிருஷ்டி யவசரத்தில் நாம ரூபங்களாக வெளிப்பட்டது), கடத்தை வியவகரிக்க வேண்டின், வாக்கிஞல் (மண்ணைத் தவிரக் கடமின்மையிஞன்) மண்ணைத்தானே கடமென்று வியவகரிப்பர். அக்கடம் நசித்ததென்னும் வியவகாரமும் வாக்கு மாத்திரத்தாலே உளதாம். (இப்படிக் காரியமான கடம் முதற் காரணமான மண்ணைத் தவிர வேறின்மையின், உண்டென்பதும் நசித்ததென்பதும் வாக்குமாத்திர மாதலால்) சத்தியின் விரிவாகுங் கடமென்னும் நாமமும், (‡ பிருதுபுத்நோதராகாரமான) உருவமும் ஆகிய இவற்றை (மித்தையென்று) உபேட்சித்து (கடம்) மண்ணென்று பார்ப்பதே பரமார்த்தமாம்.—(அதுபோல ஆகாச மென்பது முதலிய நாமமும், அவகாச மென்பது முதலிய உருவமும், ❋ அஸ்தி பாதிப் பிரிய ரூபமான பிரஹ்மத்தைத் தவிர வேறின்மையின் ஜகத்தென்பது வாக்குமாத்திரமாம், ஆகலின்), சீவத்துவிதமாகிய (நாம ரூப) கற்பனைகளை (மித்தையென்று) உபேட்சித்து நீ (சதாநந்த) சின்மயனுவாய்—(எ-று.)

## 92. மூர்க்கரோ டிணங்கேல்.

(பா ம்.) மூர்க்கரோடு - அறிவில்லாதவருடன், இணங்கேல் - (என்றும்) நீ நட்புச் செய்யா திருப்பாயாக.

82-அதி. தீநட்பு. 5-செய்யுள்.

செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை
யெய்தலி னெய்தாமை நன்று.

---

† அவ்வியாகிருதம் - வெளிப்படாமை.

‡ பிருது - ஸ்தூலம் : புத்நம் - வட்ட வளைவு : உதரம் - வயிறு: ஆகாரம் - வடிவு.

❋ அஸ்தி பாதிப் பிரிய ரூபம்—சச்சிதாநந்த வடிவம்.

(பொ-ரை.) செய்து வைத்தாலும் காவலாகாத கீழ்மக்களது நிழல்ப்பு (ஒருவனுக்கு) உண்டாதலைக் காட்டிலும், இல்லாதிருத்தல் நல்லது—(எ-று.)

(ஆ-ம்.) மூர்க்கரோடு - (¶ நிர்விஷய சொரூப நாட்டத்தால் † அவித்தை, அஸ்மிதை, இராகம், துவேஷம், அபிநிவேச மென்னும் பஞ்சக் கிலேசங்களும் ஒழிவதை ஒருசிறிது மறியாது) விஷயாட்டங் கொண்டோடும் மன முதலியவற்றுடன், இணங்கேல் - (என்றும்) நீ சேரா திருப்பாயாக.

(இ. பி.) விவேக சூடாமணி.

ஆதலால் மாம்ச பிண்ட மாகிய யாக்கை யிதுந்
நீதுறு புந்தி செய்த தேகாபி மான மிதுஞ்
சாதமா மகந்தை விட்டுச் சச்சிதா நந்த மாக [வாய்.
மேவரிய வான்மா நானென் றுணர்ந்துநீ சாந்தி சாய்

---

¶ நிர்விஷயம்=சப்தத்தின் சக்தி விருத்திக்கும், மனத்தின் தமோகுண ரஜோகுண விருத்திக்கும் விஷயமாகாமை.

† அவித்தை=விசாரித்துப் பார்க்க எது இல்லாமற் போகிறதோ அதுவாம்.

அஸ்மிதை=புத்தி ஆத்மாக்களின் ஒருமை யுணர்ச்சி.

இராகம்=அநுகூல பதார்த்தத்தின் ஞானத்தா லுண்டாகும் புத்தி விருத்தி.

துவேஷம்=பிரதிகூல பதார்த்தத்தின் ஞானத்தா லுண்டாகும் புத்தி விருத்தி.

அபிநிவேசம்=மரண பயத்தால் சரீரத்தை ரக்ஷித்தலி லுண்டாகும் ஆக்கிரகம்.

(பொ-ரை.) ஆகையினால். † சப்த தாதுக்களாலாகிய சரீரத்தின்மீதும். கெடுதியைப் பொருந்திய புத்தியைச் செய்கின்ற தேகத்தின் அபிமானமாகிய அகங்காரத்தின் மீதும், சனிக்கின்ற நானென்னும் அகந்தையை நீக்கிச் சச்சிதாநந்த இலக்கண முள்ளதாகச் சொல்லப்பட்ட ஆத்மா நானென்று அறிந்து நீ யெக்காலத்தும் உபசாந்தியை யடையக் கடவாய்—(எ-று.)

## 93. மெல்லியா டோள் சேர்.

(பா-ம்.) மெல்லியாள் - மென்மைத் தன்மை வாய்ந்த உன் மனையாளுடைய. தோள் - புஜங்களை. சேர் - நீ சேர்ந்திருப்பாயாக.

111-அதி. புணர்ச்சி மகிழ்தல். 3-செய்யுள்.

தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொ
றாமரைக் கண்ணா னுலகு.

(பொ-ரை.) (ஐம்புலன்களையும் அநுபவிப்பவர்க்கு) தாம் விரும்பிய மகளிரது மெல்லிய தோள்களிடத்துத் துயிலும்,துயில்போல் (அவற்றைத் துறந்த யோகிகளால் அடையப்படுவதாகிய) கமலக்கண்ணனது உலகம் வருந்தாம லடையக் கூடுவதோ ?—(எ-று.)

(ஆ-ம்.) மெல்லியாள் - (நிர்த்தோஷ சொரூபமாயுள்ள பிரம்ம சாட்சாத்காரத்திற்கு நேர் சாதனமாகிய) அருவ மனத்தின், தோள் - அகம் பிரமாஸ்மி விருத்தியோடு, சேர் - (நிரந்தரம்) நீ கூடியிருப்பாயாக.

(இ. பி.) ரிபுக்கீதை.

அனிசமகம் பிரமாஸ்மி மந்திரந்தா
னமலான்ம ஞானத்தை விளக்கு விக்கு

---

† சப்த தாதுக்கள்—தோல், இரத்தம், எலும்பு, இறைச்சி, சுக்கிலம், மேதை (நிணம்,) மச்சை (மூளை) என்பனவாம்.

மனிசமகம் பிரமாஸ்மி மந்தி ரந்தா
னமலான்ம லோகத்தின் சயத்தை நல்கு
மனிசமகம் பிரமாஸ்மி மந்தி ரந்தா
னதிசயமா மான்மசுகந் தனையே நல்கு
மனிசமகம் பிரமாஸ்மி மந்தி ரந்தா
னகலாத மோட்சசுக மளிக்கு மன்றே.

(பொ-ரை.) எப்பொழுதும் நான் பிரஹ்மமா யிருக்கின்றே னென்று தியானிக்கும் மந்திரமானது பரிசுத்தம் பொருந்திய ஆத்ம ஞானத்தை யுண்டுபண்ணும், எப்பொழுதும் நான் பிரஹ்மமா யிருக்கின்றேனென்று தியானிக்கும் மந்திரமானது பரிசுத்தமாகிய ஆத்ம பதத்தை யடைய வெற்றியைக் கொடுக்கும், எப்பொழுதும் நான் பிரஹ்மமா யிருக்கின்றே னென்று தியானிக்கும் மந்திரமானது அப்பியாச காலத்தில் அற்புதமாகத் தோன்றும் ஆன்மாநந்தத்தைத் தரும், எப்பொழுதும் நான் பிரஹ்மமா யிருக்கின்றேனென்று தியானிக்கும் மந்திரமானது அபரிச்சின்னமாகிய மோக்ஷாநந்தத்தைத் தரும்—(எ-று.)

## 94. மேன்மக்கள் சொற் கேள்.

(பா-ம்.) மேன்மக்கள் – உயர்ந்தோருடைய, சொல் - வார்த்தையை, கேள் - (என்றும்) நீ கேட்கக் கடவாயாக.

42-அதி. கேள்வி. 5-செய்யுள்.

இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
யொழுக்க முடையார்வாய்ச் சொல்.

(பொ-ரை.) (ஒருவர்க்கு ஆபத்திலே) நல்லொழுக்கமுடையவரது வாயிற் பிறக்கின்ற சொல், வழுக்குதலை யுடைய சேற்றுநிலத்திலே ஊன்றுகோல்போ லுதவும்—(எ-று.)

(அ-ம்.) மேன்மக்கள் - (துரிய சொரூபமாய் விளங்கும்) மகான்கள், சொல் - கூறும் மகாவாக்கிய இரகசியார்த்தங்களை, கேள் - (பராமுகமின்றி) நீ கேட்பாயாக.

(இ. பி.) ஞானவாசிட்டம்.

மிகமுயன்று வருந்தாமற் சமமாகின்ற வேண்டுகோளான் முயல்வால் விளையாடற் றன்னாற், பகர்மனமாஞ் சிறுமகவை நிறுத்தல் வேண்டும் பலபிறப்பிற் பரிசயங்க ளகலப் பண்ணி, மாகஞ்சுபவா தனையுதித்தான் முயற்சி பேறுமையுறினுஞ் சுபமடைவா யதுதி தல்ல, திகழ்மனம்போய்த் தற்பதத்தைத் தெளியுமட்டுந் தேசிகனூல் சொல்வழியிற் செல்லுவாயே.

(போ-ரை.) மிகவு முயற்சித்து வருத்தப்படாமல் சமத்துவமாகின்ற பிரார்த்தனையினாலும், தனது முயற்சியினாலும், (நயமான) விளையாட்டினாலும், சொல்லப்பட்ட மனமென்னும் சிறு குழந்தையை (அசுப வாசனையிற் செல்லாமற் றடுத்துச் சுபவாசனையில்) நிறுத்தவேண்டும், (முன்னெடுத்த) நாநாவிதமான சநநங்களில் (பழகிய) அசுத்த வாசனைகளை நீங்கச் செய்து, மகத்தான சுத்த வாசனை யுதயமாயின் முயற்சிக்குப் பிரயோஜனமாம், (சுப வாசனை யென்செய்யுமோ வென்னுஞ்) சந்தேகம் வரினும் சுபவாசனையே யடைவாய், அச்சுப வாசனையின் மிகுதி கொடிதல்ல, விளங்குகின்ற மனஞ் சென்று பிரஹ்ம ஸ்வரூபத்தைத் தெளிந்தடையும் பரியந்தம், ஆசாரியரும், வேதங்களும், († பிரமோபதேசத்தையும், மகாவாக்கியார்த்தத்தையும்) போதிக்கின்ற மார்க்கத்தில் (அனுபவமாய்) அனுஷ்டிக்கக் கடவாய்—(எ-று.)

† பிரமோபதேசம் - நினைவரிய வொருபிரம நீயே யென்று ள்ள நிலையைக் கூறுதல்.

## 95· மைவிழியார் மனை யகல்·

(பா-ம்.) மைவிழியார் - மை தீட்டிய கண்களையுடைய பரத்தையரின், மனை - வீட்டை, அகல் - (என்றும் சேராமல்) நீ நீங்குவாயாக.

92-அதி. வரைவின்மகளிர். 2-செய்யுள்.

பயன்றூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்
நயன்றூக்கி நள்ளா விடல்.

(பொ-ரை.) (ஒருவனுக்குள்ள) பொருளை அளந்தறிந்து, (அது கிடைக்குமளவும் தமது) குணமுடைமை சொல்லும், குணமில்லாத மகளிரது நடக்கை வழியை ஆராய்ந்தறிந்து, (அவரைப்) பொருந்தாமல் விடக் கடவர்—(எ-று.)

(ஆ-ம்.) மைவிழியார் மனை - (துரியாதீத சொப்பிரகாச நாட்டவடைவிற்கு மாறாய) ஆவரண விட்சேப சத்திகளை யுடைய அஞ்ஞானத்தின் வசமாதலி னின்றும், அகல் - நீ நீங்குவாயாக.

### (இ. பி.) கைவல்லிய நவநீதம்.

காரண சரீரந் தன்னைக் களைவதெவ் வாறென் றேற்கில்
ஆரணம் பொய்சொல் லாதே யதன்பொரு ளகத்தி லுய்த்துப்
பூரண மாகு மென்மேற் புவனங்க டோற்ற மென்று [துத்
தாரணை வந்த தாகிற் றரித்திடு மவித்தை யெங்கே.

(பொ-ரை.) காரண தேகமான அவித்தையைப் போக்குவது எத்தன்மையான உபாயத்தாலாம் என்று ஆட்சேபிக்கில், (ஏனைய நூல்போலச்) சுருதி அசத்தியஞ் சொல்லமாட்டாதே, ஆதலின், ஈண்டு நாநாவரணவை அற்பமுமில்லை, ஈதனைத்தும் † பிரஹ்ம மல்

† பிரஹ்மம்=ஸஜாதீய விஜாதீய சுவகதபேத ரஹிதமாய சேதனம்.

லவா என்பன முதலியனவாகக் கூறும் அச்சுருதியின் அர்த்தத்தை மனத்தின்கண்ணே திடமாகத் தரித்துப் பரிபூரண சொரூபமான என்கண் பிரபஞ்சங்கள் தோற்றன்மாத்திரமா மென்று ❋நிச்சயம் வந்தாயின், அவித்தை எங்கேயிருக்கும்! (ஒரிடத்தும் இராமல் நாசமாய் விடும்)—(எ-று.)

## 96. மொழிவ தறமொழி.

(ப-ம்.) மொழிவது - சொல்வதை. அற - சந்தேகம் நீங்க, மொழி - நீ சொல்வாயாக.

65-அதி. சொல்வன்மை. 10-செய்யுள்.

இணரூழ்த்து நாறா மலரனையர் கற்ற
துணர விரித்துரையா தார்.

(பொ-ரை.) கற்றுவைத்த நூல்களை (பிறர்) அறியும் விதமாக விரித்து உரைக்கமாட்டாதவர், கொத்தினிடத்தே மலர்ந்திருந்தும், மணக்காத பூப்போல்வர்—(எ-று.)

(ஆ-ம்.) மொழிவது - (பரமார்த்த சொரூப தரிசனத்திற்குச் சாட்சாத் சாதனமான †பிரஹ்மைவாக மென்றற்றொடக்கத்து) மகாவாக்கியங்களை, அற - செவ்வையாக, மொழி - நீ (ஜபியாது) ஜபிப்பாயாக.

(இ. பி.) பட்டினத்தார்.

தவியா திருநெஞ்ச மேதில்லை மேவிய சங்கரனைப்
புவியார்ந் திருக்கின்ற ஞானா கரனைப் புராந்தகனை

---

❋ நிச்சயம்=சம்சயத்தின் வேறான ஞானம்.
† பிரஹ்மைவாகம்=பிரஹ்மமே நான்.

அவியா விளக்கைப்பொன் னம்பலத் தாடியை யைந்தெழுத்
செபியாம லேசெபித் தாற்பிற வாமுத்தி சித்திக்குமே.[ தால்

(பொ-ரை.) மனமே! இளைக்காமலிரு, தில்லையைத் தனக்கு வாசஸ்தானமாகப் பொருந்திய சங்கரனை, உலகமெங்கும் நிறைந்திருக்கின்ற ஞானத்திற் கிருப்பிடமா யிருப்பவனை, திரிபுராந்தகனை, அவியாத தீபத்தை, பொற்சபையின்கண் நடிப்பவனை, (ஜீவப்பிரஹ்ம ஐக்கியத்தைக் கூறும்) சிவாயநம வென்னும் ஸ்ரீ பஞ்சாட்சரத்தினால் ‡ ஜபிக்காமல் நீ ஜபித்தால் பிறவாமைக் கேதுவாகிய முத்தி சித்திக்கும்—(எ-று.)

## 97. மோகத்தை முனி.

(பா-ம்.) மோகத்தை - மயக்கத்தை, முனி - (கல்வி யறிவைக் கொண்டு) நீக்கி விடுவாயாக.

36-அதி. மெய்யுணர்தல். 10-செய்யுள்.

காமம் வெகுளி மயக்க மிவைமூன்றன்
நாமங் கெடக்கெடு நோய்.

(பொ-ரை.) (ஞான யோகங்களின் முதிர்ச்சி யுடையவர்க்கு) விருப்பு, வெறுப்பு, அஞ்ஞானம் எனப்படுகிற இக்குற்றங்கள் மூன்றனது பெயரும் கூடக் கெடுதலால், (அவற்றின் காரியங்களாகிய) வினைப்பயன்கள் உண்டாதலில்லை—(எ-று.)

(ஆ-ம்.) மோகத்தை - (பரப்பிரஹ்மானந்தாகார வடைவிற்குத் தடையாய அஞ்ஞானிகளது கூட்டரவா லுண்டாகும்) ஜகத் சத்தியம் தேகமே யானென்னும் விபரீத புத்தியை, முனி - (சிரவண மனன நிதித்தியாசனத் துவாரா) நீ கெடுப்பாயாக.

---

‡ ஜபியாமல் ஜபித்தல்=வாக்கிந்திரியத்தால் ஜபியாது மனோவிருத்தி மாத்திரமாய் (பாநினைவாய்) தியானித்தல்.

### (இ. பி.) கைவல்லிய நவநீதம்.

*அக்கினி கட்டுப் பட்டா லற்பமுஞ் சுடமாட் டாது*
*மக்கின ஞானந் தீயால் வந்தாந் நமும்பவே வாது*
*சிக்கெனப் பற்றிக் கேட்டல் சிந்தித்த றெளிக லாலே*
*யக்கின மடந்சந் தேகம் விபரிதம் போக்கு வாயே.*

(பொ-ரை.) அக்கினியானது (மணி மந்திர ஔஷதங்களி னாலே) அடக்கப்படுமாயின், சிறிதேனும் (காஷ்ட முதலியவற் றைத்) தகிக்க யோக்கியமாகாது. (அதுபோல, அஞ்ஞான, சந் தேக, விபரீதங்களாலே, அமிழ்ந்துள்ள தத்துவ ஞானமாகிய அக் கினியினால் (அநாதிகாலந் தொடுத்து) வந்துள்ள (கர்த்திருத்வாதி) பந்தமுந் வேகாது, (ஆகலின்.) நெடுங்காலம் நிரந்தர நேசத்தோடு அப்பியசித்துச் செய்யுஞ் சிரவண, மநந, நிதித்தியாசனங்களாலே (ஞானபலமான மோட்சப்) பிரதிபந்தங்களான அஞ்ஞான, சந் தேக, விபரீத மென்பவற்றை ஒழிப்பாய்—(எ-று.)

## 98. வல்லமைப் பேசேல்.

(பா-ம்.) வல்லமை - (உனக்குள்ள) சாமர்த்தியத்தை, பேசேல் - (என்றும் புகழ்ந்து) நீ பேசா திருப்பாயாக.

### 13-அதி. அடக்கமுடைமை. 2-செய்யுள்.

*காக்க பொருளா வடக்கத்தை யாக்க*
*மதனினூஉங் கில்லை யுயிர்க்கு.*

(பொ-ரை.) அடக்கத்தை (உறுதிப்) பொருளாகக் காக்கக் கடவன், மக்களுயிர்க்கு அதனின் மேற்பட்ட செல்வமானது இல்லை, ஆதலால்,—(எ-று.)

(ஆ-ட்.) வல்லமை - (பிரத்தியக்ஷ சொரூப சித்திக்கு மாறுசெய்யும் அகங்காரத்தின் வசப்பட்டு) † சோக மோகங்களை யுண்டுபண்ணுஞ்) சாமர்த்திய மொழிகளை, பேசேல் - (யாவரிடத்தும்) பேசா திருப்பாயாக.

## (இ. பி.) தாயுமானவர்.

கல்லாத பேர்களே நல்லவர்க ணல்லவர்கள் கற்றுமறிவில்லாதவென், கர்மத்தை யென்சொல்கேன் மதியையென் சொல்லுகேன் கைவல்ய ஞானநீதி ; நல்லோ ருரைக்கிலோ கர்மமுக் கியமென்று நாட்டுவேன் கர்மமொருவ, ருட்டிடிலோ பழைய ஞானமுக் கியமென்று நவிலுவேன் வடமொழியிலே ; வல்லா னொருத்தன்வர வுந்த்ராவிடத்திலே வந்ததா விவகரிப்பேன், வல்லதமி ழறிஞர்வரி னங்ஙனே வடமொழியின் வசனங்கள் சிறிதுபுகல்வேன் ; வெல்லாம லெவரையு மருட்டிவிட வகைவந்த வித்தையென் முத்திதருமோ, வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற வித்தகச் சித்தர்கணமே.

(பொ-ரை.) கல்வியைக் கல்லாதவர்களே நல்லவர்கள் நல்லவர்கள். கல்வி கற்றும் ஞானமில்லாத என் கன்ம பலத்தை என்னவென்று சொல்லுவேன், மந்த புத்தியை யென்னவென்று சொல்லுவேன், கைவல்ய பதவியைக் கொடுக்கின்ற ஞான நீதியை

---

† சோகம் - பிரியமான வஸ்து பிரிந்த காலத்தில் அது மீண்டுங் கிடைத்தற்குரிய தாகாமையை யறிந்து வருந்துதல். மோகம் - தேகாத்ம புத்தியால் இனி வருவது பற்றிச் சிந்தித்தல்.

நல்லோர்கள் சொன்னால் கர்மமே முதன்மையானதென்று கல்வி வலியால் நிலை நிறுத்துவேன், ஒருவன் கர்மத்தை நிலை நிறுத்தினால் முன் சொல்லிய ஞானமே முதன்மையானதென்று சாதித்துரைப்பேன், வடமொழியில் வல்லவனாகிய ஒருவன் வரினும். தமிழ்ப் பாஷையில் கைவந்தவன்போல வியவகரித்துப் பேசுவேன், தமிழ் வல்லவராகிய அறிஞர் வந்தால் தமிழ் வசனங்கள் சொன்னது போலவே வடமொழியின் வாக்கியங்கள் சிலவற்றை யெடுத்துப் பேசுவேன், நியாயமாய் வெல்லாமல் யாவரையும் மருளும்படி செய்ய வகையேற்பட்டதற்குக் காரணமான கல்வியறிவானது என்ன பயன் தரும், முத்தியைக் கொடுக்குமோ! வேதாந்த சித்தாந்தத்தினது சமரச மோனமாகிய சிறந்த நிலையை யடைந்ததனால் உண்டாகிய ஞானத்தை யுடைய சித்தர் கூட்டமே—(எ-று.)

## 99. வாதுமுற் கூறேல்.

(பா-ம்.) வாது - தருக்க வார்த்தைகளை, முன் - (பெரியோர்) முன்னே, பேசேல் - (என்றும்) நீ பேசா திருப்பாயாக.

72-அதி. அவையறிதல். 5-செய்யுள்.

நன்றென் றவற்றுள்ளு நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு.

(பொ-ரை.) (தம்மின்) மிக்காரது சபையினிடத்து (அவர்க்கு) முற்பட்டு (ஒன்றனைச்) சொல்லாத அடக்கம் (ஒருவனுக்கு) இது நல்லதென்று சிறப்பித்துச் சொல்லப்பட்ட குணங்கள் எல்லாவற்றுள்ளும் சிறந்ததே—(எ-று.)

(ஆ-ம்.) வாது - (புராண சொரூப சாட்சாத்காரம் நழுவுதற்கேதுவாய) தருக்கங்களை, முன் - (சிவபோதத்தால்) முற்பட்டுச் சென்று, கூறேல் - (ஒருவரிடத்தும்) நீ பேசா திருப்பாயாக.

எனவே, ஜீவப்பிரஹ்ம ஐக்கிய ஞானம் சாதகர்களுக்கு ஒ யும்படி முற்பட்டு வாதம் புரிவாரோடு அது ஸ்திரமாகுமாறு பிற் பட்டு வாதம் புரியலா மென்பது பெறப்பட்டது.

(இ. பி.) மெய்ஞ்ஞான வெண்பா.

மனதப்பற் றிருக்கப் பரமசுக மென்று
மனதப்பற் றிருக்கவறி யாமல் - விதுப்புற்றுக்
கற்றார் பலநூலுங் கற்றவர்பாற் றர்க்கமிட்டு
நிற்பா ரிதென்ன நிலை.

(பொ-ரை.) அந்தக்கரணம் வியாபாரமற் றிருத்தலால் பரமா நந்தம் உண்டாகுமென்று பெரியோர் கூறினும், அவர் கூறிய வாறு அப்பரமாநந்தத்தை அடைந்திருக்க வகையறியாது கலங்கி. உலகத்தார் பல சாஸ்திரங்களையுங் கற்றார்கள்; அதனோடு அமை யாது கற்றவரிடத்தில் தருக்கமிட்டும் நிற்கின்றார்கள், இஃதென்ன அறியாமையோடு கூடிய நிலை—(எ-று.)

## 100· வித்தை விரும்பு·

(பா-ம்.) வித்தை - கல்வியைக் கற்பதற்கு, விரும்பு - (என்றும்) நீ ஆசைப்படுவாயாக.

40-அதி. கல்வி. 8-செய்யுள்.

ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து.

(பொ-ரை.) ஒருவனுக்குத் தான் ஒரு பிறப்பினிடத்துக் கற்ற வித்தையானது, எழு பிறப்புகளிலும் போய் உதவுதலை உடைய தாகும்—(எ-று.)

(ஆ-ம்.) வித்தை - (புராதன சொரூபமாக விளங்குதற்கேதுவாய) பிரஹ்ம ஞானத்தை, விரும்பு - (நல்லாசிரியர் வாயிலாகப் பெற) நீ பிரியங் கொள்வாயாக.

## (இ. பி.) ஞானவாசிட்டம்.

அவனுரைப்ப வந்துயிர்க ளுளநா ளெல்லா மிருப்பனிங் கொருசெயலு மாசையில்லை, யிவணிருந்து சுழுத்தியுறு செய்கையாலே யிடர்மனத்தைக் கடந்துசெய லியாவுஞ்செய்கேன், கவருறுமென் செயலொன்று மில்லைவீர கலைநிறையும் போதத்தையுங் கருமத்தாலே, விவேகமதா யாராய்ந்து மேன்மையான பெருங்குருவைக் கொண்டுணர்வோர் மேதை மிக்கோர்.

(பொ-ரை.) அந்தப் பிரமா அனுக்கிரகஞ் செய்ய (அப்படியே பாரத வருடத்தில்) வந்து ஆத்மாக்க ளிருக்கின்ற காலங்களிலெல்லாம் இருப்பேன், இவ்விடத்தொரு கிரியையிலும் விருப்பமில்லை. இவ்விடத்தி லிருந்து * (நனவிற்) சுழுத்தியை யடைந்த ஒழுக்கத்தினால் துன்பந் தரும் மனதைத் தாண்டித் தொழில்க ளனைத்தையுஞ் செய்வேன், (அபிமானத்தை) கிரகிக்கின்ற எனது செய்கை யாதொன்று மில்லை, (பாச நாசஞ் செய்வதில்) அதி சூரனான இராமா! ஞானபூர்த்தியையும், அஞ்ஞானத்தையும், ஆசார வியவகாரங்களால், பகுத்தறிவோடு விசாரித்து உயர்வான சற்குருவைப் பெற்று (ஆத்மாவை) யறிபவர்கள் அறிவில் மிகுந்த சீடர்களாவார்—(எ-று.)

---

* நனவிற் சுழுத்தி=உறக்கத்தின் வசமும் விழிப்பின் வசமுமின்றித் தானாந்த வடிவமா யந்தக்கரணவிருத்தி யிருக்கும் ஸ்திதி.

## 101. வீடு பெறநில்.

(பா-ம்.) வீடு - மோக்ஷத்தை, பெற - அடையும்படி, நில் - (ஞானவழியிலே) நீ நிற்பாயாக.

35-அதி. துறவு. 10-செய்யுள்.

*பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்*
*பற்றுக பற்று விடற்கு.*

(பொ-ரை.) (எல்லாப் பொருள்களையும் பற்றிநின்றே) பற்றில்லாத கடவுளாலே சொல்லப்பட்ட முத்தி வழியை (இதுவே நல்வழி யென்று) மனத்திற் கொள்ளக்கடவர், (கொண்டு,) அதனிடத்து உபாயத்தை மனத்தினாலே செய்யக் கடவர். (விடாது வந்த) பற்று விடுதற்கு—(எ-று.)

(ஆ-ம்.) வீடு - (பூரணவடிவமாக நிற்றற் கேதுவாயுள்ள) நீரத் துறத்தலை, பெற - (பரம்பொருளைத் தானாகப் பாவித்தலாகிய நிஷ்டையினை) அடைய. நில் - (விக்ஷேபப்படாது) நீ நிற்பாயாக.

(இ. பி.) சிவஞானதீபம்.

*உதைத்தாடு கயிறகன்ற ஊசல்போலு முலவாது திரி யொழிந்த கறங்குபோலு, மிகைத்தாடு விசையறுபம் பரமே போலும் விளங்கொளிசேர் தாழ்ந்தமணி நாவேபோலுஞ், செகத்தாய சித்திரத்தி னிலைமைபோலுஞ் சிவபோகத் தடங்கியுயிர் செயலொன்றின்றி, யகத்தாய நம்போதப் பற்று நீங்கி யசைவறநிற் பதுபரமா நந்தமாமே.*

(பொ-ரை.) செலுத்தி ஆடுகின்ற கயிறற்ற ஊசலைப் போலவும், ஆடாது அசைவொழிந்த காற்றாடியைப் போலவும், வீசி

யாடும் வேகம் ஒழிந்த பம்பரத்தைப் போலவும், விளங்குகின்ற ஒலி பொருந்திய தொங்குகின்ற மணியினது நாவினைப்போலவும், உலகுருவத்தை வரைந்த சித்திரப்படத்தின் தன்மையைப் போலவும், சிவாநந்தத்தில் ஒடுங்கிச் சீவன் ஒரு செயலுமில்லாமல் மனதிலிருப்பதாகிய நமது சிவபோத அபிமானம் ஒழிந்து அசைவற்றிருப்பதுவே பரமாநந்தம் உண்டாதற்கு ஏதுவாம்—(எ-று.)

## 102 உத்தமனா யிரு.

(பா-ம்.) உத்தமனாய் - (பல நற்குணங்களிலும்) சிறந்தவனாய், இரு - (என்றும்) நீ இருப்பாயாக.

12-அதி. நடுவு நிலைமை. 5-செய்யுள்.

கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி.

(பொ-ரை.) (தீவினையினாலே) கேடும் (நல்வினையினாலே) பெருக்கமும் (யாவர்க்கும்) இல்லாதவையல்ல. (அவ்வழியை அறிந்து,) மனதிலே (அவை காரணமாகச்) சாய்தலில்லாமையே (அறிவால்) நிறைந்தோர்க்கு அழகாம்—(எ-று.)

(ஆ-ம்.) உத்தமனாய் - (மகத் வடிவமாக விளங்குமாறு தேகேந்திரியாதிகட் கப்பாற்பட்டு) ஆநந்த சொரூபனாக, இரு - (என்றும்) நீ இருப்பாயாக.

(இ. பி.) போதரத்நாகரம்.

சாற்றிய தன்மை யெல்லாங் கூடிய சங்கா தந்நா
னேற்றுயி ராமோ வென்னி னிதமெனச் சங்கா தத்தை
வேற்றுமை யாங்க டம்போற் கண்டுவே றாகி நின்று [ய்.
போற்றலா லுயிரே வென்றே பொருந்திடு போத மிக்கோ

(பொ-ரை.) பேறறிவுடையவனே! நீ மேற்கூறிய பருத்தல் இளைத்தல் முதலிய தர்மங்கள் எல்லாங் கூடிய உடம்பானது உயர்வாகிய ஆத்மாவாமோ என்றால், இது வென்று உடம்பினை வேற்றுமையாயுள்ள கடத்தினைப்போலப் பார்த்து அதற்கு வேறு பட்டு நின்று அதனைக் காப்பாற்றுதலால், அதற்கு ஆத்மா வேறு பட்டதாமென்று அமைதியுற்று இருந்திடுதி—(எ-று.)

## 103. ஊருடன் கூடி வாழ்.

(ப-ம்.) ஊருடன் - (உலகத்தின்கண்) அறிவின் மிக்காரோடு, கூடி - (எல்லாவற்றிலும் மனமொத்துச்) சேர்ந்து. வாழ் - நீ வாழ்வாயாக.

46-அதி. சிற்றினஞ் சேராமை. 8-செய்யுள்.

மனநல நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்
கினநல மேமாப் புடைத்து.

(பொ-ரை.) மன நன்மையை (முன்னை) நல்வினையினுலே (தாமே) உடையவராயிருந்தாலும், நிறைந்தோர்க்கு இன நன்மையானது (அதற்கு) வலிமையாதலை உடையது —(எ-று.)

(ஆ-ம்.) ஊருடன் - (முக்தசொரூப சாட்சாத்காரம் ஸ்திரப்படுமாறு) பிரஹ்மாப்பியாசிகளோடும், பிரஹ்மானுபவிகளோடும், கூடி - சேர்ந்து. வாழ் - நீ (ஆத்மாநாத்ம விசாரம்) செய்திருப்பாயாக.

(இ. பி.) திருமந்திரம்.

அறிவா ரமரர் தலைவனை நாடிச்
செறிவார் பெறுவர் சிவதத் துவத்தை
நெறிதான் மிகமிக நின்றருள் செய்யும்
பெரியா ருடன்கூடல் பேரின்ப மாமே.

(பொ-ரை.) அறிவுடையவர் தேவதேவனாகிய சிவபெருமானை உள்ளத்திற் றேடி அடைவார், அதனால் சிவமாயிருக்குந் தன்மையைப் பெறுவர். (ஆகையால்,) நன்மார்க்கத்திற் செல்லுவது மிகுதியும் நிலைபெறக் கிருபை புரிவது பெரியவருடன் கூடியிருத்தல், பரமானந்தத்திற்குக் காரணமாம்—(எ-று.)

## 104. வெட்டெனப் பேசேல்.

(பா-ம்.) வெட்டென - கத்தி வெட்டைப்போல, பேசேல் - (யாவரோடும் கடினமாக) நீ பேசா திருப்பாயாக.

57-அதி. வெருவந்த செய்யாமை. 6-செய்யுள்.

கடுஞ்சொல்லன் கண்ணில னாயி னெடுஞ்செல்வ
நீடின்றி யாங்கே கெடும்.

(பொ-ரை.) (ஒருவன்) கடிய சொல்லை உடையவனும், கண்ணோட்டமில்லாதவனும் ஆனால், (அவனது) பெரியசெல்வமானது நீடித்தலில்லாமல் அப்பொழுதே அழியும்—(எ-று.)

(ஆ-ம்.) வெட்டென - (வஸ்து நாட்டத்தில் இடையறாது சித்த விருத்தியை நிறுத்துதற் கேதுவாகப் ‡ பிரபல சுருதி கூறுவனவற்றை வெறுத்து அவற்றின் சம்ஸ்காரம் ஒழிதற் கேதுவாய சொற்களைக்) கத்தி வெட்டைப்போல், பேசேல் - (என்றும்) நீ பேசா திருப்பாயாக.

(இ. பி.) ஞானசுகாதீதமணமாலை.

உன்றனையே தேடாதே யுன்மயொரு மந்திரத்தைப்
பன்றியே சாத்திரங்கள் பாடாதே - யென்றாலு

‡ பிரபல சுருதி—தனது யதார்த்த சொரூபத்தை யறிவிக்கும் வேதம் (உபநிஷத்து).

மப்பாரு முப்புவமை யானசுகா தீதத்தே
யெப்போதுஞ் சும்மா விரு.

(பொ-ரை.) எக்காலும் ஒன்றையும் நினையாதே, எதனையுந் தேடிச் செல்லாதே, அழுந்தி யாதொரு யந்திரத்தையுஞ் சிந்தியாதே, அற்ப சுருதிகளாகிய சாஸ்திரங்களைப் படியாதே, அப்போதே கூடிய உப்புப்போலுள்ள ‡ சுகாதீதத்திலே எந்தக் காலத்திலும் அமைந்து சும்மாயிருக்கக் கடவாய்—(எ-று.)

## 105. வேண்டி வினை செயேல்.

(பா-ம்.) வேண்டி - (ஒரு பிரயோசனத்தை) இச்சித்து, வினை - தீங்கு தரும் காரியங்களை, செயேல் - (என்றும்) நீ செய்யா திருப்பாயாக.

32-அதி. இன்னா செய்யாமை. 1-செய்யுள்.

சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

(பொ-ரை.) யோகமாகிய சிறப்பினாலே தரப்படுவனவாகிய அணிமா முதலாகிய செல்வங்களைப் பெறலாமாயினும், அயலார்க்குத் துன்பந் தருவனவற்றைச் செய்யாமை (ஆகம வழியினாலே) குற்றமற்றோர் (யாவர்க்கும்) துணிவாம்—(எ-று.)

(ஆ-பி.) வேண்டி - (விபுத்த சொரூப சாட்சாத்காரத்தை யடைதற்கு விக்கினமாயவற்றை) விரும்பி, வினை - தீய கர்மங்களை, செயேல் - (என்றும்) நீ செய்யா திருப்பாயாக.

---

‡ சுகாதீதம்—சர்வானந்தங்களுக்கும் மேலாயிருப்பது.

(இ. பி.) ஒழிவிலொடுக்கம்.

நெருப்பில் விறகுதியா னெய்யிற்பா றோன்றா
வருக்க னிருளையடர்த் தாற்போன் - மருட்கெடுத்த
ஞானத்தின் பேர்கிரியை நாசமெனின் ஞானிகளு
மூனத் தொழிலுழைப் பாரோ.

(பொ-ரை.) நெருப்பின்கண் விறகு தோன்றாததுபோலும், நெய்யில் பால் தோன்றாததுபோலும், ஆதித்தன் பூதவிருளை யழித்தெழுந்தாற்போல் மும்மலமாகிய விருளை யழித்தெழுந்த ஞானம் அவற்றினது காரியமாகிய கிரியையுந் தோன்றாதழிக்கு மாகலின். இந்த ஞானத்தின் பேர் கிரியா நாசமென்றும் வேதாகமங்கள் கூறுமெனின், இந்த ஞானத்தைப் பெற்று இதுவே வடிவாயிருந்துள்ள மெய்ஞ்ஞானிகளுங் குற்றம் பொருந்திய தொழிலைச் செய்வாரோ ! செய்யார்—(எ-று.)

## 106. வைகறைத் துயிலெழு.

(பா-ம்.) வைகறை - விடியற்காலத்தில், துயில் - நித்திரையினின்றும், எழு - நீ எழுந்திருப்பாயாக.

6-அதி. வாழ்க்கைத்துணைநலம். 5-செய்யுள்.

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை.

(பொ-ரை.) (பிற) தெய்வத்தை வணங்காளாகி (தனது தெய்வமாகிய) கணவனை வணங்கா நின்று நித்திரைவிட் டெழுந்திருப்பவள், பெய்யென்று சொல்ல மழையானது பொழியும்—(எ-று.)

(ஆ-ம்.) வைகறை - (அதோமுக சொரூப சாட்சாத்கார மடையுமாறு) கேவலாவஸ்தையினந்தமாகிய மத்தியகத வியாபக காட்டத்தில் (சித்தத்தை நிறுத்திப் பழகுவதால்.) துயில் - நாம ரூப வடிவ ஜகத்தாகார பரிணாமத்தினின்றும். எழு - (சொரூபாகாரமாய்த் தெளிந்து) நீ எழுந்திருப்பாயாக.

(இ. பி.) பாடுதுறை.

அஞ்ஞான மூடி யகல்கின்ற வாரிருளாய்
பொய்ஞ்ஞால மென்னும் புரையிற் றுயிலாதே
பைஞ்ஞாக மரையானற் பார்ப்பதியோர் பாகத்தா
னெஞ்ஞான முங்கடந்த வெந்தை வலஞ்சுழியான்
செஞ்ஞாயி றென்னத் திகழும்பொற் சேவடிக
ளஞ்ஞான மாய வெழுந்துகா ணாயிழையீர்
மெய்ஞ்ஞான யோகமதை வேதித்த மெய்யருளை
பஞ்ஞா வுளமுருகிப் பாடேலோ ரெம்பாவாய்.

(பொ-ரை.) அஞ்ஞானத்தால் மூடப்பட்டு விரிந்திருக்கின்ற பேரிருள் பொருந்திய † மித்தையா வடிவாகிய வுலகமென்னும் வீட்டின்கண் உறக்கஞ் செய்யாதே, படத்தையுடைய பாம்பினை அரையில் தரித்தவனும், அழகிய பார்வதியை ஒப்பற்ற இடப்பாகத்தில் வைத்திருப்பவனும், எந்த ஞானத்திற்கும் அப்பாற்பட்ட எமது தந்தையும், திருவலஞ்சுழி யென்னுந் திவ்ய க்ஷேத்திரத்தில் எழுந்தருளி யிருப்பவனுமாகிய சிவனது சிவந்த சூரியனைப்போல விளங்கும் அழகிய திருவடிகள், எனது அஞ்ஞானமானது ஒழிய

† மித்தையா வடிவம்=(அதிஷ்டானப் பிரஹ்மத்தில்) முன்னும் பின்னும் இல்லாது ஒருகாலத்திற் றோன்றி அவ்வதிஷ்டான ஞானத்தால் பாதிக்கப்படுவது.

எழுந்தருளப் பெற்றன. ஆராய்ந்து அணிந்த ஆபரணத்தையுடைய பெண்களே ! எமது நோன்புக்கு உதவியாய் நின்று நீங்கள், எதார்த்த ஞானவடிவமாக நம்மை உலகாகாரத்தினின்றும் வேறுபடுத்திய மெய்யருளையே உன்னி யுன்னிப் பஞ்சுபோல் நொய்மையடைந்து மனமுருகிப் பாடக் கடவீர்—(எ-று.)

## 107· ஒன்னாரைச் சேரேல்·

(பா-ம்.) ஒன்னாரை - பகைவரோடு, சேரேல் - (எக்காலத்திலும்) நீ சேரா திருப்பாயாக.

80-அதி. நட்பாராய்தல். 10-செய்யுள்.

மருவுக மாசற்றார் கேண்மையொன் றீத்து
மொருவுக வொப்பிலார் நட்பு.

(பொ-ரை.) (உலகோடொத்துக்) குற்றமற்றவரது நட்பையே பழகக் கடவன், (உலகத்தோடு) ஒத்தலில்லாதவரது நட்பை (ஆராயாது கொண்டால், அவர்க்கு வேண்டிய) ஒன்றைக் கொடுத்தாயினும் விடக்கடவன—(எ-று.)

(ஆ-ம்.) ஒன்னாரை - (ஸ்ரீ சற்குரு சொரூப தரிசனஞ் செய்தற்குத் தடை செய்யும்) இந்திரியப் பகைவரோடு, சேரேல் - (என்றும்) நீ சேரா திருப்பாயாக.

### (இ. பி.) ஞானவாசிட்டம்.

எழுந்தெழுந்து சீறுகின்ற விந்திரியப் பாம்புகளை யிதயந் தன்னி, லழுந்துவிவே கத்தடியால் வச்சிரங்கொண் டிருந்தின்வெற் படர்வ தென்ன, விழுந்திடமோ துமவேண்டுஞ் சாந்தியிறுஞ் சமமேவி யிடர்தீர் நெஞ்ச, முழுந்துசுக வடிவாய்த்தற் பதநிலையைப் பெறுமிதுவே முத்தி யென்ன.

(பொ-ரை.) எழும்பி யெழும்பிச் சீறுகின்ற இந்திரிய மென்னுஞ் சர்ப்பங்களை மனதினிடத்தில் உறுதியான விவேகமென்னுந் தண்டினால் தேவேந்திரன் வச்சிராயுதத்தைக் கொண்டு மலைகளைப் புடைப்பதுபோலக் கெடும்படி அடிக்க வேண்டும். * உபசாந்தத்தினாற் † சமபாவத்தை யடைந்து துன்பம் நீங்கிய மனமானது முழுதுஞ் சுகாகாரமான ஆத்ம ஸ்வரூப ஸ்திதியைப் பெறும்: (இதுவே மோட்சமாம்.)—(எ-று.)

## 108. ஓரஞ் சொல்லேல்.

(பா-ம்.) ஓரம் - பக்ஷபாத வார்த்தைகளை. சொல்லேல் - (யாதொரு வழக்கிலும்) நீ சொல்லா திருப்பாயாக.

12-அதி. நடுவு நிலைமை. 8-செய்யுள்.

சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க் கணி.

(பொ-ரை.) (முன்னே தன்னைச்) சமனாகச் செய்து (பின்னே தன்னிடத்து வைக்கப்பட்ட பாரத்தை) அளவு செய்வதாகிய துலாம்போல் (இலக்கணங்களாலே) நிறைந்து ஒரு பக்கத்திலே சாயாமையானது (அறிவால்) நிறைந்தோர்க்கு அழகாம்—(எ-று.)

---

* உபசாந்தம்=மத்தியகத ஸ்திதி, அஃதாவது, பிரதம சங்கற்பம் நீங்கி, உத்தர சங்கற்பம் எழுதற்கு முன்னுள்ள ஸ்திதி. (சித்தம் இராசதகுண தாமதகுண விருத்தியில்லாதுள்ள நிலையாம்.)

† சமபாவம்=சாக்ஷித்தன்மை. (சித்தம் ஆலாங்கட்டியின் ஜலம் போல எங்கும் சமமாயுள்ள ஆத்மாவையே நோக்கி நிற்றலாம்.)

(ஆ-ம்.) ஓரம் - (சம்பூர்ண சமாப்தப் பிரஹ்மத்தில் மண்ணில் கடம்போல ஏகதேசமாய்க் கற்பனையாயுள்ள) உலகாகாரப்பட்டு, சொல்லேல் - (யாதொன்றையும்) நீ சொல்லா திருப்பாயாக.

(இ. பி.) சிவஞான வள்ளலார்.

உள்ளமெனு மாநந்த வோங்கல் மிசையேறி
வெள்ளவெளிக் குள்ளே விளையாடும் - பிள்ளை
புலைமெனுஞ் சேரிக் கொருகாலும் வாரார்
கலகம் விளையுமெனக் கண்டு.

(பொ-ரை.) மல விட்சேபாதி தோடங்களி னின்றும் நீங்கிய சாந்த மனமென்னும் ஆநந்த கிரியின்மேற் சென்றேறிப் பரிபூரண மாய சிதாகாயத்தில் விளையாடல் செய்கின்ற ஞானமாப்பிள்ளை யானவர்கள், கற்பனையாயுள்ள நாம ரூப வடிவ சகமென்னும் புலைச்சேரிக்கு, ஒருபோதும் பகிர்முகப்பட்டு வரமாட்டார்கள். அஃதேதெனெனின், ‡ பிரஹ்மசாட்சாத்காரத்தை யடைவதற்கு மிக்க தடை யுண்டாகுமென் றறிந்து—(எ-று.)

‡ பிரஹ்ம சாட்சாத்காரம்=பிரஹ்மமே நானென்னுந் திட அபரோக்ஷ ஞானம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்திஃ.

முற்றிற்று.

# விவேக ஷட்கம்.

அனித்திய பூதத் தேககா னன்று விந்தியத் தாங்கா னன்று,
கனித்தவாங் காரப் பிராணவர்க் கங்க னன்றுநற் புந்தியு மன்று.
தொனித்திடுந் தார மனைசெல்வங் களுக்குத் தாமாஞ் சாட்சியா
னென்றுந், தனித்துநித் தியமாய்ப் பிரத்தியகான் மாவாந் தற்பதப்
பொருளதாஞ் சிவோகம். 1

உற்பவன் விருத்த னன்றுநா னோர்கா லத்தினு நசிப்பவ
னன்று, வற்பமாந் தேக காரிய மான வனைவையெலா மகங்கரத் தல்
லாற். றற்பத வடிவாஞ் சின்மய மான வெனக்கிலை சகளநிஷ் கள
மா. யெப்புறத் தேனு மெல்லையற் றிருக்கு மின்பசிற் சொரூப
மாஞ் சிவோகம். 2

சத்திய ஞானா னந்தமாம் பிரமந் தனித்திடு மாயையிற் சனி
த்த, மெத்துமிவ் வுலகஞ் சேதனந் திடையே நசிக்குமச் சேதனை
விளம்பிற், றத்துசொப் பனமுஞ் சுழுத்தியி லசத்தாந் தன்மை
போற் சத்திலா திருக்குஞ், சத்சம் பூரணமாய் நித்திய மாகித் துலங்
கிய சொரூபமாஞ் சிவோகம். 3

பழுதைதன் னிடத்திற் பாம்புதோன் றுதல்போற் பரப்பிர
மத்திடை யதனிற். கழிதரு மஞ்ஞா னத்தினாற் சீவ னுதித்திடக்
கண்டவ னொருவன், பழுதையென் றறிந்தோர் சர்ப்பமோ கழிந்
போய்ப் பழுதையாய்க் கண்டது போல, வழுவிறே சிகனார் சிவனே
யன்றென் றறைந்திட வாகினேன் சிவோகம். 4

எமக்குமன் னியமா முலகமொன் றில்லை யெவ்வுல கங்களெம்
மிடத்திற், சமித்துவுற் பவமா மாதலான் மாயை வடிவமா தேகத்
னிற் சாற்ற, வமைத்தகண் ணாடி விம்பமா நிழல்போ லடங்கியெம்
மிடத்தினில் விளங்குந், தமத்துவ மில்லாச் சச்சிதா னந்த தற்பத
விமலமாஞ் சிவோகம். 5

சாக்கிர மதனி லிந்திரி யங்க டமக்குமேற் சாட்சியாஞ் சிவோ
கம், தேக்குசொப் பனத்தி லுலகரூ பமதாய்ச் செய்மனச் சாட்சி
யாஞ் சிவோகம், தாக்கிய சித்த நாசமாஞ் சுழுத்தி யவத்தையிற்
சாட்சியாஞ் சிவோகம், தீக்கமி றுரியா னந்தமாஞ் சர்வ நிர்மல
சாட்சியாஞ் சிவோகம். 6

மகாமகோ[illegible]